
Free Circulation Germany-England
மாசி.Feb.2020

# வெற்றிமணி

Vettimaniy
ESTD 1950
Successful Publishing 25 Years IN EUROPE
பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் B.F.A

Orientalische Textilien & Schmuck
29 வது ஆண்டு நிறைவில்
தொடர் மலிவு விற்பனை!
தரமான தங்க நகைகளுக்கு உத்தரவாதமிக்க நகை மாளிகை

Königswall 16 (Am HBF) 44137 Dortmund
Tel:0231 162377
Fax:0231 147836

## யாழ்ப்பாணப் பேரரசை ஆண்ட மன்னர்கள் சூழ்ந்த அரும் பொருட் காட்சியகம் அமைந்தது!

Dr.IN




இந்தக் காதல் இல்லை என்றால்...

Happy Valentines Day - Feb.14



அரும் பொருட்காட்சியகம்


S.K.SILKS GOLD PARAADISE
Dortmund நகரில்
காதலர் தினத்தை மகிழ்வுச் சோலையாகக் சேலைகள் ஆயிரம் நம் கைவசம் உண்டு
Happy Valentines Day - Feb.14
தரமும், மலிவும் தாராளமான, தேர்வுக்கும் என்றும் நாடுங்கள்
Adler str 33 - 44137 Dortmund
Mr.P.Sritharan.Proprietor Tel:0231 9501 647

U.K
செல்வராஜா
Selvaraja Gold House & Textiles


T.T.S.Brothers GmbH&Co.KG
RHEINISCHE STR 52
44137 DORTMUND
Tel:0231 819288
Germany
Page.11

Gopara Gnanam
RHEINISCHE STR 62
44137 DORTMUND
Tel: Mob:0171 330 6542
Tel:0231 53482206
Page.23

StaR-Impex
Kipper Str.03
44147 Dortmund/ Germany
Tel:0231 860 26 96
S.37

# யாழ்ப்பாணப் பேரரசை ஆண்ட மன்னர்கள் சூழ்ந்த அரும் பொருட் காட்சியகம் அமைந்தது!





தாய் நாட்டில் எது இல்லையோ இன்றும் சாதி மதம் இவற்றை மிகவும் அற்புதமாகப் பேணிக்காத்து வருகின்றோம்.வெளிநாடுகளில் வாழ்ந்தாலும் அவற்றின் வேர்களை தாய்மண்ணில் தேடித்தேடி எடுத்து காத்து வருகின்றோம்.
ஆனால் நம்மினத்தின் வரலாறு நாம் வாழ்ந்த வாழ்க்கை இவற்றை பாதுகாக்க எவரும் எண்ணாத இக்காலத்தில் கலாநிதி அறு.திருமுருகன் அவர்களின் அரும்பொருட்காட்சியகம் 25.01.2020 அன்று திறக்கப்பட்டு உள்ளது. 12 பரப்புக் காணியில் யாழ்ப்பாணத்தின் நாவற்குழியில் இக்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பேரரசை ஆண்ட மன்னாதி மன்னர்களின் உருவச்சிலைகள் புடைசூழ, யாழ்மண்ணில் அரும் பொருட் காட்சியகம் திறந்துவைக்கப்பட்டது!

திருவாசக அரண்மனை வளாகத்தில் கோயில் கொண்டுள்ள சிவதெட்சணாமூர்த்தி திருக்கோயிலில் வழிபாடுகள் இடம்பெற்றதைத் தொடர்ந்து ஆலயத்தில் புதிதாகப் பொருத்தப்பட்டுள்ள காண்டாமணி ஓங்கி ஒலிக்க, நாதஸ்வர, தவில் முழக்கங்களுடன் சைவத்தமிழ்ப் பண்பாட்டு பாரம்பரிய அடையாளங்களான கொடி, குடை, ஆலவட்டம் சகிதமாக சைவசமயப் பிரசாரகர்கள் அணிவகுத்து வர ஆன்மீகப் பெரியார்கள், கல்விமான்கள், சமூகப் பிரதிதிகள் உள்ளிட்ட விருந்தினர்கள் சிவபூமி யாழ்ப்பாணம் அரும்பொருட் காட்சியகம் நுழைவாயிலை நோக்கி அழைத்து வரப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து அரும்பொருட்காட்சியக வாயிலில் கோமாதா பூசையை சிவாச்சாரியார் நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து அரும்பொருட் காட்சியக வாயிலில் குடிகொண்டிருக்கும் விநாயகப் பெருமானுக்கு வழிபாடுகள் இடம்பெற்றது.

தொடர்ந்து சிவபூமி யாழ்ப்பாணம் அரும்பொருட் காட்சியகப் பெயர்ப் பலகையை இலங்கை மனித நேய அமைப்பின் தலைவரும், அகில இலங்கை இந்துமாமன்றத்தின் பொருளாளருமான திருமதி- அபிராமி கைலாசபிள்ளை திரைநீக்கம் செய்து வைத்தார். அதனைத் தொடர்ந்து அரும்பொருட் காட்சியகத்தின் பிரதான நுழைவாயிலை விருந்தினராகக் கலந்து கொண்ட நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைத்தார்.

கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்களின் இவ்வரிய முயற்சிக்குப்பின்னால் எந்த அரசியல் நோக்கமும் கிடையாது. இழந்தனவற்றை எண்ணி எண்ணி கலங்கும் வேளையில் இருப்பதையும் இழந்துவிடுவோமா என்ற தவிப்பு மட்டுமே அதற்கு மூலகாரணமாக அமைகிறது.

இந்த அற்புதமான அருங்காட்சியகக் கட்டிடவேலைகளை நேரில் சென்று பார்த்து அதிர்ந்துபோனேன். கடந்த சிலவருடங்களாக சோம்பேறிகளாகப் போனார்கள் நம்மக்கள் என்ற குறையை அங்கு வேலைசெய்யும் மக்களின் சுறுசுறுப்பைப்பார்த்தபோது ஆனந்தமாக இருந்தது.

அந்த சுறு சுறுப்புக்கு காரணம் தாம் செய்யும் பணியின் மகத்துவம் அவர்களுக்கு தெரிந்ததுதான் என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.

எங்களுடைய மன்னர்களை எமது குழந்தைகளுக்கு காட்சிப்படுத்தவும் அவர்கள் ஆட்சிக் காலங்களைக் காட்சிப்படுததுவதற்காகவும், தமிழர்களின் பண்பாட்டு அம்சங்களை பிரதிபலிப்பதற்காகவும் இவ் அருங்காட்சியகம் அமைந்துள்ளது.
இப்பாரிய பணியை சிவபூமி அறக்கட்டளை என்னும் அமைப்பே செய்கின்றது. தலைவாசலை எல்லாள மன்னனும், சங்கிலிய மன்னனும் அலங்கரிக் கின்றார்கள். உள்ளே யாழ்ப்பாண பேரரசை ஆண்ட 21 மன்னர்கள் உருவச்சிலைகள் காட்சியளிக்கின்றன. இச்சிலைகளை சிதம்பரத்தில் இருந்து வருகைதந்த சிற்பக்கலைஞர்கள் திரு புருஷோத்தமன் தலமையில் சிறப்பாகச் செய்து முடித்து உள்ளார்கள்.

அரும்பொருட் காட்சியக வளாகத்தின் இருமருங்கிலும் அமைக்கப்பட்டுள்ள அந்நியர் வருகைக்கு முன்னர் யாழ்ப்பாணத்தை ஆண்ட தமிழ்வேந்தர்களின் உருவச் சிலைகளுக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 22 பேராசிரியர்கள் தனித்தனியாக மலர்தூவி வணக்கம் செலுத்தி மேற்படி உருவச் சிலைகளை அங்குரார்ப்பணம் செய்து வைத்தனர்.
அதனைத் தொடர்ந்து விருந்தினர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பெருமளவானோர் அரும்பொருட் காட்சியகத்தை மிகுந்த ஆர்வத்துடன் பார்வையிட்டனர்.

தொடர்ந்து அரும்பொருட்காட்சியக முன்றலில் சிவபூமி அறக்கட்டளையின் தலைவரும், சிவபூமி யாழ்ப்பாணம் அரும்பொருட் காட்சியகத்தின் நிறுவுனருமான செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் தலைமையில் விருந்தினர் உரைகள் மற்றும் கௌரவிப்பு நிகழ்வுகள் ஆரம்பமாகி நடைபெற்றது.

மேற்படி விழாவில் வடமாகாண ஆளுநர் திருமதி- பி.எஸ். எம்.சாள்ஸ், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் நாகலிங்கம் வேதநாயகன், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, ஈஸ்வரபாதம் சரவணபவன், தர்மலிங்கம் சித்தார்த்தன், முன்னாள் வடமாகாண அவைத்தலைவர்

தொடர்ச்சி 24ம் பக்கம்








வெற்றிமணி

தமிழ் எங்கள் உயிருக்கு மேல்

ஓசை 282



ஆரம்பம்:1950

ஸ்தாபகர்

அமரர் மு.க.சுப்பிரமணியம்

(முன்னாள் அதிபர்: குரும்பசிட்டி பொன்.பரமானந்தர் வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்

“ஓவியக்கலைவேள்”

கலாநிதி

மு.க.சு.சிவகுமாரன் B.F.A.

Chief Editor:

Dr.M.K.S.Sivakumaran B.F.A.

Brinker Höhe.13
58507 Lüdenscheid
Germany
Tel: 02351/45 88 62
0163 199 2 333

e-mail: vettimaniy@hotmail.com


“வெற்றிமணிமொழி”

தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச்செல்கிறது


பத்திரிகை வடிவம்

சிவகுமாரன் சஞ்ஜீவன்.B .Eng (Hons)

Sanje:07824 61 83 83

Vettimaniy Ltd

Company No: 8876276


# அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக சஜித் அமைக்கும் இனவாதப் பாதை

- கொழும்பிலிருந்து ஆர். பாரதி -

2015 இல் இலங்கை அரசியலில் ஏற்பட்ட அதிரடியான மாற்றம் ராஜபக்ஷக்களின் அரசியல் எதிர்காலத்தைக் கேள்விக்குறியாக்கியிருந்தது. தேர்தலில் தோல் வியடைந்து, பதவியை இழந்து அலரி மாளிகையிலிருந்து அம்பாந்தோட்டைக்கு ஹெலியில் புறப்பட்ட போது தமது எதிர்கால அரசியல் குறித்து எந்த நம்பிக்கையும் மகிந்தவிடம் இருக்கவில்லை. போரில் தோல்வியடைந்த ஒரு மன்னரின் மனநிலையில்தான் அவர் அப்போதிருந்தார்.

மைத்திரியும், ரணிலும் இணைந்து ”நல்லாட்சி” என்ற பெயரில் அதிகாரத்தைப் பங்கு போட்டுக்கொண்டார்கள். ஐந்து வருட முடிவில் - ”இதுவும் கடந்து போகும்” என்ற நிலையில், இப்போது நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. இப்போது மைத்திரியினதும் ரணிலினதும் எதிர்காலம் கேள்விக்குறியாக இருக்கின்றது. ராஜபக்ஷக்களின் எதிர்காலம் பிரகாசமாகத் தெரிகின்றது. வரப்போகும் பொதுத் தேர்தலில் மூன்றில் இரண்டை அவர்கள் இலக்கு வைக்கின்றார்கள்.

2015 தோல்விக்குப் பின்னர் ராஜபக்ஷக்களால் உருவாக் கப்பட்ட பொதுஜன பெரமுன இலங்கை அரசியலில் அசைக்க முடியாத இடத்தை மிகவும் குறுகிய காலத்துக்குள் பெற்றுக்கொண்டுவிட்டது. உருவாக்கப்பட்டு இரண்டு வருடத்திலேயே அதிகாரத்தைக் கைப்பற்றும் அளவுக்கு அந்தக் கட்சி வளர்ந்தமைக்கு ராஜபக்ஷ என்ற அந்த “பிரான்ட்“ மட்டும்தான் காரணம். ராஜபக்ஷக்களின் அந்த மீளெழுச்சி மைத்திரி தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை மூன்றாவது இடத்துத்துக்குத் தள்ளியது. இப்போது, ராஜபக்ஷக்களுக்கு நிபந்தனை யற்ற ஆதரவை பகிரங்கமாக அறிவிக்கும் பலவீனமான நிலைக்கு சுதந்திரக் கட்சியைக் கொண்டு வந்திருக்கின்றார் மைத்திரி. பொதுத் தேர்தலின் பின் சபாநாயகர் பதவியையாவது ராஜபக்ஷக்கள் தருவார்களா எனக் காத்திருக்கிறார் அவர். ஐந்து வருடத்தில் ஏற்பட்ட மாற்றம் இது!

ரணிலின் நிலையோ அதனைவிட மோசம். ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் ஐ.தே.க.வின் உட்கட்சிப் பூசல் உச்சத்தையடைந்திருக்கின்றது. ரணிலுடனான கடுமை யான மோதலில் வெற்றிபெற்றே ஜனாதிபதி வேட்பாளராக சஜித்தினால் முடிந்தது. ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் கட்சித் தலைவர் யார் என்பதை இலக்காகக்கொண்டு இந்த மோதல் தொடர்கின்றது. ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்தமை சஜித்தின் நிலையைப் பலவீனப் படுத்தியது உண்மைதான். ஆனால், எதிர்க்கட்சித் தலைமைப் பதவியை அவர் போட்டியிட்டுப் பெற்றுக் கொண்டார். அடுத்ததாக வரப் போகும் பொதுத் தேர்தலில் ஐ.தே.க.வின் பிரதமர் வேட்பாளர் அவர்தான் என்பதும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றது.

ஆனால், இந்த இரண்டு வெற்றிகளும் அவருக்குப் போதுமானதல்ல. கட்சித் தலைமைப் பதவியையும் கைப்பற்றினால் மட்டுமே வெற்றிகரமாகப் பரப்புரைகளை முன்னெடுக்க முடியும் என்பது சஜித்துக்குத் தெரியும். கட்சியின் யாப்பைக் காரணம் காட்டி தலைமைப் பதவியை தன்னிடமே வைத்துக்கொள்ள ரணில்



முற்படுவதுதான் சஜித்தை மீண்டும் போராளியாக்கியது. ஐ.தே.க. பாராளுமன்றக் குழுவில் உள்ள 77 பேரில் சுமார் 55 பேர் சஜித்துக்கு ஆதரவாக உள்ளனர். சுமார் 20 பேர் வரையில்தான் ரணிலின் ஆதரவாளர்களாகவுள்ளனர். கட்சியின் பாராளுமன்றக் குழுவின் கூட்டம் கடந்த வாரம் ஸ்ரீகொத்தாவில் நடைபெற்ற போது, தலைமைப் பதவி சஜித்துக்குக் கொடுக்கப்பட வேண்டும் என அவரது ஆதரவாளர்கள் குழப்பம் விளைவித்தார்கள். ஒரு கட்டத்தில் குளிரூட்டியை நிறுத்துமாறு சொல்லிவிட்டு ரணில் எழுந்து வெளியே சென்றுவிட்டதாகச் சொல்லப் படுகின்றறது.

உத்தியோகப்பற்ற வாக்கெடுப்பில் கட்சியின் பாராளு மன்றப் பெரும்பான்மை தமக்குத்தான் இருக்கின்றது என்பதையும் சஜித்தின் ஆதரவாளர்கள் நிரூபித்தார்கள். இதனைவிட சிறுபான்மையினக் கட்சிகளின் ஆதரவும் இவர்களுக்குத்தான் இருக்கின்றது. இந்தப் பலத்தைப் பயன்படுத்தி ரணிலை வெளியேற்றுவதற்காக என்ன செய்ய முடியுமோ அவ்வளவையும் அவர்கள் செய்தார்கள்.

எது எப்படியிருந்தாலும் எதற்கும் அசைந்துகொடுப்பவராக ரணில் இருக்கவில்லை. தனது கட்சியின் பாராளுமன்றக் குழு தனக்கு ஆதரவாக இல்லை என்பதும், சிறுபான்மையினக் கட்சிகள் தம்மை ஆதரிக்கத் தயாராகவில்லை என்பதும் ரணிலுக்குத் தெரியும். கட்சித் தலைமை 2024 வரையில் ரணிலிடம்தான் இருக்கும் என்பதை கட்சியின் யாப்பு உறுதி செய்கின்றது. பாராளு மன்றக் குழுவின் பெரும்பான்மையைப் பயன்படுத்தி இந்த நிலையை மாற்றிவிட முடியாது. கட்சியின் விஷேட மாநாடு ஒன்றின் மூலம் செயற்குழுதான் தலைமைப் பதவியில் 2024 வரை ரணில் இருப்பார் என்பதை ஏற்றுக்கொண்டிருந்தது. இதில் மாற்றததைச் செய்ய வேண்டுமானால், கட்சியின் செயற்குழு அது குறித்த தீர்மானத்தை நிறைவேற்றி, கட்சியின் வருடாந்த அல்லது விஷேட மாநாட்டில் அதற்கான அங்கீகாரம் வழங்கப்பட வேண்டும். கட்சியின் செயற்குழுவை தனது ஆதரவாளர் களால் நிரப்பியிருக்கின்றார் ரணில். ஆக, அதில் ரணிலுக்கு எதிரான தீர்மானம் ஒன்று கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்படுவதற்கு வாய்ப்பில்லை. இந்த நிலையில் சஜித் எப்படித்தான் காய்களை நகர்த்தினாலும், கட்சித் தலைமையைக் கைப்பற்றுவதற்கான வாய்ப்பு அவருக்கு தற்போதைய நிலையில் இல்லை.

தொடர்ச்சி 10ம் பக்கம்







# கரைந்து போகின்றோம்!

**பொலிகையூர் ரேகா** B.com., M.com.
MPhil. M.B.A. M.Phil

இந்த உலகம்
புனிதங்களுக்கு நடுவில்
பல அழுக்குகளைச்
சுமந்தவாறே உண்மையின்
திசை தெரியாமல்
பயணப்பட்டுக்கொண்டிருக்கிறது!
காதலின் புனிதமும் -பல
அழுக்குகளுக்கிடையில்
வேதனைக் கதைகளாகிப்
பரிதவிக்கையில்
நம் காதல் மட்டும்
எப்போதும் போல -நம்
காதலின் கீதத்தைப்
பாடிக்கொண்டே அதியுயர்
களிப்பில் பூரித்துப்போகிறது!

சாதி பார்க்கும் மனிதர்களின்
சகதிகளையெல்லாம்- அது
சாக்கடையாக்கிவிட்டுச்
சந்தேகத்திற்கிடமின்றிச்
சிரித்துக்கொள்கின்றது!
பணம் பற்றியே பேசும்
பாவிகளின் போதிப்பை-அது
மறந்தும் இரட்சிப்பதாயில்லை!


மதம் பற்றியே பேசிப் பேசி
மதம் பிடித்துப் போனவர்களின்
மானம்கெட்ட கதைகளை
மறந்துவிட்டுத் தனக்கான
அன்பின் மதத்தில் அது
இறைவனைத் தரிசித்துக்கொண்டே
இணையிலாப் பேரன்போடு
இறக்கை விரிக்கின்றது!

பண்பாட்டின் அடையாளமாய்
பாசத்தின் இருப்பிடமாய்
அன்பின் ஊற்றாய்



ஆறுதலின் ஆழமாய்
வாதங்களுக்கும்
பிரதிவாதங்களுக்குமிடையில்
வாய்மை காத்தே பெரும்
வரமெனப் பயணிக்கிறது!

புரிதல்களினன்பில்
பிரிதல்களைக்கூடக்
கொண்டாடித் தீர்த்தபடி
காதலை வளர்க்கையில்
இந்தப் பூமி நம்மை
என்ன செய்துவிட முடியுமென்ற
காதலின் இறுமாப்பில்
காதலில் க(ல)ரைந்து போகின்றோம்!






டாக்டர் கே.முருகானந்தன்.எழுத்தாளர்.திக்குவல கமால்.நூலகவியலாளர் சுகந்தினி சதாசிவமூர்த்தி.கலாசூரி திவ்யா சுஜேன்

# தாய்மணில் வெற்றிமணியின் காலாண்டு

## வெற்றிச் சுவடுகள் கையளிப்பு!

தாயகத்தில் அன்றும் இன்றும் வெற்றிமணியில் தங்கள் சிறந்த படைப்புக்களை எழுதிவரும் எழுத்தாளர்களுக்கும், நூலகவியலாளர்களுக்கும் வெற்றிமணியின் காலாண்டு வெற்றிச்சுவடுகள் ஆவணம் கையளிக்கப்பட்டது. அப்போது வெற்றிமணி ஆசிரியர் மு.க.சு.சிவகுமாரன் அவர்களுடன் படைப்பாளிகள்.டாக்டர் கே.முருகானந்தன்.( அன்று தாயகத்தில் வெளிவந்த வெற்றிமணியில் 1969 களில் கவிதைகள் எழுதியுள்ளார்,இன்று அவரது மருத்துவக்கட்டுரைகள் வெற்றிமணியில் வெளிவந்தவண்ணம் உள்ளன.) பிரபல எழுத்தாளர் திக்குவல கமால். ( 1960 களில் இருந்து வெற்றிமணியில் கவிதை கட்டுரை பல எழுதியுள்ளார்.தற்போதும் பல நூல்களை எழுதிவருகின்றார். தமிழ்மொழியில் தலைசிறந்த படைப்புகளை சிங்களமொழியில் மொழிபெயர்த்து சிறப்பித்தும் வருகின்றார். திருமதி.சுகந்திசதாசிவமூர்த்தி (பிரதமநூலகர், மாநகரசபை,யாழ்ப்பாணம்) அவர்களிடம் நூலகத்திற்கு என வெற்றிச்சுவடுகள் ஆவணம் கையளிக்கப்பட்டது. தினக்குரல் ஞாயிறு வார இதழ் ஆசிரியர் திரு.பாரதி.(வெற்றிமணிக்கு மாதம் மாதம் அரசியல் நிலவரத்தை யதார்த்தமாக எழுதிவரும் சிறந்த எழுத்தாளர்) தாய்மண்ணில் பிரபல இளம் நடன ஆசிரியை அபிநயஷேத்திரா அதிபர் கலாசூரி திவ்யா சுஜேன் அவர்களுடன்.



தினக்குரல் ஞாயிறு வார
இதழ் ஆசிரியர் திரு.பாரதி.இராசநாயகம்








Bochum
Lucky Fly Reisebüro
Luckyfly
2020 Summer
Frankfurt - Colombo
Ab; 599€
46Kg
Offnungszeiten
Mo-Fr.10.00-19.30
Sa.10.00-15.00
Mo-Sa Mobile: 24.00
www.Lucky-fly.de
e.mail:siva 0108 @hotmail.com
Graphic Design Vettimaniy Ltd
Mob:No: 0179 1484 892
Essener Str.26
44793 Bochum
Tel: 0234-2399032
Fax 0234-79457171

# தாயகத்தில் சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் 95 ஆவது அகவையை முன்னிட்டு அறக்கொடை நிகழ்வும், சிவத்தமிழ் விருதும் 2020







பேராசிரியர் சோமசுந்தரம் சந்திரசேகரம்

கலாபூஷணம் சோ.பத்மநாதன் அவர்கள்







முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளரும்
மூத்த எழுத்தாளருமான
திருமதி கோகிலா மகேந்திரன் அவர்கள்

வெற்றிமணி பத்திரிகை, சிவத்தமிழ் சஞ்சிகையின்
ஆசிரியரும் ஓவியருமான
கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் B.F.A அவர்கள்

மூத்த நாதஸ்வர வித்துவான்
கலாபூஷணம்
வி.கே.பஞ்சமூர்த்தி அவர்கள்

தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி ஆலயப் பெருந்தலைவர் சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் 95 ஆவது பிறந்தநாள் அறக்கொடைவிழா 07.01.2020 அன்று செவ்வாய்க்கிழமை ஆலய அன்னபூரணி மண்டபத்தில் சிறப்புற அமைந்தது.

சிவத்தமிழ்ச்செல்வி நினைவாலய வழிபாடுகளைத் தொடர்ந்து சிவத்தமிழ்ச் செல்வியின் உருவச்சிலை முன்பாக பிரார்த்தனை இடம்பெற்றது. இவ்விழாவிற்கு யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத்தூதரகத்தின் தூதுவர் ச.பாலச்சந்திரன் கலந்து சிறப்பித்தார். இந்நிகழ்விற்கு சிவபூமி ஆலயத் தலைவரும், சிவபூமி அறக்கட்டளையின் தலைவருமான கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமை வகித்தார்.

அன்னையின் பிறந்தநாளை முன்னிட்டு யாழ்.போதனா மருத்துவமனையின் சிகிச்சைப் பிரிவிற்கு ஒரு இலட்சம் ரூபாயும், தெல்லிப்பழை புற்றுநோய் மருத்துவமனைக்கு 50 ஆயிரம் ரூபாயும், மன்னார் மாவட்டப் பாடசாலைகளில் க.பொ.த. சாதாரணதரம் 2020 இல் கற்கும் உயர்தகைமையுடைய உதவி தேவைப்படும் மாணவர்களுக்கு சிவத்தமிழ்ச்செல்வி கல்வி நிதியத்தால் இரண்டு இலட்சம் ரூபாயும் என நிதியுதவிகள் வழங்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து கல்வி, தமிழ் இலக்கியம், கலை மற்றும் பன்முகப்பணிகள் ஆற்றிவரும் ஐவர் சிவத்தமிழ் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். கல்விப்பணிக்காக கொழும்பு பல்கலைக்கழக கல்வியியற்பீட முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் சோமசுந்தரம் சந்திரசேகரம் அவர்களும், தமிழ் இலக்கியத்திற்காக பலாலி ஆசிரிய கலாசாலையின் முன்னாள் அதிபரான கலாபூஷணம் சோ.பத்மநாதன் அவர்களும், பன்முகப்பணிக்காக மூத்த எழுத்தாளரும் முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளருமான திருமதி கோகிலா மகேந்திரன் அவர்களும், கலை, இலக்கியப் பணிக்காக வெற்றிமணி பத்திரிகை, சிவத்தமிழ் சஞ்சிகையின் ஆசிரியரும் ஓவியருமான கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் B.F.A அவர்களும், இசைப்பணிக்காக மூத்த நாதஸ்வர வித்துவான் கலாபூஷணம் வி.கே.பஞ்சமூர்த்தி அவர்களும், சிவத்தமிழ் வருது வழங்கி கௌரவிக்கபட்டனர். துர்க்காபுரம் மகளிர் இல்லச்சிறார்கள், ஆலய நிர்வாகிகள், பல துறைகளைச் சார்ந்த பலரும் கலந்து இந்நிகழ்ச்சியைச் சிறப்பித்தனர்.






# ஈழத்தமிழ் பாடகி மாயாவுக்கு பிரித்தானிய அரச குடும்பத்தின் உயர் விருது

ஈழத்தமிழ் பாடகி மாயாவுக்கு பிரித்தானிய அரச குடும்பத்தின் உயர் விருது

சர்வதேச ரீதியில் அதிகம் கவனிக்கப்படும் லண்டன் வாழ் ஈழத்தமிழ் பாடகியான எம்.ஐ.ஏ. எனும் மாதங்கி மாயா அருள்பிரகாசத்துக்கு (MIA) பிரித்தானிய சாம்ராஜ்யத்தின் அங்கத்தவருக்கான எம்.பி.ஈ (Member of the Order of the British Empire -MBE) விருது வழங்கப்பட்டுள்ளது. சர்வதேசத்தில் இசைத்துறைக்கு ஆற்றிய பங்களிப்புக்காகவே அவருக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது. லண்டனிலுள்ள பக்கிங்ஹாம் அரண்மனையில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற வைபவத்தில் பாடகி எம்.ஐ.ஏவுக்கு பிரிட்டனின் முடிக்குரிய இளவரசர் வில்லியம் இந்த விருதை வழங்கி கௌரவித்தார்.

இலங்கையிலிருந்து பிரிட்டனுக்குப் புலம்பெயர்ந்த பின் தையல் தொழிலில் ஈடுபட்ட தனது தாயார், இவ்விருதுக்கான பதக்கத்தையும் தயாரித்தார் எனவும் இதனால், இவ்விருதுடன் தனக்கு ஒரு வரலாற்றுத் தொடர்பு உள்ளது எனவும் 44 வயதான பாடகி எம்.ஐ.ஏ மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.
மாதங்கியின் தந்தை அருள்பிரகாசம் (அருளர்) ஈழப்போராட்டத்தின் முன்னோடிகளில் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. ஈரோஸ் இயக்கத்தின் ஸ்தாபகர்களில் ஒருவரான அருளர், லங்கா ராணி எனும் நூலையும் எழுதினார். கடந்த மாதம் அருளர் காலமாகியிருந்தார்.

இலங்கையிலிருந்து பிரிட்டனுக்குச் சென்ற அருள்பிரகாசம், கலா தம்பதியின் மகளாக 1975 ஜூலை 18 ஆம் திகதி லண்டனில் பிறந்தவர் மாதாங்கி. அவர் 6 மாத குழந்தையாக இருந்தபோது அவரின் பெற்றோர் இலங்கைக்குத் திரும்பினர்.

மாதங்கி யாழ்ப்பாணத்தில் தனது ஆரம்பக் கல்வியை கற்றார். யுத்தம் தீவிரமடைந்த நிலையில் 1986 ஆம் ஆண்டு மாதங்கிக்கு 11 வயதாக இருந்தபோது அவரின் குடும்பம் மீண்டும் லண்டனுக்குத் திரும்பியது.

2000 ஆம் ஆண்டு இசைத்துறையில் கவனம் செலுத்த ஆரம்பித்தார் மாதங்கி. தற்போது மேற்குலக இசைத்துறையில் மிகப் பிரபலமான பாடகிகளில் ஒருவராக மாதங்கி மாயா அருள்பிரகாசம் (44) விளங்குகிறார்.

2004 ஆம் ஆண்டு சண்ஷவர், காலாங் ஆகிய பாடல்கள் மூலம ரசிகர்களின் கவனத்தை ஈர்த்த மாதங்கி, 2005 ஆம் ஆண்டு அருளர் எனும் பெயரில் தனது முதல் பாடல் அல்பத்தை வெளியிட்டார். 2007 ஆம் ஆண்டு தாயார் கலாவின் பெயரில் கலா எனும் 2 ஆவது பாடல் அல்பத்தை வெளியிட்டார். கலா அல்பத்தில் இம்பெற்ற பேப்பர்பிளேன்ஸ் எனும் பாடல் எம்.ஐ.ஏவுக்கு பிரிட்டன், கனடா, அமெரிக்கா உட்பட பெரும் புகழை ஈட்டிக் கொடுத்தது.

மேற்கத்தேய இசைத்துறையில் முன்னிலை கலைஞர்களில் ஒருவரானார் எம்.ஐ.ஏ. அமெரிக்க தேசிய கால்பந்தாட்ட லீக் இறுதிப் போட்டியின் இடைவேளையில் இசை நிகழ்ச்சி நடத்துவது பல கலைஞர்களின் கனவாகும். 2012 ஆம் ஆண்டு நடைபெற்ற சுப்பர்பொல் இசை நிகழ்ச்சியில் பாடகிகள் மடோனா, நிக்கி மினாஜ் ஆகியோருடன் எம்.ஐ.ஏ. எனும் மாதங்கியும் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது. இச்செய்தி jaffna vision இணையத்தில் வெளியாகி இருந்தமையை நன்றியுடன் அறியத்தருகின்றோம்.

**வெற்றிமணி**
**இணையத்தளத்திலும் வாசிக்கலாம்**


## மணமகள் தேவை

இந்து மதத்தைச் சேர்ந்த யேர்மனியில் பிறந்து யேர்மனியில் படித்து (machinenbau) என்ஜினியராக கடமையாற்றும் 29 வயது ஆணுக்கு மணமகள் யேர்மனியில் **North Rhine-Westphalia** இல் தேவை.

மணமகளின் பெற்றோர் மட்டும்
தொடர்பு கொள்ளவும்
0175 850 1489





# விவாகரத்து பெறுவதில் வயதானவர்களும் இன்று முன்னணியில்!






வ.சிவராசா

## வெள்ளைக்காரன் குறட்டைவிட்டா விவாகரத்து! நாம் இன்று நாடகம் பார்த்தால் விவாகரத்து!

மானிட வாழ்வு என்பது ஒரு அற்புதமான வாழ்வாகும். மற்றைய உயிரினங்களைவிட மேலான இந்த மனித வாழ்வு என்பது ஒருமுறைதான். இந்த வாழ்வைச் சரியான முறையில் நல்லபடியாக வாழ்ந்து முடிப்பது ஒவ்வொருவர் கையிலும்தான் உண்டு. இந்த வாழ்வை அவரவர் வாழும் சூழல், அரசியல், கல்வி, சமூக, பொருளாதார காரணிகளால் வேறுபடுவதால் சிலரின் வாழ்வு உயர்ச்சிபெறும் சிலரின் வாழ்வு தாழ்வுபெறும். இதுதான் மானிடவாழ்வின் காலச்சக்கரத்தின் சுழற்சியாகும்.

மனிதர்கள் சிலரிடம் கோடி..கோடியாகப் பணம் சொத்து கொட்டிக்கிடக்கும் ஆனால் அவர்கள் கடும் நோயாளிகளாகப் படுக்கையில் கிடப்பார்கள். சிலரிடம் கோடி..கோடியாகக் கிடந்தாலும் பிள்ளைகள் இல்லாமல் அந்தப் பணம் சொத்துக்களை என்ன செய்வதென்று தெரியாமல் இருப்பார்கள். இன்னும் சிலர் அனைத்தும் அளவுக்குமீறி இருந்தாலும் பிள்ளைகளை விட்டுப்பிரிந்து வயதான காலத்தில் தனிமையில் வாடுவார்கள். இன்னும்..இன்னும் சிலர் தம்மை மாடாக வருத்தி உழைத்து பிள்ளைகளுக்குக் அள்ளிக் கொட்டிக் குவித்துவிட்டு இறுதியில் பிச்சைக்காரர்களாக வாழ்ந்து மடிவார்கள். இன்னும் சிலரிடம் அளவுக்கு அதிகமாகப் பணம் இருந்தாலும் பிள்ளைகளுக்கு உரிய காலத்தில் திருமணம் முடிக்காமல் வேதனையில் புரள்வார்கள். இப்படி எத்தனை ரகமான மனிதர்களை நாம் அன்றாடம் காண்கிறோம்.

இங்கே..இருந்தும் இல்லாமல் என்ன விடையத்தை நோக்கலாம் என்று பார்ப்போம். அதாவது புலம்பெயர் சூழலில் நம்மவர்களிடையே பல துன்ப, துயர சம்பவங்கள் பல நடைபெற்றுக்கொண்டுதான் இருக்கையில் ஒரு விடையத்தை நோக்குவோம். அதாவது இன்றைய சூழலில் இளம் வயதினரிடையேதான் அதிகமாக மணமுறிவு (விவாகரத்து) ஏற்படுகின்றது என்று நோக்கினால், அது இன்று வயதானவர்களிடமும் தொன்றிக்கொண்டுள்ளதை நாம் காண்கிறோம். கோவில் ஒன்றில் ஒரு வயதான அம்மாவிடம் கதைத்தபொழுது இந்த விவாகரத்து எவ்வளவு சுலபமாக அரங்கேறி வருகின்றது என்பதை உங்களோடு பகிர்ந்து கொள்ளலாம் என நினைக்கிறேன்.

அதாவது அந்த அம்மா கூறினார் தமக்கு நான்கு பிள்ளைகள். நாலுபேரும் ஐரோப்பாவில் குடும்பமாக வாழ்கிறார்கள். ஆனால் தானும் வயதான கணவனும் விவாகரத்துப் பெற்று தனித்தனியே வாழ்கிறார்களாம். கணவன்-மனைவி என்ற பெயர் ஆனால் நாம் இருவரும் இணைந்து வாழவில்லை. இதுதான் இருந்தும் இல்லாமலும்…காரணம் என்னவென்று பார்த்தால் பணம்தான் முன்னுக்கு நிற்கின்றது. அடுத்தது இந்த நாடுகள் கொடுக்கும் சலுகைகள், அடுத்தது இந்தச் சின்னத்திரை நாடகங்கள். ஏன் அம்மா என்று நான் தொடர்ந்து கேட்டபோது..தனக்கும் தனது கணவனுக்கும் தரும் பணத்தை பிள்ளைகள் ஆளுக்குஆள் சுரண்டி எடுக்கிறார்களாம். இதனாலை தனக்கும் புருசனுக்கும் வாக்குவாதமாம்.

அடுத்தது வயதான காலத்தில் அரசாங்கம் தமக்குத்தரும் சலுகைகளை பிள்ளைகளும் வெட்டி எடுப்பதுடன் பேரப்பிள்ளைகளை பாதுகாப்பவர் களாகவும் வீட்டுவேலைக் காரர்களாகவும் இந்த வயதான காலத்தில் இருக்க வேண்டியதால் பிரச்சனை வந்ததாம். அடுத்தது நான் தம்பி ஒரு நாளைக்கு பத்துப்பன்னிரண்டு தொடர் நாடகம் பார்ப்பேன் இவற்றைப் பார்க்காவிட்டால் எனக்குத் தலை வெடித்துவிடும். இதனால் தொடர் நாடகங்களை சாமம் சாமமாகப் பார்ப்பதால் கணவனுக்கும் தனக்கும் பெரும் பிரச்சனையால் இருவரும் பிரிந்து தனித்தனியாகத்தான் என்று சிம்பிளாகச் சொல்லி முடித்தார்.

தான் மாறி மாறிப் பிள்ளைகளோடு கோயில், கொண்டாட்டம் என காரில் போய்வருகிறேன். அந்தாள் ஒன்றுக்கும் போகாமல் தனிவீட்டில கிடக்குது.

தனக்கு அரசாங்கம் சாப்பாட்டுக்குக் காசு, வீட்டுவாடகை கட்டுது. வைத்தியச்செலவு, போக்குவரத்துச் செலவு, உடுப்புச் செலவு எல்லாம் இலவசம். மேலாக வருடத்தில இரண்டு மூன்றுதடவை சுற்றுலா அழைத்துச் செல்கிறார்கள் நான் ஏன் பிள்ளைகளுக்குக் கரச்சல் கொடுப்பான் என்று தனிய வாழ்கிறார். ஆனால் என்னால அப்படி வாழமுடியாது தம்பி என்றார்.

பாருங்கள் இந்த நாடுகள் கொடுக்கும் பணம் மற்றும் வசதிகளால் பும்பெயர் நாடுகளில் எத்தனை குடும்பங்கள் சிதறிக்கிடக்கின்றன. அதுவும் வயதான குடும்பங்கள்கூட இறுதிக் காலங்களில் ஒன்று சேர்ந்து வாழமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். பெயருக்குக் கணவனும் மனைவியும் என்றுதான் கூறுவார்கள் ஆனால் நிஜ வாழ்வில் அவர்கள் இருதுருவங்களாய் அதாவது மனைவி உயிருடன் இருந்தும் இல்லாமலும்…அல்லது கணவன் உயிருடன் இருந்தும் இல்லாமலும் வாழும் நிலை ஏன்? வந்தது…

இன்றைய புலம்பெயர் சூழலை நோக்கும் போது விவாகரத்து (மணமுறிவு) என்பது வெகு சுலபமாகவே நடந்து முடிகின்றது. எடுத்தேன்..கவுட்டேன் என அவசர முடிவெடுத்துப் பலர் தமது அற்புத வாழ்வை அநியாயமாக்குகிறார்கள். இந்த நாடுகளின் சட்ட திட்டங்களும் பணம் மற்றும் கார், பங்களா, சொத்து ஆசைகளும் ஒன்று சேர்ந்து முடிவெடுப்பதால் இந்த விபரீதங்கள் அரங்கேறுவது அதிகரித்து வருவதாகவே காணப்படுகின்றது.

இதுவல்ல வாழ்க்கை. கணவன்-மனைவி இருவரும் விட்டுக்கொடுப்பு, புரிந்துணர்வு, சமபங்கு, உரிமை, சலுகை, அன்பு, பாசம், பக்தி நிறைந்ததே வாழ்க்கையாகும். கணவன் அல்லது மனைவி உயிருடன் இருந்தும்… இல்லாமல்…வாழ்வதும் ஒரு வாழ்க்கையா?...இன்னும் எவ்வளவு காலம்தான் இப்பூமியில் வாழ்வோம்?.. வாழும்வரை நல்லபடி..மற்றவர்களுக்குப் பிரயோசனமாக.. முன்மாதிரியாக வாழ்ந்து முடிப்போம்!...






# இலங்கையில் முதல் எய்ட்ஸ் நோயாளி யாழ்ப்பாணத்தில் தான் இனங்காணப்பட்டார்?

எய்ட்ஸ்: தினமும் இரண்டு பேர் இலங்கையில் மரணிக்கிறார்களாம் எயிட்ஸ் நோயால்.

அதுமட்டுமல்ல தினமும் சுமார் 12 புதிய HIV பெற்றுள்ளவர்கள் கண்டு பிடிக்கப்படுகிறார்களாம்.

கடந்த ஒன்பது மாதங்களில் 3400 புதிய நோயாளிகள் கண்டு பிடிக்கப்பட்டு இருக்கிறார்கள்.

இவை (6.11.2019) தினக்குரல் பத்திரிகை யில் வந்த செய்தி.

சுலபமாக தொற்றாமல் தடுக்கப்படக் கூடிய இந்த நோயின் தாக்கம் இந்த சின்னஞ் சிறிய நாட்டில் இவ்வாறு அதிகமாக இருப்பது நிச்சயம் கவலைப்பட வேண்டிய நிலை தான்.
இலங்கையில் முதல் எய்ட்ஸ் நோயாளி யாழ்ப்பாணத்தில் தான் இனங்காணப்பட்டார் 1987 ல் என நினைக்கிறேன்.

இதன் பரவலைத் தடுக்க மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் என்னால் எழுதப்பட்ட எயிடஸ் என்ற நூல் 1989 ல் வெளியானது. தமிழில் வெளியான எய்ட்ஸ் பற்றிய முதல் நூல் இதுதான். இலங்கையில் இரண்டு பதிப்புகளும், தமிழகத்தில் NCBH வெளியீடாக பல பதிப்புகளும் வெளிவந்தன.

இருந்தும் என்ன என்ற கவலைதான் வருகிறது.

இந் நோய் பரவுவதற்கு மிக முக்கியமான காரணம் பாதுகாப்பற்ற பாலுறவுதான் என்பது இன்று எல்லோருக்குமே தெரிந்த விடயம் தான்.

ஆனாலும் என்ன? கணவன் மனைவிக்கு அப்பாலான வெளி பாலுறவுதான். தாரளமாக நடைபெறுகிறது,



அதுவும் பாதுகாப்பற்ற முறையில்.
அன்று ஆரவாரமாக பேசப்பட்ட இந்த நோய் இப்போது கவனத்தை ஈர்ப்பதேயில்லை.

**டாக்டர்.கே.முருகானந்தன்.**




# இந்தக் காதல் இல்லை என்றால்...

இந்தக் காதல் இல்லை என்றால்...
காதல் இருப்பதனால் மட்டுமே இவ்வுலகம் அழகாக உள்ளது.
காதல் இல்லாமல் எவருமே இல்லை. மனிதன் என்றாலே காதலிப்பவர்களாக மட்டுமே இருப்பார்கள்.

ஆண் பெண் காதல், தாய் குழந்தை காதல், வேலை மீது உள்ள காதல், கல்வி மீது உள்ள காதல், கணவன் மனைவி மீது உள்ள காதல் அனைத்தும் அழகானவை.

காதல் என்பது புனிதமானது. அதனை சிலர் தவறாகப் பயன்படுத்துவது கவலைக்குரிய விடயம்.
ஆண் பெண் காதல் உணர்வு மனதுக்கு சந்தோசத்தைத் தருகிறது. ஒருவர் மீது ஒருவர் செலுத்தும் அன்பைப் பற்றி கூறுவதுக்கு வார்த்தைகளே இல்லை.
உண்மைக் காதல் சேராது விட்டால் சிலர் தற்கொலை கூட செய்து கொள்வார்கள்.
கவலைக்குரிய விடயம். பிரிவு வந்து விட்டால் மன அழுத்தத்துக்கு உள்ளாகி விடுவார்கள்.
காதல் இருந்தும் கடினம் இல்லாவிடினும் கடினம்.

காதலி சிரிப்பது அழகு காதலன் திட்டுவதும் அழகு.
மொத்தத்தில் காதல் என்றாலே அழகு அல்லவா.


றஜினா தருமராஜா

தாய் இல்லாமல் நாம் எவருமே இல்லை.
ஆகவே இவ்வன்பானது மிகவும் தூய்மையானது.

தன் குழந்தையிடம் தாய் என்பவர் காட்டும் அன்புக்கு எல்லையே இல்லை. நாம் செய்கின்ற வேலை மீது அன்பு மற்றும் விருப்பமில்லை என்றால் என்ன நடக்கும்? வாழ்க்கையே வெறுப்பாக இருக்கும். ஆகவே நீங்கள் காதலிக்கும் வேலையைச் செய்யுங்கள்.

கல்வியும் அதே போலவே.
கணவன் மனைவி காதல் மிகவும் தூய்மயானது புனிதமானது அழகானது.
இவர்களின் அன்புக்கு எல்லையே இல்லை.
ஆகவே காதல் இல்லை இவ்வுலகம் இல்லை



Tel: 0231- 108 763 61, 0231 584 407 63 Fax: 0231 108 763 62 Mobile:0163- 871 43 69 Rheinische str-72 44137 Dortmund



நெடுந்தீவு முகிலனின் 13




**காதலர் தின கவிதைகள்**

உன்னை ஒருபோதும் விட்டு விலக மாட்டேன் என்றாய் நம்பினேன்.
உனக்காகத்தான் நான் படைக்கப்பட்டிருக்கிறேன் என்றாய் நம்பினேன்.

உன் அளவுக்கு யாராலும் என்னை நேசிக்க முடியாது என்றாய் நம்பினேன்.
நான் என்றென்றும் உனக்கானவன் என்றாய் நம்பினேன்.
நீ இல்லாமல் என்னால் இருக்க முடியாது என்றாய் நம்பினேன்.
சீக்கிரம் இருவரும் சேர்ந்து வாழ்வோம் என்றாய் நம்பினேன்.
நான் உன்னை பிரிந்தால் உயிரோடு இருக்க மாட்டேன் என்றாய் நம்பினேன்.
எல்லாவற்றையும் நம்பி விட்ட பழக்க தோஷத்தில் உனக்கு பொய் சொல்ல தெரியாது என்றும் நம்பி விட்டேன்.

வேண்டாம் என்று விட்டெறிந்து விலகிப்போனவர்கள் பறவையை போன்றவர்கள்.
உண்மையான அன்பை மறக்க முடியாமல் நெஞ்சோடு வைத்திருப்பவர்கள் மரத்திற்கு ஒப்பானவர்கள்.

அவர்களிடம் இறக்கை இருந்தது பறந்து விட்டார்கள்.
உங்களிடம் வேர்கள் இருக்கிறது அதனால் கொஞ்சம் கூட நகர முடியாமல் தவிக்கிறார்கள்.
பறவை எவ்வளவுதான் உயரப் பறந்தாலும் இளைப்பாறுவதற்கு கீழே தான் வந்தாக வேண்டும்.
ஏமாந்து விட்டோம் என்ற கவலையில் இருப்பதால் இன்னொரு பறவை உங்களோடு கூடுகட்டி வாழ்வதற்குஅனுமதிக்க தவறி விடாதீர்கள்.

இறக்கை இருப்பதால் எல்லா பறவைகளும் பறந்து போய் விடாது.
அது இருப்பதால்தான் சிலதாவது உங்களைத் தேடி வருகின்றது.
நீங்கள் காய்ந்து உடைந்து சருகாகி விழும் வரை
உங்களோடு சேர்ந்து வாழக்கூடிய ஒரு குருவியை தேடுங்கள்.
ஆனால் எதற்கும் இடம் கொடுக்காமல் கடைசிவரை தனி மரமாகவே சாய்ந்து விடாதீர்கள்.
ஒன்று மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.
உங்களை விலகிப் போன பறவைகள் உங்களை பிரிந்து வாழ்கிறார்கள் என்று மட்டுமே நினைக்காதீர்கள்.
இன்னொரு மரத்தோடு சேர்ந்து வாழ்வதற்கு தான் உங்களை பிரிந்தார்கள் என்பதையும் மறந்து விடாதீர்கள்.

**அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக......**

03ம் பக்கத் தொடர்ச்சி




இந்த யதார்த்தமான கள நிலையை உணர்ந்துகொண்டே, சஜித்தின் ஆதரவாளர்கள், தலைமையைக் கைப்பற்றுவதற்கான முயற்சியில் அர்த்தமிருக்கப்போவதில்லை என்பதால், புதிய மெகா கூட்டணியை உருவாக்கும் முயற்சியில் இறங்கினார்கள். மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்குக் கூட்டணி, ஜாதிக ஹெல உறுமய ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்பவற்றுடன் இணைந்து “ஐக்கிய தேசிய முன்னணி“ யைக் கட்டியமைப்பதற்கான முயற்சிகளை அவர்கள் முன்னெடுத்தார்கள். ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாகவே இவ்வாறான ஒரு முன்னணியை அமைப்பதற்கான பேச்சுக்கள் இடம்பெற்றன. ஆனால், ரணில் - சஜித் மோதல் அதற்குத் தடையாக அமைந்தது.

இரு தரப்பிலும் பலங்களும் உள்ளன. பலவீனங்களும் உள்ளன. தனியாகப் பிரிந்து செல்வதற்கு சஜித் அஞ்சுவது தெரிகின்றது. ராஜபக்ஷக்கள் போல தன்னால் ஒரு கட்சியை ஆரம்பித்து அதிகாரத்தைக் கைப்பற்றக் கூடியதாக இருக்குமா என்பதில் அவருக்குச் சந்தேகங்கள் உள்ளன. இந்த இடத்தில்தான் சமாதான முயற்சிகளுக்காக கரு ஜயசூரிய களத்தில் இறங்கினார். அவர் முன்னெடுத்த முயற்சிகளையடுத்து கட்சி மோதல்கள் தற்காலிகமாக முடிவுக்கு வந்துள்ளன. ஐ.தே.க.வின் தலைமையை தற்காலிகமாக கரு பொறுப்பெடுப்பார். மெகா கூட்டணியின் தலைவராக சஜித் இருப்பார். இந்த ஏற்பாட்டுக்கு இரு தரப்பினரும் இணங்கியதையடுத்து கட்சியில் ”தற்காலிக போர் நிறுத்தம்” நடைமுறைக்கு வந்திருக்கின்றது.

ஆனால், பாராளுமன்றத் தேர்தலை இலக்காகக் கொண்டு வியூகம் வகுக்கும் சஜித், புதிய பாதை ஒன்றை அதற்காக அமைத்துக்கொள்ள முற்பட்டிருக்கின்றார். ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளின்படி சிங்கள - பௌத்த மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்டுள்ள பகுதிகளில் ஐ.தே.க.வின் வாக்கு வங்கி பெருமளவுக்கு அரித்துச் செல்லப்பட்டிருக்கின்றது. அதனால், அந்தப் பகுதிகளில் தன்னுடைய செல்வாக்கை அதிகரிப்பதற்கான திட்டம் ஒன்றை அவர் வகுத்துள்ளார்.

இதற்காக ஒவ்வொரு போயா தினங்களிலும் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் “தம்ம தர்சன“ ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதேபோல புதிய அரசியல் கூட்டணியை அமைப்பதிலும் சில உபாயங்களை அவர் கையாள்கிறார். ரிசாத் பதியுதீனின் கட்சியை தமது கூட்டணியில் இணைப்பதை அவர் தவிர்க்கிறார். உயிர்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் றிசாத்துக்கு சிங்களவர்கள் மத்தியில் காணப்படும் எதிர்ப்புணர்வுதான் இதற்குக் காரணம். இதனால், றிசாத் பொதுத் தேர்தலில் தனியாகவே களமிறங்குவார்.
பௌத்தர்களிடம் செல்வாக்கைக் கொண்டுள்ள சம்பிக்க கூட்டணியின் பிரதித் தலைவராக நியமிக்கப்படவுள்ளார். சரத் பொன்சேகாவுக்கும் புதிய பதவி ஒன்று காத்திருக்கின்றது. சஜித்தின் இந்த யோசனைகள் இன்னும் இறுதிசெய்யப்படவில்லை. ஆனால், இதுதான் அவர் செல்லப்போகும் புதிய இனவாதப் பாதை. இந்தப் பாதை அவரை வெற்றிக்குக் கொண்டு செல்லுமா?



# நாற்றமடிக்கும் வியர்வையும் “டியோடரன்ஸ்“ பாவனையும்





**Dr IN**

**டாக்டர் எம்.கே.முருகானந்தன்**
MBBS (Cey),DFM (Col),FCGP (Col)
**குடும்பவைத்தியர்**

டியோடரன்ஸ் Deodorants என்பது இப்பொழுது, சீப்புப் பவுடர் போலாகிவிட்டது. வீட்டுப் பாவனைப் பொருள் போல எங்கும் கிடைக்கின்றன. யாருக்குத்தான் மற்றவர்கள் முன்னால் தங்களது உடல் நாற்றத்துடன் போய் நிற்க மனதிருக்கும்.

“அரசியின் கூந்தல் நறுமணம் இயற்கையானதா செயற்கையானதா” ஆராய்ந்து பார்த்த கதைகள் நினைவிற்கு வருகிறதா? அந்தக் காலத்தில் அரசிகள் முடிக்கு மட்டுமே தேடிய வாசனைத் திரவியங்கள் இன்று தொழிலாளர்களின் அக்குளுக்கும் அவசியமாகிவிட்டன. சந்தை வாய்ப்புகளும் விற்பனையும் அமோகமாக இருக்கின்றன.

அக்குள் மணத்திற்கும் பொதுவான உடல் மணத்திற்கு காரணம் வியர்வையாகும். ஆனால் இயற்கையாக வியர்வை மணப்பதில்லை. வியர்வையில் நீரும் சில உப்புக்களும் மட்டுமே இருக்கின்றன. இவற்றில் எந்த மணமும் கிடையாது. ஆனால் சுரக்கும் அந்த வியர்வையில் பக்றீரியா கிருமிகள் பெருகும்போதே மணம் ஏற்படுகிறது.

“எல்லோருக்குமே வியர்க்கிறது, எல்லோரது உடலிலும் கிருமிகள் இருக்கலாம் ஆனால் ஏன் எல்லோரது வியர்வையும் மணப்பதில்லை” என்ற எண்ணம் உங்கள் மனதில் எழுந்திருக்கும். வியர்வையில் மணம் ஏற்படுவதானது எமது மரபணு சார்ந்தது. அதைக் கொடுப்பற்குக் காரணமாக இருப்பது ABCC11 என்ற மரபணுவாகும். ஆனால் சிலரில் இந்த மரபணுவானது சிறிய மாற்றங்களுடன் செயலற்று இருப்பதுண்டு. அவ்வாறான மரபணு மாற்றமுற்றவர்களின் வியர்வை மணப்பதில்லை. மிகுதியான பெரும்பாலானவர்களுக்கு மணக்கவே செய்யும்.

University of Bristol இல் ஒரு ஆய்வானது 6,495 பெண்களிடையே செய்யப்பட்டது. இந்த ஆய்வின் பிரகாரம் மிகச் சிறிய எண்ணிக்கை -யானோருக்கு மட்டும் (2% -117out of 6,495) அவ்வாறான மாற்றமுற்ற மரபணு இருந்தமை கண்டறியப்பட்டது.

அதன் அர்த்தம் அவர்களது அக்குள் வியர்வையில் நாற்றம் இல்லை என்பதாகும். ஆய்வின் ஆச்சரியமான அம்சங்கள் ,னித்தான். இந்த ஆய்விற்கு உட்பட்டவர்களில் 117 பேரது வியர்வை மட்டுமே நாற்றமற்றது. அதை விகிதாசார ரீதியில் நோக்கினால் ஒவ்வொரு 50 பேருக்கு ஒருவரது வியர்வையே உடல் நாற்றம் அற்றதாகும்.

நாற்றமான வியர்வை சுரப்பவர்களில் 5 சதவிகிதமானவர்கள் டியோடரன்ஸ் எதையும் உபயோகிப்பதில்லை. வியர்வையில் நாற்றம் அற்றவர்களில் சுமார் 20 சதவிகிதமானவர்களும் டியோடரன்ஸ் எதையும் உபயோகிப்பதில்லை. அதற்கான அவசியம் அவர்களுக்கு இல்லாததால் அது ஓரளவு எதிர்பார்க்கக் கூடியதே. ஆனால் வியர்வை நாற்றமற்றவர்களில் சுமார் 78 சதவிகித மானவர்களும் டியோடரன்ஸ் உபயோகிப்பதாக ஆய்வு கூறியது.

இதை இலகுவான மொழியில் சொன்னால் எப்படி இருக்கும். சமூகத்தில் பெரும்பாலானவர்களின் வியர்வையில் நாற்றமிருக்கிறது. இருந்தபோதும் அவர்களில் சிலர் தமது அக்குள் வியர்வை நாற்றத்தை மறைக்க வாசனைத் திரவியங்களை உபயோகிப்பதில்லை. ஆனால் அக்குள் வியர்வை நாற்றம் அற்றவர்களில் மிகக் குறைந்தவர்களே தமக்கு நாற்றமில்லை என்பதை உணர்ந்து டியோடரன்ஸ் உபயோகிப்பதில்லை. ஆனால் மிகப் பெரும்பான்னையான வியர்வை நாற்றமற்றவர்கள் மந்தை ஆடுகளைப் போல மற்றவர்களை பின்பற்றுகிறார்கள்.

அதாவது எந்தத் தேவையுமற்று டியோடரன்ஸ்சை உபயோகிக்கிறார்கள் என்பதுதான். இவர்கள் இப்படியாக தேவையற்றபோதும் டியோடரன்ஸ் உபயோகிப்பதற்குக் காரணம் என்ன? சமூகப் பழக்க வழக்கங்கள்தான். சமூகத்தில் பலரும் நாகரிகம் எனக் கருதுவதை தாமும் மறுகேள்வியின்றிப் பின்பற்றுகிறார்கள் என நினைக்கிறேன். மற்றொரு காரணம் ஊடகங்களின் விளம்பர உத்திகளைப் புரிந்து கொள்ளாமல் கடைப்பிடிப்பதாகவும் இருக்கலாம். இது மேலை நாட்டில் செய்யப்பட்ட (University of Bristol) ஆய்வாகும். “வடஆசிய நாட்டவர்கள் பெரும்பாலும் டியோடரன்ஸ் உபயோகிப்பதில்லை. அதற்கான தேவை அவர்களுக்கு இல்லை“ என அந்த ஆய்வுக்குழுவின் தலைவரான Professor IanDay கூறினார். தெற்காசிய நாட்டவர்களான எங்களைப் பற்றி அந்த ஆய்வு எதையும் தனியாக எடுத்துரைக்கவில்லை.



Before After

தொடர்ச்சி 12 ம் பக்கம்...



11 ம் பக்கத் தொடர்ச்சி





# நாற்றமடிக்கும் வியர்வையும் .....

இந்த ஆய்வின்போது வியர்வையுடன் தொடர்பற்ற மற்றொரு விடயமும் தெரிய வந்தது. அது காதுக்குடுமி பற்றியது. பொதுவாகக் காதுக்குடுமி என்பது பசை போன்ற தன்மையானதாகும். ஆனால் மிகச்சிலரில் அது எப்பொழுதும் காய்ந்து இறுகி "கற்குடுமி" யாகத் தொல்லை கொடுக்கும்.

அவர்களுக்கும் நாற்றமற்ற வியர்வையுள்ளவரின் அதே மாற்றமுற்ற ABCC11 மரபணு இருக்கிறதாம். ஆம் இயற்கை விசித்திரமானதுதான். கற்குடுமி என்ற தொல்லை ஒருசிலருக்கு கொடுத்துவிட்டு அதனை நட்ட ஈடு கொடுப்பதுபோல நாற்றமற்ற வியர்வையைக் கொடுத்திருக்கிறது.பெரும்பாலானவர்களது உடலில் மணம் இருந்தாலும் எல்லோரது வியர்வை யும் ஒரே மணத்தைக் கொடுப்பதில்லை. கைவிரல் அடையாளம் போலத் தனித்துவமானது. சில மணங்கள் மற்றவர்கள் ஆகர்சப்படுவதற்கு காரணமாக இருக்கிறது. ஆனால் சிலரது மணங்கள் மற்றவர்களை கிட்ட நெருங்க விடாது விலக வைத்துவிடுகின்றன. அவ்வாறு கடுமையான உடல் நாற்றம் உண்டாவதை bromhidrosis என மருத்துவத்தில் கூறுவர். உடல் மணத்தைக் குறைக்க வழிகள் உடல் மணமானது ஒவ்வொருவருக்கும் தனித்துவமான போதும் அதன் வீச்சை நாம் சில நடைமுறைகள் மூலமாகச் செய்யலாம். எடையைக் குறைப்பது முக்கியமானது.

அதீத எடையானது உடலின் செயற்பாட்டிற்கு அதிக சிரமத்தைக் கொடுக் கிறது. சிரமப்படும் உடல் அதீதமாக வியர்க்கிறது. அதனால் உடல் மணம் மோசமாகும்.
எனவே எடையைக் குறைப்பதானது உடல் ஆரோக்கியத்திற்கு முக்கியமான துடன் மணத்தையும் குறைக்கிறது.
தினமும் குளியுங்கள். முக்கியமாக வேலை முடிந்த பின்னர் குளிப்பது மிகவும் அவசியம். கிருமி கொல்லி சோப் வகைகளை உபயோகிக்க வேண்டியதில்லை. வழமையான சோப் போதுமானது.

Soap free wash மேலும் நல்லது ஆடைகளை இயற்கையான துணியிலா னதாக தேர்ந்தெடுங்கள். செயற்கை இழையத்திலான ஆடைகள் ஈரலிப்பை உறிஞ்ச முடியாதலால் வியர்வை தேங்கி நிற்கும் அதிக மணத்தைக் கொடுக்கலாம். தினமும் ஆடைகளை மாற்றுங்கள்.

உணவைப் பொறுத்த வரையில் ஆடு மாடு போன்றவற்றின் இறைச்சிகள் (Red meat) அதிக மணத்தைக் கொடுப்பதாக ஆய்வுகள் சொல்கின்றன. அதே போல இஞ்சி, மிளகு, மீன், போன்றவையும் உடல் மணத்தை ஏற்படுத்துவதாக நம்பப்படுகிறது. மதுபானமும் அவ்வாறே.
நன்றி தமிழர் தகவல்

## 6 ம் ஆண்டு நினைவு அஞ்சலி

### அமரர் தியாகராஜா தனபாலசிங்கம்



அன்னையின் மடியில்
24.04.1961


இறைவனடியில்
01.03.2014

திதி **24.02.2020** திங்கள்கிழமை

இலங்கை எழுவைதீவை
பிறப்பிடமாகவும் யேர்மனி எசன் நகரை
வதிவிடமாகவும் கொண்ட அமரர்
தியாகராஜா தனபாலசிங்கம் அவர்களின்
6 ம் ஆண்டு நினைவு அஞ்சலி
ஆண்டுகள் ஆறு உதிர்ந்தாலும் அப்பா
உங்கள் அன்பு முகம் என்றும்
நெஞ்சினிலே நீங்கள் என் அருகில்
இருந்த ஒவ்வொரு நொடியும்
இன்னொருதடவை மனதார
உணரவேண்டும்!அப்பா என்று நான்
மறுபடியும் அழைக்க மறுஜென்மம்
ஒன்று மறவாது மலரவேண்டும். ஆயிரம்
சொந்தங்கள் அருகிருந்தும் அப்பா
உங்கள் அன்பு நிறைந்த
அரவணைப்புக்கு ஈடாகுமா?ஆண்டுகள்
ஆறு கடந்தும் ஒரு நிலைக்கு வராமல்
மன்றாடி நிற்கும் மகத்தான அம்மாவுடன்
மனம் நெகிழ்ந்து வாழும்
அன்பு மகள்

ஓம் சாந்தி

என்றும் உங்கள் நினைவாக
மனைவி பாரதா, மகள் கார்த்தனா (இலங்கை- மாவிட்டபுரம்)



டாக்டர் கே.முருகானந்தன் அவர்களுடன் வெற்றிமணி ஆசிரியர் மு.க.சு.சிவகுமாரன்

வெற்றிமணி பத்திரிகையில் இடம் பெறும் Dr IN பகுதியில்
மாதம்தோறும் நோய்களுக்கு மருந்தாக வரும் கட்டுரைகளை எழுதும்
எங்கள் தலைசிறந்த மருத்துவர் டாக்டர் கே.முருகானந்தன்
அவர்களுடன் வெற்றமணி ஆசிரியர்
தாயகத்தில் பருத்தித்துறையில் அவரது மருத்துவநிலையத்தில் சந்தித்து
பத்திரிகையை கையளித்தபோது அன்று இலங்கையில் வெளிவந்த
வெற்றிமணியில் தான் எழுதியதை நினைவுகூர்ந்து மகிழ்ந்தார்.அவரது
இனியபேச்சும் சுறுசுறுப்பும் நோய்தீர்க்கும் மருந்தாக இருந்ததை நேரில்
காண முடிந்தது. டாக்டரின் கட்டுரைகளை மாதம் மாதம் வெற்றிமணிக்கு
தந்து உதவும் தமிழர்தகவல்-(கனடா) சஞ்சிகையை இந்நேரத்தில்
நன்றியுடன் நினைவுகூருகின்றோம்.




# உடலோடு உள்முகப்பயணம்

## 10 வாயுக்களும், 96 தத்துவங்களும்



மனிதனுக்கு உடலின் சக்திக்காக உணவும் உயிரின் சக்திக்காக பிராணனும் தேவைப்படுகின்றது. உடலை அசையாது பேணி உணவினைத்தவிர்த்து பிராணன் மூலம் உயிரினை உடலில் ஒடுக்கமுடியும்.
இதுவே ஜீவசமாதியுமாகும். ஆனால் சாதாரண உடல் அசைவிற்கு உணவு அவசியம். உணவினை உடலினுள் கையாண்டு உயிரின் நிலைத்திருப்பை உறுதி செய்ய தசவாயுக்கள் முக்கியமானவை.
பிராண வாயுவினுள்ளேயே ஏனைய வாயுக்கள் ஒடுக்க நிலையில் இருக்கின்றன. ஒவ்வொரு உயிரினுள்ளும் அவற்றின் செயற்பாடுகளுக்கு ஏற்றாற்போல் பிராணன் ஏனைய வாயுக்களாக ஒடுங்கி விரியும்.

மனித உடலில் பிராணன் சுவாசம் மூலமாக உள் வந்து மூலாதாரம் வரை சென்று பயணித்து வெளிச்சுவாசமாக வெளியேறும். இதன் இயக்கம் உயிரின் நிலைத்திருப்பை உறுதி செய்வதனால் இது உயிர்க்காற்று என அழைக்கப்படும். பிராணன் உடலின் மேல்பாகம் நோக்கியபடி இயங்கும். சாதாரண மனிதரில் சுவாசத்தின் ஆரம்ப மற்றும் முடிவுப்புள்ளியாக நாசி காணப்படுகின்றது. சிவயோகி ஒருவருடைய சுவாசத்தானம் அப்புள்ளியிலிருந்து மேலும் நான்கு அங்குலம் நீளுமென திருமூலர் விளக்குகின்றார். அந்நிலைக்கு தன்னை முழுமையாக மாற்றும் யோகி உடலியக்கங்களின் அடிப்படை தன்மையிலிருந்து தன்னை விடுவித்து உயிர் அனுபவிக்கும் பேரானந்தத்தை பருகுவான். பிராணனுடன் எமது சக்தியை நிலைப்படுத்த அச்சக்தி தானாகவே மேலெழும்பும்.

பிராண வாயுவிற்கு அடுத்தாக அபானவாயு மனிதஉடலில் பிரதானமானது. பிராணன் இந்த அபானவாயுவை உந்தித்தானத்தில் வைத்து இயக்கி கீழ்நோக்கி இயங்க வழிவகுக்கும். அபானவாயு சக்தியை தொப்புளில் இருந்து கீழ்நோக்கி இயங்க வழிசெய்யும். உடல் சீராக இயங்க சக்தியானது கீழ் நோக்கி பயணிக்கவேண்டும். உடலில் உள்ள உயிருக்கு பாதகமான உயிர் நிலைத்திருப்பை உறுதிசெய்யாத பதார்த்தங்கள் உடற்கழிவுகளாக கருதப்படும். அவ்வாறான உணவுக்கழிவுகள், திரவக்கழிவுகள், வாயுக்கழிவுகளை உந்தி உறுப்புகளினூடாக வெளியேற்றுவதிலும் உயிர்சக்திக் கூறுகளினை ஜனன உறுப்புகளினூடாக வெளியேற்றுவதிலும் அபான வாயு பெரும்பங்காற்றுகின்றது. ஆகவே இந்த வாயு கீழ் நோக்கியே சக்தியை கடத்திக்கொண்டு இயங்குவதால் மணிபூரக சக்கரத்தின் சக்தியின் பெரும்பகுதியை மூலாதாரம் மற்றும் அதனையடுத்துள்ள சுவாதிஷ்டானத்தை நோக்கி ஈர்த்து அச்சக்கரங்களிற்குரிய செயற்பாடுகளினை திறம்பட ஊக்குவிக்கின்றது. கீழ் நோக்கிய இந்த வலிமையான அசைவுதான் மூலாதாரத்தில் உள்ள குண்டலினி சக்தியை மேலெழவிடாது உறங்கு நிலையில் வைத்திருக்கின்றது.
சிவயோகிகள் இந்த குண்டலினி சக்தியை மேலேற்ற மூன்றுவகையான உந்தும் முத்திரைகளையும் பலமான ஒரு பிராணாயாம முறையினையும் கைக்கொண்டிருக்கின்றனர். மேலும் பல்வேறு மன உடல் பக்குவநிலைகளுக்கேற்ப தானாகவே சிலருக்கு இந்நிலை சித்திக்கின்றது.



கரிணி

அபான வாயுவினை அடுத்து மிக முக்கியமான வாயு சமானன். இந்த வாயு உடலின் வெப்பத்துடன் மிக நெருக்கமான தொடர்பை பேணுகின்றது.
உண்மையிலேயே மனித பரிணாம வேகத்தை கூட்டுவதில் இன்றியமையதாக அமைந்த காரணிகளில் உடல் வெப்பமும் ஒன்றாகும். மனிதஉடலில் உயர்சிக்கல் தன்மை தொழிற்பாடு வேகம் என்பன வெப்பம் மூலமே சாத்தியமாகியிருக்கின்றது.
உந்தித்தானத்தில் இருந்து இயக்க மடையும் சமான வாயுவானது உட்கொள்ளப்பட்ட உணவினை செரித்து உடல் பூராகவும் அதன் சக்தியை பரவச்செய்கின்றது.
இதனால் இவ்வாயுவை நிரவுகாற்று என அழைப்பர்.
உடலில் ஜடாக்கினியை உண்டுபன்னி உடலின் இயக்கங்களை உயிர்ப்பூட்டும்.
விலங்கு நிலையிலிருந்து மனித நிலைக்கும் தெய்வ நிலைக்கும் உயர்த்தும் அறிவு நிலையை தூண்டக்கூடிய வெப்பப்பமாற்றங்களான ஜடாக்கினி சித்தாக்கினி, ஜீவாக்னி போன்றவற்றை உயிர்சக்தியினுள் உண்டுபண்ணு கின்றது. அறிவுநிலை வளர்ச்சியினை மனிதனுள் உண்டாக்கிய விதம் அற்புதமானது.
மேலும் சமான வாயுவை உடலில் இயக்கும் வித்தையை உணர்ந்த யோகியால் தனது உடல் வெப்பத்தை எந்த நிபந்தனையும் இல்லாது கூட்டிக்குறைக்க முடியும். உலகின் அதி வெப்பமான மற்றும் கடும் குளிரான இடங்களிலும் அவனால் உயிர்வாழ முடியும். எவ்வித மேலங்கியும் இல்லாது இமயமலைச்சாரலில் யோகநிலையில் வீற்றிருக்கும் யோகிகளே இதற்குச் சான்று. மேலும் சமான வாயுவை கைக்கொண்ட யோகி அவ்வெப்பத்தினால் பிறரின் நோய்களை தீர்க்கும் ஆற்றலினையும் பெற்றுக்கொள்கின்றான்.

சமான வாயுவை அடுத்து முக்கியமான வாயு உதானன். இந்த வாயு உந்தியில் இயக்கமடைந்து மேல்நோக்கி இயங்கி குரல்நாண்களினை இயக்கி அதிரச்செய்து ஒலியை உருவாக்குகின்றது. உயிரினங்கள் ஒன்றை ஒன்று ஒலியின் மூலம் அழகாக தொடர்பு கொள்வதற்கு காரணம் உதானவாயுவாகும். ஒலி தொடர்பான அனைத்து செயல்களுக்கும் உதானனே அடிப்படையாகும். ஒலியானது பஞ்சபூத சக்தியான காற்றுடன் தொடர்புபடும். காற்றில்லையேல் ஒலியில்லை. காற்றானது ஆகாச சக்தியுடன் மிக ஆழமான தொடர்பைப் பேணுகின்றது. ஆகவே தொப்புளில் இருந்து மேல்நோக்கி எழும் உதானன் குரல்வளையில் ஏற்படுத்தும் அதிர்வுகளால் எமது உடல் மற்றும் சூழ உள்ள காற்றுத்தத்துவம் மற்றும் ஆகாச தத்து வங்களினை வசம் செய்யும் கலையினையும் சித்தர்கள் 51 அட்சர எழுத்துக்களாக பகுத்துள்ளதுடன் அவற்றை எவ்வாறு செயற்படுத்தி வீடுபேறு அடையவேண்டும் என்கின்ற ஞான வழியினையும் காட்டியுள்ளனர். பொதுவாக நாம் பிரணவமந்திரத்தை சித்த முறைப்படி உச்சரிக்கும் போதே மூலாதாரத்திலிருந்து தலையுச்சியை நோக்கி சக்தி மேலெழுவதை அனுபவ ரீதியாக உணரமுடியும். உதான வாயுவை ஒலிக்காற்று என அழைப்பர்.

அடுத்து வியான வாயு. உடலில் உள்ள நரம்பியக்கம் அனைத்தையும் கட்டுப்படுத்தும் வாயுவாகும். தலையின் பிடரிப்பகுதியில் மற்றும் தோள்பட்டை பகுதியில் இருந்து உடல் பூராக பரவி செயற்படும். இதனை தொழிற்காற்றென அழைப்பர். நரம்பு மண்டலங்களினால் ஏற்படுத்தப்படும் அனைத்து செயல்களும் வியான வாயுவை அடிப்படையாக கொண்டு செயல்படும். வியான வாயுவை சில குறிப்பிட்ட முத்திரைகள் மூலம் கட்டுப் படுத்த முடியும்.

அதன்மூலம் உடலின் சில குறிப்பிட்ட பகுதிகளினை எமது இச்சைக் கேற்றாற்போல் இயக்கமுடியும். உடலில் 108 வர்ம தானங்களும் இதன் ஆளுகைக்கு உட்படுவதால். வியான வாயுவை செயற்படுத்தும் முறையை அறியும் யோகியால் பிறரின் வர்ம நிலையை இயக்கும் ரகசியத்தையும் அறியமுடியும்.

தொடர்ச்சி 14 பக்கம்



13 ம் பக்கத் தொடர்ச்சி

# உடலோடு உள்முகப்பயணம்

## 10 வாயுக்களும், 96 தத்துவங்களும்

எனவே தசவாயுக்களில் நாம் பார்த்த முதல் 5 வாயுக்களான பிராணன், அபானன், சமானன், உதானன், வியானன் என்பவை பிரதான வாயுக்களாகும். ஏனைய ஐந்தும் உப வாயுக்களாகும். அவையாவன நாகன், கூர்மன், தேவதத்தன், கிரிதரன், தனஞ்செயன் என்பனவாகும்.

நாகன் வாயுவானது உடலில் உள்ள மற்றும் உடலினுள் புகும் நச்சுக்களை வெளியேற்றி உடலினை பாதுகாப்பதில் ஈடுபடுகின்றது. இருமல்,வாந்தி, தும்மல் போன்ற செயல்நிலைகளினை ஊக்குவித்து உடலினை பாதுகாத்து உடலின் நீர்ப்பீடண சக்தியை ( நோய் எதிர்ப்பு சத்தி) மாறாது பேணும். தும்மற்காற்று என அழைக்கப்படும்

கூர்மன் வாயுவானது பிரதானமாக கண்ணில் பார்வை சக்தியை ஏற்படுத்துகின்றது. இந்த வாயு மன இயக்கத்தையும் பார்வையையும் ஒன்றிணைக்கின்றது. வேகமான உணர்திறன் கூடிய வாயு இதுவாகும். விழிக்காற்று என அழைக்கப்படும்.

தேவதத்தன் வாயுவானது இமைக்காற்று என அழைக்கப்படும். இது இமைகளை அசைத்து கண்களினை ஈரலிப்பாகவும் தூசிகள் புகாது பாதுகாப்பாகவும் வைத்திருக்கும். உடலின் சக்தி குறைகையில் இமைகளை மூடி உறக்க நிலைக்கு கொண்டுசெல்லும். கிரிதரன் வாயுவானது கொட்டாவிக்காற்று என அறியப்படுகின்றது. உடலின் இரத்தத்தில் பிராண வாயு குறைந்து வெப்பம் மிகும் போது கொட்டாவி மூலம் மூச்சை மாற்றி சீரான சுவாசத்தை ஏற்படுத்த உடலை உறக்க நிலைக்கு கொண்டு சென்று உடலில் பிராண சக்தியை அதிகரிக்கச்செய்யும்.

தனஞ்செயன் வாயுவானது வீங்கற்காற்று என அழைக்கப்படும். ஒருவர் இறந்த பின்னர் எல்லாவாயுக்களும் வெளியேறிய பின்னர் இந்த வாயு செயற்பட தொடங்கும். உடலினை உப்பி வெடித்து சிதைவடையச்செய்து வெளியேறும். உயிருள்ள உடலில் இவ்வாயு செயற்படாது. ஆனாலும் சில யோகிகள் ஜீவசமாதி அடைந்தபின்னும் உடல் சிதைவடையாது இருப்பதற்காக உயிருடன் இருக்கும் போதே மூலாதாரத்தில் இருக்கும் இந்த வாயுவை உச்சி சக்கரமாகிய பிரம்மரந்திரத்திற்கு ஏற்றிவிடுவார்கள்.

எனவே தசவாயுக்களின் இயக்கமானது 96 தத்துவங்களினையும் பாதிக்கும் ஆகவே 96 தத்துவங்களினை பற்றிய புரிதல் அவசியமானதாகும்.ஆன்ம தத்துவங்கள் -24, உடலின் வாசல்கள் -9, தாதுக்கள் -7, மண்டலங்கள் -3, குணங்கள் -3, மலங்கள் -3, வியாதிகள் -3, விகாரங்கள் -8, ஆதாரங்கள் -6, வாயுக்கள் -10, நாடிகள் -10, அவத்தைகள் -5, ஐவுடம்புகள் -5 .இவை பற்றிய விரிவான தெளிவே படைப்பின் கூற்றை பிரித்தறிய உதவும்.இப்படியான அடிப்படை விதிகளைக் கொண்டு வடிவமைக்கப்பட்டதே மனிதன் எனும் மகத்தான சக்தி. இப்படி சேர்ந்து உருவானதை பிரித்துப் பிரித்துப் பார்க்கும் போது ஒரு புள்ளியில் ஒடுங்கி பிரபஞ்ச மூலக்கூறாகவே தெரியும்.

## யேர்மனி தமிழர் அரங்கம் கலைக்கூடத்தில் பொங்கல் விழா








15.01.2020 புதன் கிழமை பொங்கல் நாள் அன்று டொட்முண்டில் உள்ள தமிழர் அரங்கம் கலைக்கூடம் பொங்கல் விழா மற்றும் தமிழர் புத்தாண்டை „தமிழர் திருநாள்“ விழாவாக கொண்டாடியது. மாதச்சாயம் அற்ற வகையில் அனைத்து மதத்தவர்களும் இணைந்து இந்த பொங்கல் விழாவை தொடர்ச்சியாக தமிழர் விழாவாக கொண்டாடி வருவது குறிப்பிடத்தக்கது. இஸ்லாமியர், கிறிஸ்தவர், சைவர் இவர்களோடு பகுத்தறிவுச் சிந்தனையாளர்களும் இணைந்து பொங்குவது இந்த விழாவின் சிறப்பான விடயம் ஆகும். பால் பொங்கி வர சிறுவர்களும், பெரியவர்களும் மத்தாப்பூ, வாண வேடிக்கைகளில் ஈடுபட்டார்கள். பின்னர் பொங்கல் பரிமாறப்பட்டு பறை இசையுடன் கலைநிகழ்வுகளும் ஆரம்பமாகின. வேலை நாள் என்ற போதும் 200மேற்பட்டவர்கள் நிகழ்வில் கலந்து சிறப்பித்தார்கள்.

## டோட்முண்ட் பொங்கல் விழா-18.01.2020




தொடர்ச்சி 28 ம் பக்கம்...


மங்கல இசைக் குழு

நாதஸ்வர இன்னிசைச்செல்வன்
N.K.Raguraman





உங்கள் அனைத்து மங்கள வைபவங்களையும்
நாதஸ்வர தவில் கானமழையில் நனைத்திட தவில் மேதை
அளவையூர் குமரகுரு அவர்களின் புதல்வன்
நாதஸ்வர இன்னிசைச்செல்வன்
N.K.Raguraman
Dresdener Str.6
50126 Bergheim
Germany
0049 2271 670236
Tel: 0049 157 89 15 95 71



எமது 3 வது ஆண்டு
நிறைவை முன்னிட்டு
நடைபெற்ற மலிவு
விற்பனையை
சிறப்பித்த உங்கள்
அனைவருக்கும்
எங்கள் மனம்
நிறைந்த நன்றி

K.K.L Textilien Schmuck Haushaltsware


சுப வைபவங்கள்
அனைத்திற்கும்
இந்தியாவில் இருந்து
இறக்குமதி செய்யப்பட்ட
மல்லிகைப் பூமாலை,
கல்யாண மாலை
இங்கு கிடைக்கும்.

சாறி ,சாறி பிளவுஸ் பஞ்சாபி
சேட் குர்தா சிறுவர்களுக்கான
ஆடைகள் அனைத்தும்
மலிவு விலையில் கிடைக்கும்

https://m.Facebook.com
kkl.textillenschmuck

Rheinische str.56 44137 Dortmund Tel: 0231 96 98 6610

# கூவில் கள்ளும் கீரிமலைக் குளிப்பும்“



ஆசி. கந்தராஜா. அவுஸ்திரேலியா

'அம்மா என்னுடன் சிட்னியில் வாழந்த காலங்களில் தைப்பெங்கலன்று, சிட்னி கோவிலொன்றில் எழுந்தருளி இருக்கும் வைரவருக்கு வடை மாலை சாத்துவார். இதற்கான நினைவூட்டல், தைப்பொங்கலுக்கு ஒருவாரத்துக்கு முன்னரே துவங்கிவிடும்.
கனவில் தன்னை நாய் துரத்துவதாகவும், வைரவர் நாய் வாகனத்தில் திரி சூலத்துடன் வந்து, நெஞ்சாங்கூட்டை அமத்துவதாகவும் இதனால் இரவில் மூச்சுவிடக் கஷ்டப் படுவதாகவும் கதைகளை அவிழ்த்து விடுவிடுவார்.

அம்மாவின் இந்த அதிதீவிர வைரவர் பக்திக்குக் காரணம் உண்டு!
எங்கள் குடும்பத்துக்கென அம்மாவுக்கு சீதனமாக வந்த பனங்கூடலில், கொண்டல் மரத்தின் கீழ் ஒரு வைரவர் இருந்தார். வெள்ளிக் கிழமைகளில் மாத்திரம் அவர் நாங்கள் ஏற்றும் வெளிச்சத்தில் இருப்பார். மற்றும்படி இருட்டில்தான் அவரது சீவியம்.

தைப் பொங்கலன்று மாத்திரம் வைரவருக்கு பொங்கல் பொங்கி முக்கனிகள் சகிதம் படையல் வைப்போம். இப்படி மூன்று நான்கு குடும்பங்களுக்கு ஒரு வைரவர் வீதம், பல வைரவர்கள், பனைகளுக்கு நடுவே இருந்து யாழ் குடாநாட்டில் அருள் பாலிப்பர்கள்.
வைரவர் வழிபாடு பற்றி என்னுடைய ஐயா சொன்ன சங்கதி ஒன்று இங்கு பதிவுக்குரியது. 'போத்துக்கேயர் இலங்கைக்குப் படையெடுத்து இலங்கையை ஆண்டபோது மக்களை வலோற்காரமாக மதம் மாற்றியதுடன் வழிபாட்டு தலங்களையும் அழித்தார்களாம். அப்போது யாழ்ப்பாண மக்கள், பயத்தில் தங்கள் பின் வளவுகளுக்குள் அல்லது பனங்கூடலுக்குள் வைரவர் சூலங்களை நாட்டி மறைவாக வழிபடடார்களாம். அதுவே காலப்போக்கில் வைரவர் கோயில்களாக வந்திருக்கலாம்' என்ற கருத்தை சொன்னார்.

இந்த வகையில்தான், போத்துக்கேய எஜமானர்களுக்கு பயந்து யாழ்ப்பாணத்தில் 'அடுப்பு நாச்சியார்' என்ற பெயரில், அடுப்படிக்குள் அடுப்பைக் கும்பிட்ட வழக்கம் வந்ததாம். இன்றும் கிராமத்தில் தைப்பொங்கலன்று முற்றத்தில் பொங்கியவுடன், பொங்கிய சாதத்தில் ஒரு பகுதியைக் கிள்ளி அடுப்பில் வைப்பதும் இதன் நீட்சியாகவே இருக்க வேண்டும் தைப்பொங்கலன்று, வைரவருக்கு பொங்கல் பொங்கி, முக்கனிகளாகச் சொல்லப்படும் மா, வாழை, பலாப் பழங்களுடன் மடைவைக்கும் போது, பனை மரம் பற்றிய தகவலொன்றை அறிந்து கொண்டேன். முக்கனிகளைப் பற்றிய புனிதம் சைவசமய பூசை அநுட்டானங்களிலே வலியுறுத்தப் படுவது பிற்காலத்திலே தோன்றியதாம். ஒவ்வொரு கோயிலுக்கும் ஒவ்வொரு விருட்சம் சிறப்பாகச் சொல்லப் படுகிறது. ஆதிகாலத்தில் யாழ்ப்பாணக் கோவில்களுக்கு தல விருட்சமாக அமைந்தது, யாழ் கலாசாரத்துடன் கைகோத்துச் செழித்து வளர்ந்த பனை மரமே' என்றார் புராண இதிகாசங்களை முறைப்படி கற்றுத் தேர்ந்த பெரியவர் ஒருவர்.
அம்மா வழியில் நெருங்கிய உறவினரான ஒரு பெத்தாச்சியின் வீடு எங்கள் வீட்டிலிருந்து நடந்து செல்லும் தூரத்தில் இருந்தது. அவர் ஒரு கைம்பெண். இரு பெண் பிள்ளைகளுடன் பனை ஓலையால் வேயப்பட்ட மண் வீட்டில், தங்களுக்குச் சொந்தமான பனைகளை நம்பி மிகவும் கண்ணியமாக வாழ்ந்துவந்தார். சின்ன வயதில் அவர் வீட்டிலேயே, பனை மரத்தின் விளை பொருட்களிலிருந்து தயாரிக்கப்படும் உணவு வகைகளை அதிகம் சாப்பிட்டிருக்கிறேன். அவரது கைப் பக்குவத்தில் தயாராகும் பாணிப் பினாட்டும், புழுக்கொடியல் மாவுறுண்டைகளும் மிகவும் சுவையானவை. பனம் பழக் காலங்களிலே பனங்காய்ப் பணியாரம் சுடப்படுவதுமுண்டு.

இவரைப்போல இன்னும் சில பெத்தாச்சிகளும் அயலட்டையில் வாழ்ந் தார்கள். அவர்கள் வீட்டில் எப்பொழுதும் நான் செல்லப் பிள்ளை. அவர்கள் அனைவரும் தோட்டத்தை நம்பியே வாழ்ந்தார்கள். அவர்களிடம் பணவசதி இல்லாவிட்டாலும் வந்தவர்களையும் உறவினர்களையும் மனதார வரவேற்று உபசரிக்கும் பண்பு இருந்தது. போலித்தனமோ எந்தவித எதிர்பார்ப்போ அவர்களிடம் இருந்ததில்லை.
பெத்தாச்சி தனது வளவிலுள்ள பத்து பெண் பனை மரங்களை கள்ளுச் சீவ, கந்தையாவுக்கு கொடுத்திருந்தார். ஆண் பனைகளைக் கொடுப்பதற்கே பெத்தாச்சி முதலில் ஆசைப்பட்டார். ஆனால் ஆண் பனை மரப் பாளையில் அதிகம் கள்ளு ஊறாதென கந்தையா மறுத்துவிட்டார்.

இருந்தாலும் ஆண் பனைக் கள்ளுக்கும் ஊரில் தனி மரியாதை இருந்தது. ஆண் பனையிலிருந்து இறக்கப்படும் உடன் கள்ளு, முடக்கு வாதத்துக்கு நல்லதென அதையே நம்மூர் பெரிய கமக்காரரான துரையர், தினமும் தன் பின்வளவு ஆண் பனையிலிருந்து இறக்குவித்துக் குடிப்பார். இருப்பினும், அவரைப் பொறுத்தவரை அது பொய்யாகி, அறுபது வயதில் பாரிசவாதத்தால் இறந்தது கொசுறுச் செய்தி.
சென்ற நூற்நாண்டின் அறுபதாம் ஆண்டுகளில் பனை தென்னை மரங்களுக்கு 'மர-வரி' இலங்கையில் அறிமுகப் படுத்தப்பட்டது. இந்த வரிமுறையின் கீழ் கள்ளிறக்குவதற்கு, பெண்பனைக்கும் தென்னைக்கும் ஆண்டு ஒன்றுக்கு 'லைசென்ஸ்' பெற அப்போது பத்து ரூபாய் வீதம் கட்டவேண்டும். தென்னையிலும் பெண் பனையிலும் கள்ளுச் சீவுவதால் தேங்காய், பனங்காய் ஆகியவற்றினால் கிடைக்கும் பயன்கள் இல்லாமற் போவதை ஈடுசெய்வதற்காக மரத்துக்கு பத்து ரூபாய் வீதம் அப்போது பணம் வசூலிக்கப் பட்டது. தென்னை மரங்களில் ஆண் பெண் என்ற பேதம் இல்லை. ஆனால் பனை மரங்களில் உண்டு. ஆண் பனைகளிலே பெண் பனைகளைப் போல பயன்கள் கிடைக்காத காரணத்தால் அதற்கான 'லைசென்ஸ்' பணமாக ஆண் பனைக்கு, ரூபா இரண்டு வசூலிக்கப்பட்டது.

'லைசென்ஸ்' கட்டிச் சீவப்படும் மரங்களுக்கு வெள்ளை மையால் நம்பர் எழுதப்படும். நாலு மரங்களுக்கு பணம் கட்டி, கொசுறாக மேலும் சில மரங்களிலேயும் கள்ளுச்சீவுதல் கிராமங்களிலே சகஜமாக நடைபெறும். அப்பொழுது 'கலால்' இலாகா விழித்துக் கொள்ளும். நம்பரில்லாத மரங்களிலுள்ள கள்ளு முட்டிகளை அடித்துடைத்து, பாளைகளையும் 'கலால்' இலாகாவினர் வெட்டி எறிவது கிராமங்களில் அவ்வப்போது நடக்கும் சங்கதி.
பெத்தாச்சியின் வளவில் பத்து பெண் பணைகளில் கள்ளுச் சீவி, கொழுத்த வருமானம் பார்த்த கந்தையா, எந்த மரத்துக்கும் மரவரி கட்டவில்லை. இதை கந்தையாவின் குடும்ப எதிரி சின்னராசா கலால் இலாகாவுக்கு அறிவித்திருக்கிறான். கலால் இலாகா வந்து விட்டார்கள். கந்தையாவின் மனைவி வள்ளி, ஒப்பாரி வைத்து ஊரைக் கூட்டினாள். வந்தவர்கள் அசரவிலல்லை. பாளையை வெட்ட ஆயத்தமானார்கள்.
அப்போது நடந்ததுதான் அதி உச்ச கிளைமாக்ஸ் காட்சி!

தொடர்ச்சி 18 ம் பக்கம்

**Nandy's Catering & Partyservice**

உங்கள் இல்லத்தில் எந்த வைபவங்களாக இருந்தாலும்
குன்றாத சுவையுடன், சுடச் சுடப் பரிமாறுகின்றோம். இலங்கை இந்திய ஐரோப்பிய
உணவுகளையும் தயாரித்த வழங்குகின்றோம்.
**பரிமாறுதல் ஒரு கலை அது எமது நிறுவனத்தின் கைவந்தகலை!**

ஒரே குடையின் கீழ் எங்கள் சேவை!

உணவு விநியோகம் பாரிமாறல் மற்றும் நிழல்படம், வீடியோ
அதுமட்டுமன்றி எமது திறமையான ஊழியர்கள் உங்கள்
விழாவை திட்டமிடுதல், திருமணமேடை, மண்டபம்
மற்றும் மண்டபச் சோடனைகள் மற்றும்
நடைமுறைப்படுத்துதல் போன்றவைகளுக்கு உதவ
ஆயத்தமாக உள்ளளோம்

NANDY'S
CURRY'S & MORE
WWW.NANDYS.DE
Düsseldorf

Mobil 0173-7424955
Tel:0211 76 91 974

www.Nandys.de
e.mail:info@nandys.de


Frankfurt நகரில்....
Jaffna Bazar
Jaffna Bazar
HAPPY
Valentine's Day
தங்க நகைகள்
தரமானவை மட்டும்
என்றும் எம்மிடம்
கிடைக்கும்
காதலர் நெஞ்சம் மகிழ்ந்திட
2020 ஆண்டுக்கான புத்தம் புது டிசைன்களை
வாங்கி காதலரை மகிழ்வியுங்கள்!
KADHIR
Kaiser Straße.49
69329 Frankfurt Main
Tel: 069 25 62 6353
e.mail:jbspiece2018@yahoo.com
0049 69 25626353
0049 179 4792961
0049 151 71520425
உங்கள் இல்லத்திற்கு தேவையான அனைத்து
மளிகைப்பொருட்களும் பசுமையான
மரக்கறி மற்றும் கடல் உணவு வகைகளும்
நம்மிடம் கிடைக்கும்



# Love and its magnificent forms

## காதலின் அற்புதமான வடிவங்கள்

**Love** could be defined as a mixture of emotions, behaviours, and beliefs associated with strong feelings of affection, protectiveness, warmth, and respect for another person. Although almost no one agree on a single definition of love, most of the people do agree that love plays an important role in both physical and psychological well-being.

### Different forms of love

Love has different forms. Love is an imbedded feeling found in all the beings. They are all created to enjoy and obtain happiness, satisfaction, contentment and share and care others and pour love and receive love. The parents show love to their children without any selfish motives. Man shows paternal love as parents. they love their parents in return. The siblings show love to each other in various degrees. Their degrees of love show the relationship they have with the others and other species. There are different types of love shown by the humans and also by the other species. From the plants to the deities each possess a broad range of love. The species including the humans love their family members. They pet the animals and love them. The humans feel happy when the pet grows and start caring them and communicating in their language.

### False sense of values and false love

showing love to fulfil petty needs are not permanent. We learn from the history that even from the families of kings the relations and even sibling murder the person ruling the country to capture the regime. many humans kill other human to grab other's property and more wealth. Therefore, even within families, relations and with the rules humans do not have real love. Having love without single expectation on return is the pure and true love. the humans with their sixth sense realized the nature of true love. At one stage he realised the worldly love expressed and experienced do not give eternal peace.



Bavvatharani
Ravindran
Nallur

All the species when they become physically not fit and aged they look for the love and affection which they showed to the ones around them. They realise these worldly loves do not give them any peace. They realized that the relationships they developed with the humans and other species are temporary or not everlasting and they found that such love never gave eternal peace.

Role of love in between people
Love is something that is cultivated between two people and grows over time, through getting to know him or her and experiencing life's many ups and downs together. Love can play a role in long-term health, and feeling emotionally connected may help increase immunity. Great love is established through participation together. Participation together is accomplished through compatibility and shared purpose.

### Love on God

The human develops a love towards god in the form of supreme love which is called Bakthi. The one who realized the Truth about pure and true love understood that god is the embodiment of love. The rishis, saints and other seekers of truth have found the true everlasting love within themselves which is non selfish not expecting rewards or benefits. Man believes in deities and gods as they fulfil their boons. They beings in one stage realize the true love which is embedded in them, the love toward god who himself is an embodiment of love. The love is the persistent one. The humans and other species from their birth to death are deceived by the petty love shown to others Man does tapas. They renounce and leave all the attachments to get the bliss -the satchithanantha and attain mukthi.

### Power of love

The actual power of love is connected to your higher purpose in the world. When you give your life to this, the real love will emanate from you naturally. Yet neglect this and go against your higher purpose and love will degenerate into wild desire and fear. Do you know the difference between Love and desire?

It is depending in the bond. Bond is the reason for desire. But love does not have bond. It accepts the origin and give the love. Love always leads the life. There is a simple example for this. Some parents do not allow the children to go to different places or foreign alone, they do not allow them to play with their friends. They always fear about their child's safety. They keep the desire bond with them. It is not love. It is desire. If it is love they will allow their children to see the world. The child will see the world and get wisdom through their own experience. This is what a parent do when they love them. through desire fear will win.

→ 18

மங்கல இசை
நாதஸ்வர மதுரகானமணி
N.K.பாலமுரளி.குமரகுரு
யேர்மன் அரசாங்க அங்கிகாரம் பெற்றவரும்
ஐரோப்பிய இசை இரசிகர்களின்
அமோக வரவேற்பை பெற்றவருமான மாபெரும்
நாதஸ்வரவித்துவான் வரிசையில் உள்ள
நாதஸ்வர மதுரகானமணி
N.K.பாலமுரளி.குமரகுரு
அவர்களும் அவர் புதல்வன்
B.கஜேந்திரன் (க.கி) Kaki அவர்களும்
இணைந்து தரும் மங்கல இசை
விருந்திற்கு நாடுங்கள்

0049 208 43 74 709
கைத்தொலைபேசி:
0049 163 22 77 303



## Love and its magnificent forms

In considering wedding with another, do not say, "I love you. I cannot live without you. You are my everything." Instead, look and say, "I feel great love for you. What can we do together? Are we going the same path together? Can we live together for the rest of our lives? Can we work well together? Can we deal with sorrow and disappointment together?"
You will find there will be many people in life whom you could love and for whom you would feel great magnetism. Yet few of them will offer you the gift of Knowledge. Do not think that you must fall into feverish love. For the purpose of honest relationship is not merely the unlearning of illusions through disappointment. Real love is always calm because it is always based on recognition and compatibility and it helps to blossom lots of happiness inside your entire body when you provide unexpected love.




தொடர்ச்சி 15 ம் பக்கம்

'கூவில் கள்ளும் கீரிமலைக் குளிப்பும்'

அப்போது நடந்ததுதான் அதி உச்ச கிளைமாக்ஸ் காட்சி!

திடீரென வள்ளி தன் மாராப்பை அவிட்டு, மார்பைக் காட்டிக் கத்தவே, பாளை வெட்ட வந்தவர்கள் தலை தெறிக்க ஓடியது எங்கள் ஊரின் அந்த நாளைய ஈஸ்மன் கலர் வசுக்கோப்பு.

பனைகளின் முக்கிய பொருளாதார பயன்கள், கள்ளு சாராயம் பனங்கட்டி பனங் கற்கண்டு ஆகியனவே. 'கல்லாக்காரம்' என்னும் பெயரில் விற்பனையாகும் பனங்கற்கண்டு இருமலுக்கும் தொண்டை அரிப்புக்கும் நல்ல மருந்தென விஞ்ஞான ரீதியாக இப்பொழுது நிரூபிக்கப்பட்டுள்ளது. ஆனால் காலாதிகாலமாக கல்லாக்காரமே யாழ்ப்பாணத்தில் இருமலுக்கான இயற்கை மருந்தாக பாவனையியிலிருந்த தகவல், முறைப்படி நம்மால் பதியப்படாதது துர்ரதிஸ்டமே!

இவைதவிர பனாட்டு, பாணிப்பனாட்டு, பனங்காயப் பணியாரம், பூரான், பனங்கிழங்கு, ஒடியல். புழுக்கொடியல், ஊமல், மற்றும் பனை ஓலையிலிருந்தும், மட்டையிலிருந்தும், மரத்திலிருந்தும் பெறப்படும் பயன்களை நீண்ட பட்டியலிடலாம்.

இடையில் அவசரமாக இன்னொரு சங்கதி மூளையைக் குடைகிறது. யாழ்ப்பாணத்துக் 'கிளாக்கர் ஐயாக்களின்' அதிகாரங்கள் கொழும்பிலே கொடிகட்டிப் பறந்த காலத்தில், கந்தோர்களில் கோப்புக்களைக் கட்டிப்பிடித்து, நாட்டின் நலன்களை அடைகாத்துப் பெருக்கியதாகப் பெருமைப் பட்ட காலங்களில், அவர்களுக்குத் தேவையான 'சுதி'யை பனங்கள்ளே அளித்தது என்பதை அவுஸ்திரேலியாவில், அறுபதைத் தாண்டி வாழும் எந்த யாழ்ப்பாணியாலும் மறுக்க முடியாது.

அன்றைய காலங்களில் யாழ்ப்பாணத்து கள்ளுக் கொட்டில்களில்தான் 'சமத்துவம்' முழுதாக அமுல் படுத்தப்பட்டது. சின்னவிக்கும் விதானை நமசிவாயகத்துக்கும் கொட்டிலில் ஒரே 'பிளா'தான். பிளா, யாழ்ப்பாணத்தானின் மகத்தான கண்டு பிடிப்பில் ஒன்று. பனை ஓலையை வெட்டி மடித்து, கை பிடிக்க வசதியாக ஒரு பக்கத்தில் வால் விட்டு செய்தால், அது பிளா. இது கள்ளுக் குடிக்கப் பாவிக்கப்படும். பனை ஓலையை பக்கவாமட்டில் மடித்து மூடிக் கட்டினால், அது குடலை. இது கிராமப்புறங்களில் இறைச்சி, வெள்ளரிப்பழம் என்பவற்றை காவிச்செல்ல பாவிக்கப்படும். முற்றிய பனை ஓலையை பிளாபோல் மடித்து, வாலை பக்கவாட்டில் மடித்துக் கட்டினால், அது தட்டுவம். இது சோறு தின்னப் பாவிக்கப்படும். தோட்டத்தில் புகையிலை அறுவடை செய்வதற்கு முன்னர் படையல் வைப்பதும் இந்த தட்டுவத்தில்தான்.

பனையும் அதன் பானமும் அவற்றை உண்டு தமிழிலே களிப்புற்ற பாணருமே நமது தமிழ்க் கலை இலக்கிய வடிவங்களுக்கு முதன் முதலாக வடிவமும், வகையும், சுவையும் அளித்தனர். பாணர்கள் மகிழ்ந்து, அவற்றைச் சுவைஞர்களுடன் பங்கிடுவதற்கு, 'உற்சாக பான'மாகக் கள்ளே பயன்பட்டது. இதனால்தான் சங்க காலத்திலே தமிழின் படைப்புக்கும் சுவைக்கும், ஊடக பானமாக விளங்கிய கள், மது வகையிலே சேர்க்கப்படாது உணவு வகைகளிலே சேர்க்கப்பட்டதாக உசாத் துணை நூல்கள் சொல்கின்றன.

உண்மைதான்! பரம உண்மைகளைப் பரிமாறிக் கொள்வதற்கு உருவானவைதான் குறியீடுகளும் மரபுத் தொடர்களும்.
இந்த வகையில் 'கூவில் கள்ளும் கீரிமலைக் குளிப்பும்' என்ற சொற்தொடர் இன்றும் என் நெஞ்சிலே முகங்காட்டி மறைகிறது.




# ஓட்டமோ ஓட்டம்!



-சுருதி

-

அந்தத் தொழில்நுட்பக் கல்லூரியின் இரண்டு வாசல்களும், இரண்டு வீதிகளைத் தொட்டு நின்றன. பிரதான வாசலின் முன்னால் வந்து நின்ற பேரூந்தில் இருந்து சாயினியும், அவளது மூத்த அண்ணன் கிருபனும், அம்மாவும் அப்பாவும் இறங்கிக் கொண்டனர்.

சாயினி - கறுப்பு என்றாலும் திரும்பிப் பார்க்க வைக்கும் அழகு. பளீரிட்டு மார்புவரை கீழ் இறங்கி நிற்கும் ஹபொனி ரெயில்'. நெற்றியிலே மரூன் கலரில் துலங்கும் ஒரு அரசமிலை ஸ்ரிக்கர் பொட்டு. இரண்டு பெரிய வட்டங்கள் கொண்ட மூக்குக்கண்ணாடி. பள்ளிக்கு உரித்தான எடுப்பான ஆடை.

சாயினிக்கு இன்று கடைசிப் பரீட்சை. அவள் மனதில் பதட்டம். பரீட்சை எழுதுவதில் அவளுக்கு என்றுமே பதட்டம் இருந்ததில்லை. இன்று அவளது வாழ்க்கைக்கும் ஒரு பரீட்சை.

அவள் பிரதான வாசலுக்குள்ளால் உள்ளே சென்றதும் அம்மாவும் அண்ணனும் அங்கே நின்று கொண்டார்கள். அப்பா பொடி நடையாக ஒரு சுற்றுச் சுற்றி 15 நிமிடங்களின் பின்னர் கல்லூரியின் பின்புற வாசலை அடைந்தார். அங்கேயே நின்று கொண்டார். அவர்கள் எல்லோரினது கண்களும் தொழில்நுட்பக்கல்லூரிக்கு வருவோர் போவோர் மீது பார்வையை எறிந்தபடி இருந்தன. இன்று ஏதாவது நடக்கலாம் என்பது அவர்களின் எண்ணம்.

கல்லூரிக்கு நடுவிலே ஒரு சிறு கேற் இருப்பதை அவர்கள் அறியமாட்டார்கள். கிருபன் அங்கே முன்னர் படித்திருந்தும், அப்படியொரு கேற் இருப்பதை மறந்துவிட்டான்.

அந்த சிறு கேற்றின் வழியே வாட்டசாட்டமான ஒரு இளைஞன் தனது சட்டையின் மேல் இருக்கும் தொப்பியினால் தனது முகத்தை மூடியபடியே உள் நுழைந்தான்.

வெளியே கடும் பனி வீசிக்கொண்டிருந்தது. மரங்களிலிருந்து உதிர்ந்த சருகுகள் காற்றினால் அங்கு இங்குமாக அலைக்கழிக்கப்பட்டுக் கொண்டிருந்தன. மழை வேறு தூறிக் கொண்டிருந்தது.

சாயினி படிப்பிலே வலு கெட்டிக்காரி. வினாத்தாளை அரைமணி நேரத்திற்கு முன்னதாகவே செய்து முடித்துவிட்டாள்.
”சேர்! நான் விடையெழுதி முடித்துவிட்டேன். விடைத்தாள்களைத் தரலாமா?” என்று மேற்பார்வையாளரிடம் கேட்டாள்.

“இன்னும் 15 நிமிடங்கள் பொறுத்திருக்க வேண்டும்” என்றார் அவர்.

அவள் மனம் திகிலடையத் தொடங்கியது. கண்ணாடி ஜன்னலிற்குள்ளால் வெளியே நோட்டமிட்டாள். அவளையே பார்த்தபடி, ஒரு மரத்தின் கீழே தனது முகத்தை மூடியபடி நின்றான் நிக்கலஸ்.

இன்றைக்கு நடக்கப்போவதை நினைக்க அவள் மனம் கலவரமடைந்தது. எப்படி இதற்கு நான் உடன் பட்டேன்? இதன் பின்விளைவுகள் என்ன என்று சிந்திக்கத் தொடங்கினாள். மேற்பார்வையாளர் தானாகவே வந்து அவளிடமிருந்த விடைத்தாள்களை வாங்கிக் கொண்டார். அவள் விறுவிறென்டு பரீட்சை மண்டபத்தை விட்டு வெளியேற, வாசலில் அவளை மடக்கிப் பிடித்தான் நிக்கலஸ்.

“எங்கே கன்யா” சாயினி நிக்கலஷிடம் கேட்டாள்.

“காரிற்குள் இருக்கின்றாள். சீக்கிரம் போயாக வேண்டும்.” நிக்கலஸ் பதில் தந்தான்.
கார் ஒரு மரநிழலின் கீழ் பதுங்கி நின்றது. கன்யா, றைவர் சீற்றில் ஆணாட்டம் உடையில் கம்பீரமாக இருந்தாள். மஞ்சள் நிறம். சற்றே குவிந்த சப்பைமூக்கு. குள்ள உருவம். பூத்துக் குலுங்கும் ஆடையுடன் பூலோக ரம்பையைப் போல் புன்சிரிப்பை உதிர்த்துவிட்டு காரினின்றும் கீழ் இறங்கி நின்றாள்.

சாயினியின் தாய்மொழி தமிழ். கன்யாவின் மொழியே தாய் தான். சாயினி ஓடிச் சென்று அவளைக் கட்டி அணைத்துக் கொண்டாள்.

“தாமதிக்கக் கூடாது. றியிஸ்ரர் ஒ.்.பிஷில் நண்பர்கள் காத்துக்கொண்டு நிற்கின்றார்கள்.” சொல்லியபடியே காரின் பூற்லிட்டைத் திறந்து, தயாராகவிருந்த இரண்டு மாலைகளை எடுத்துவந்தான் நிக்கலஸ். ஒன்றை சாயினியிடமும், மற்றதை கன்யாவிடமும் குடுத்தான். இருவரும் ஆளை ஆள் பார்த்தபடியே மாலைகளை மாற்றிக் கொண்டனர். பின் ஆசனங்களில் பாய்ந்து ஏற, நிக்கலஸ் காரை வேகமாக ஓட்டத் தொடங்கினான்.




Easy Holiday
Travels & Tours



உலகின் எப்பாகங்களுக்கும் சென்று வருவதற்கான விமான பயணச்சீட்டுகளை குறைந்த விலையில் நிறைந்த மனதுடன் தருகின்றோம்

தொடர்புகளுக்கு: Thureiraj Rukshan

Mob:0152 1365 4331 - 0152 04153138

2020
Juni - August
கோடைகால
மலிவு விற்பனை

தாய்நாடு Sri Lanka சென்று உங்கள் விடுமுறையை சந்தோசமாக கழிக்க நாம் வழங்கும் ஓர் இனிய வாய்ப்பு!!!
இதோ விமாண பயணச்சீட்டுக்கள்
Only ab 499 Euro!!!


எம் மக்களின் அபிமானம் வென்ற
Easy Holiday
Travels & Tours

தாய்நாடு சென்றுவர மலிவு விலையில்

- விமானச்சீட்டுக்கள்
- பயணக் காப்புறுதிகள்
- வாகன வசதிகள்
- வீசா உதவிகள் (இந்தியா இலங்கை)
- ஹோட்ல் வசதிகள்

Emirates ETIHAD Gulf Air OMAN AIR QATAR

Westring 36
44623 Herne
Germany



Tel:02323 965 4426 Fax:02323 9654427
e.mail: ezholiday16@gmail.com

# தோற்ற காதல் என்றும் இளமையானது




சேவியர்



காதல் தோற்பதில்லை !

“அப்புறம் ஏண்டா இப்படி ஒரு தலைப்பு ? ” என நீங்கள் யோசிக்கலாம். ஒரு நிமிடம் பொறுங்கள். காதல் தோற்பதில்லை. காதல் நிராகரிக்கப்படலாம் அல்லது அங்கீகரிக்கப்படலாம். காதல் கொண்டாடப்படலாம் அல்லது கைவிடப்படலாம். ஒரு பூ தோற்றுப் போச்சு என நாம் சொல்வதில்லை. காரணம் பூப்பது தான் பூவின் வெற்றி, பறிப்பதல்ல. அப்படியே தான் காதலும். அது தோற்பதில்லை, தோன்றுவது தான் அதன் வெற்றி. நான் தோற்ற காதல் என சொல்வது, நிராகரிக்கப்பட்ட காதலை.

காதல் ஒரு பச்சைக்கிளியைப் போல, இளமையின் கதவுகளில் தனது அலகுகளால் கொத்திக் கொத்தி அழைப்பு விடுக்கிறது. சில கதவுகள் சிவப்புக் கம்பளத்தோடு கதவை அகலமாய்த் திறக்கின்றன. சில கதவுகள் அரைகுறையாய் திறக்கின்றன. சில கதவுகள் புரிந்தும் புரியாமலும் தாழ்ப்பாள் விலக்குகின்றன. இன்னும் சில கதவுகள் அடைக்கப்படுவதற்காகவே திறக்கின்றன. காதலோ கொத்துவதை நிறுத்துவதில்லை. பாதங்களில் சிவப்புக் கம்பளம் கிடைத்தாலும் சரி, அலகுகளில் குருதிக் கோடுகள் குதித்தாலும் சரி. அவை நிறுத்துவதில்லை.

பால்யகாலத்தின் சுவர்களில் சாய்த்து வைக்கப்பட்டிருக்கும் காலம் தனது இளமையைத் தொலைக்காமல் காத்திருக்கிறது. நாம் சந்தித்த புளியமரப் பாட்டிக்கு இன்னும் அதே புன்னகை இருப்பதாய் மனம் கற்பித்துக் கொள்கிறது. நமது கரங்களில் குச்சி ஐஸ் தந்த தாத்தாவுக்கு, இன்னும் சைக்கிள் ஓட்டும் வலு இருப்பதாகவே மனம் கற்பனை செய்கிறது. அவர்கள் வியாபாரத்தை முடித்தல்ல, வாழ்க்கையை முடித்தும் சென்றிருக்கக் கூடும். எனினும் மனமோ, தான் கழற்றி வைத்த மரத்தின் மூட்டிலிருந்தே தனது காலத்தை உதறி எடுத்து உடுத்திக் கொள்கிறது.

நமது நினைவுகளின் சாலைகள் இன்னும் தார் பூசப்படாமல் இருக்கின்றன. நாம் நடந்து திரிந்த குளக்கரைப் பாதைகள் இன்னும் ஒற்றையடிப் பாதைகளாகவே கிடக்கின்றன. நாம் நீந்தித் திரிந்த குளத்தின் மேனியில் இன்னும் கலங்கிய தண்ணீர் மிச்சமிருக்கிறது.

நாம் சந்தித்து நடந்த நண்பர்கள் இன்னும அரை டிராயருடன் தான் அலைந்து திரிகின்றனர். இவையெல்லாம் நமது நினைவுகளில் மட்டும்.

நிஜமோ யானை மிதித்த சோளக்காடாய் அடையாளங்களை முழுமையாய் அழித்து விட்டிருக்கிறது. நமது நினைவுகளின் புல்வெளிகளில் மட்டும் இன்னும் பழைய ஈரமே மிச்சமிருக்கிறது.

காதலும் அப்படியே !

பால்யத்தின் படிக்கட்டுகளிலோ, விடலைப் பருவத்தின் வாய்க்கால்களிலோ நிறுத்தி வைக்கப்பட்ட சைக்கிளாய் அதே சுவாசத்துடன் காத்திருக்கிறது. அதில் அமர்ந்து மிதிக்கும் போது கால்களுக்குக் கீழே, கடந்து சென்ற காலங்கள் நகர்ந்து செல்கின்றன. காதல் ஒரு வசீகர வாசனையுடன் சைக்கிளின் சக்கடங்களுக்கிடையே கண்ணாமூச்சி ஆடியபடி தொடர்ந்து வருகிறது.

காதலின் பக்கங்களில் அரைத் தாவணியுடன் அசைந்து நடந்த அவளின் பாதங்கள் இன்னும் அதே கொலுசுச் சத்தத்தைத் தான் பிறப்பித்துக் கொண்டிருக்கின்றன. அதே மஞ்சள் திற தாவணி காற்றில் அசைகிறது. அவளது விரல்கள் லாவகமாய் விலக்கி விடும் அந்த கரு கரு தலைமுடி இன்னும் காற்றின் கன்னங்களில் முத்தமிட்டுச் செல்கிறது.

ஓரக்கண்ணால் வெட்கம் விரிக்கும் அவளது பார்வையின் பசுத்தம் இன்னும் கறைபடியாமல் கிறங்கடிக்கிறது. அவள் கழுத்துகளில் கவிதை வாசிக்கும் அந்த கருமை நிற மாலை இன்னும் அவளது பெருவிரல் உரசலில் பெருமை கொண்டு அசைகிறது. சற்றே தலைகுனிந்து அவள் சிரிக்கும் புன்னகையை ஏறிட்டுப் பார்க்கும் சாலையோரப் பூக்கள் இன்னும் மூச்சுத் திணறித் தான் கிடக்கின்றன.

கடந்து வராத காதலுக்கு காலம் வயதைக் கூட்டுவதில்லை. அது பருவகாலத்தில் உறைந்து போன ஒரு பரிசுத்த மாணிக்கத்தைப் போல அங்கேயே தங்கி விடுகிறது.

இந்த ஹைடெக் காலத்தின் தாழ்வாரங்களில் கூட காதலன் தயங்கித் தயங்கி நீட்டிய கசங்கிய காகிதக் கடிதமே காதலியின் நடுங்கும் விரல்களில் இன்னும் ஸ்பரிசம் கூட்டும். அரும்பியும் அரும்பாமலும் இருந்த அந்த மீசையின் அடர்த்தியே காதலியின் கண்களின் ஓரங்களில் இன்னும் மிதந்து கொண்டிருக்கும். நிஜத்தில், அவன் நரைதலையுடனும், நாற்பதின் தொந்தியுடனும், பிள்ளைகளை பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பிக் கொண்டிருக்கலாம். அல்லது வழுக்கை விழுந்த தலையைத் தடவியபடி மனைவிக்கு காய்கறி வாங்கப் போயிருக்கலாம். காதலுக்கு அதெல்லாம் அவசியமில்லாதவை. அவை நிறுத்தப்பட்ட புள்ளியிலிருந்தே நடக்கத் துவங்கும்.

தொடர்ச்சி 21 ம் பக்கம்



20ம் பக்க தொடர்ச்சி

# தோற்ற காதல் என்றும் இளமையானது




சேவியர்

வெற்றி பெற்றக் காதல் தொடர்ந்து நடக்கிறது. அதன் வருடங்கள் கூடிக் கொண்டே இருக்கின்றன. காதலர்களின் தோற்ற மாற்றத்தைக் காதலும் வாங்கிக் கொள்கிறது. காதலர்களின் ஓய்ந்து போன ஸ்பரிச நதியை காதலும் கவலையுடன் கவனித்து நகர்கிறது. ஏதோ ஒரு நிறுத்தத்தில் தண்டவாளம் மாறிப் பயணிக்கும் ரயிலைப் போல, காதலர்களின் பயணம் அவர்களை காதலின் பயணத்திலிருந்து விலக்கி வைக்கிறது. வெற்றி பெற்ற காதலுக்கு வயதாகிறது. அதன் இளமை தொலைந்து போகிறது. அதன் கவித்துவம் கரைந்து போகிறது.

தோற்ற காதல் தொலைவதில்லை !

தோற்ற காதல் என்பது காலத்தைப் பூட்டி வைக்கும் சாவி. தோற்ற காதல் என்பது சுழலும் பூமியை நிறுத்தி வைக்கும் உத்தி. தோற்ற காதல் என்பது காதலை சாகா இளமையுடன் பாதுகாக்கும் சங்கதி.

காதல் தோற்பது புனிதமானது,<br>
அது, சூழ்நிலைச் சுனாமிகளால் சிதைக்கப்படுவதில்லை.<br>
காதல் ஜெயிப்பது துயரமானது<br>
அது, முதுமைச் சுருக்கங்களுக்குள் சிக்கிக் கொள்கிறது.

காதல் எந்தக் கணத்தில் முளை விட்டது என்பதைக் அறிய இன்னும் எந்த மென்பொருளும் கண்டுபிடிக்கப் படவில்லை. அது மண்ணில் விழுந்த பெருமழையின் முதல் துளியைப் போல ரகசியமாகவே இருக்கிறது. அது ஓயாமல் பேசும் பெருங்கடல் ஒன்று முதன் முதலாய் அனுப்பி வைத்த அலையைப் போல அறியப்படாமலேயே இருக்கிறது. அது பூமியின் இருட்டைத் துடைத்த கதிரவனின் முதல் வெளிச்சம் போல மறைந்தே இருக்கிறது. காதல் எப்போது முளைவிட்டது என்பது முக்கியமில்லை, முளை விட்டது என்பதே முக்கியம்.

காதல் எந்தக் கணத்தில் நிராகரிக்கப்பட்டது என்பது எளிது. அது ஒரு மெல்லிய மலரின் மீது மரச்சிலுவை விழுந்த தருணம். அது ஒரு அழுகின்ற குழந்தையின் வாயில் கள்ளிப் பால் கசந்த கணம். அது, பால்யத்தின் அதிகாலைக் கனவொன்றை பெருங்குரல் ஒன்று முடித்து வைத்த தினம். அது மறப்பதில்லை. அதே இடத்தில் காதலும், காலமும் காலொடிந்து கிடக்கின்றன. உறைந்த மௌனத்தின் உறங்காத சத்தமாய் அது இன்னும் இசை மீட்டிக் கொண்டிருக்கிறது.

காதல் ஒரு மெல்லிய மழை போல நமது நினைவுகளின் மீது பொழிந்து கொண்டே இருக்கிறது. வானத்தின் ஏக்கமெல்லாம் மண்ணை அடைவது மட்டுமே. மண்ணும் அதே போன்ற மழையை விண்ணுக்கு அனுப்பி வைக்கவேண்டுமென மேகம் எதிர்பார்ப்பதில்லை. ஒரு விதையின் தலையில் விதியாய் விழுவதையே அது ஏக்கத்துடன் எதிர்பார்க்கிறது. அந்த எதிர்பார்ப்பு பொய்க்கின்ற போது அது அக்கினி மழையை அனுப்புவதில்லை, இன்னும் அதிகமாய் கண்ணீர் வடிக்கிறது. உண்மைக் காதலும் அப்படியே. அது எதிர்பார்ப்புகளை எண்ணி, காதலை வினியோகிப்பதில்லை. நிராகரிக்கப்பட்டதற்காய் நரகத்தை நாடுவதும் இல்லை. காதலைப் பொழிந்து கொண்டே இருக்கிறது.

காதலால் நிரம்பி வழியும் குளத்திலிருந்து அள்ளுவதெல்லாம் காதலாகவே இருக்கும். காதலால் நிரம்பி வழியும் கோப்பையிலிருந்து சிந்துவதெல்லாம் காதலாகவே இருக்கும். காதலால் நிரம்பி வழியும் மேகத்திலிருந்து விழுவதெல்லாம் காதலாகவே இருக்கும். அது நிறம் மாறி நேசம் புதைப்பதில்லை.

காதல் வன்முறையின் போர்க்களத்தில் வெற்றி காண்பதில்லை. கோடரிகளைக் கொண்டு முல்லை மலரைக் கிள்ளி எடுக்க முடியாது. அது வலுக்கட்டாயத்தினால் சேர்த்துக் கொள்வதும் அல்ல. பெயின்ட் அடித்து விட்டால் ஆப்பிள் பழம், ஆரஞ்சுப் பழம் ஆவதில்லை. காதல் இயல்பாக மலர்வது. பரஸ்பரத் தீண்டல்களில் பரவசம் பற்றிக் கொண்டால் காதலாகிறது. பரஸ்பரத் தீண்டல்களில் பாஸ்பரஸ் பற்றிக் கொண்டால் அது நின்று விடுகிறது. இயல்பை ஏற்றுக் கொள்வதே மனிதத்தின் வெற்றி. அதுவே காதலுக்குச் செய்யும் அதிக பட்ச மரியாதை.

காதல் ஒரு யாத்ரீகனைப் போல. அது பயணத்தின் பாதையில் எப்போது வேண்டுமானாலும் இறங்கிக் கொள்ளும். அதை கட்டாயப்படுத்தி அழைத்துச் செல்ல முடியாது. காதல் ஒரு கானகக் குயில் போல அது எப்போது வேண்டுமானாலும் பாடத் துவங்கும். அதன் கழுத்தை நசுக்கி இசையை இழுத்தெடுக்க முடியாது. எதையும் ஏற்றுக் கொள்வதே காதலின் வெற்றி. அதுவே இளமையின் வெற்றி.

**உண்மையில்**<br>
**தோற்ற காதலே வெற்றி பெற்றிருக்கிறது !**<br>
**காலத்தை !**<br>
**தோற்ற காதலே ஊற்றி வைத்திருக்கிறது**<br>
**இளமையை !**

---

25ம் பக்கத் தொடர்ச்சி...

**வயலின் ஏன் அழுகிறது**

ஆத்மா என்பது உயிர் உள்ளனவற்றிற்கு மட்டும் என்ற எண்ணம், நான் பிடிச்ச முயலுக்கு மூன்று கால் என நினைக்கும் ஐரோப்பிய விஞ்ஞானத்தின் வழக்கு. இதனால் தான் வெள்ளையர்கள் கூச்சமின்றி புத்தகங்களை ஏணியாக பாவிக்கிறார்கள். ஆத்மா என்பது, கணக்கியல் யுகங்களில் பிடித்துக் கணக்கிட முடியாததனால் இப்படி இவர்கள் நினைக்கலாம். 19,20. நூற்றாண்டுகளின் வெள்ளை மேலாதிக்க அறிஞர்கள், உயிரில்லாதவைக்கு ஆத்மா வழங்குவதை Animismus என்றார்கள். Animismus என்பதை மிருகமாக்குதல் என விளங்கிக்கொள்ளலாம். இந்த மிருகமாக்கும் செயல் குழந்தைகளும், உளவியல் ஆரோக்கியம் இல்லாதவர்களும், பின் நோக்கிய கலாசாரங்களிற்கு உரியவர்களும் செய்வதென எம்மவர்களை ஐரோப்பியரை விட முன்னேற்றத்தில் குறைந்தவர்களாக நிர்ணயிக்கிறார்கள். (Edward B. Tylor Primitive Culture 1871; Piaget Jean: Das Weltbild des Kindes 1913) இன்றுவரை நான் புத்தக்கங்களை தொட்டுக்கும்பிட்டால், வெள்ளையர்கள் என்னை விசேடமாக பார்க்க இந்த பிழையான விஞ்ஞான அறிக்கை, அன்றாட வாழ்விலும் இடம்பெறுகிறது. ஆனால் பொருட்களிற்கு உயிரை வழங்குவது வாழ்வியலில் எத்தனை புதிய பரிமாணங்களை திறக்கிறது? எத்தனை கற்பனை அலைகளை பாயவைக்கிறது?

ஒரு பொருளை பாவித்து, அது பழுதடையமுன் அதைவிட நவீனமான பொருள் வெளியீடு பெறும் இக்காலத்தில் கழிவுகள் எக்கச்சக்கம். பிளாஸ்டிக் பாவனையை குறைக்க ஐரோப்பிய நாடுகள் சர்ச்சைகள் பலவிற்கு ஆளாகின்றன. வருடார்ந்தம் புது iPhone வாங்கும் காலத்தில், ஒரு பொருளுக்கு ஆத்மா இருந்தால், அது முழுதாக உயிரை விடுமுன், புதிய பொருளை கொள்வனவு செய்வோமா?








அன்னையை வணங்குவோம்! பெண்மையைப் போற்றுவோம்!!
மகளிர் தினம் பங்குனி 08
INTERNATIONAL WOMEN'S DAY
புதுமைப் பெண்கள் 2020
வெற்றிமணி அன்னை
நவநிதி.சுப்பிரமணியம்
(இளைப்பாறிய ஆசிரியை)
நூற்றாண்டு அரங்கம்
08.03.2020 Sunday
ஆட்டம் பாட்டம்
கொண்டாட்டம்
Women's day
MARCH 8TH
பிரதம விருந்தினர்
Dr.K. சுபாஷினி
( தமிழ்மரபு அறக்கட்டளை நிறுவனர் )
சொல்லுங்கள்!
வெல்லுங்கள்!!
நிகழ்ச்சி தொகுப்பாளினிகள்:
அபிரா
வித்தியா
Women's Day
08.March.2020
Sunday 14.30 - 20.30
அரங்க நிர்வாகம்
சி.சக்திவேல்,சிவ.வினோபன்,கோபி
கலைநிதி சபேசன், ஜெயா சக்திவேல்,
கீர்த்திகா.
முன்னணியும்
பின்னணியும்
மண்டபம்: PALAZIO | KASINOSTR. 25 42103 WUPPERTAL
பிரவேசம்:
இலவசம்

# ஆடற்கலாலயம் 30 வது ஆண்ட விழா




ஆடற்கலாலயத்தின் 30 வது ஆண்டு நிறைவு விழா யேர்மனியில் 21.12.2019 மிகச்சிறப்பாக இடம்பெற்றது.இவ்விழாவில் அரங்கேறி பல நடனங்களை தனது அபார ஆற்றலுடன் நெறிப்படுத்திய நாட்டிய கலாவித்தகர் நிமலன் சத்தியகுமார் அவர்களுக்கு வெற்றிமணி ஆசிரியர் கலாநிதி மு.க.சு. சிவகுமாரன் அவர்கள் சிவத்தமிழ் சஞ்சிகையின் முதல் பிரதியை வழங்கி கௌரவித்தார்.செல்வன் நிமலன் சத்தியகுமார் அவர்கள், வெற்றிமணி விருது, சிவத்தமிழ் விருது என பல விருதுகளுக்கு சொந்தக்காரன் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.



## முதலுதவி கட்டிலும் தட்டியும்

தாயகத்திற்கு 2016 ஆண்டு சென்றபோது எனது பேத்தியாருடன் ஒரு கிராம பாடசாலைக்குச் சென்றோம். அங்கு சென்றபோது பாடசாலை நேரம் ஏதோ செல் அடி வீழ்ந்ததுபோல் மாணவர்களும் ஆசிரியர்களும் பாடசாலைக்கு வெளியே பரபரப்பாக நின்றனர்.

அருகே சென்ற பார்த்தபோது 9 வயது மதிக்கத்தக்க ஒரு மாணவன் வலி வந்து துடித்துக்கொண்டு இருந்தான். அவனருகே அந்த மாணவனின் பாட்டியும் நின்றா. சற்று நேரத்திற்குள் மாணவனை ஆசிரியர்கள் தூக்கிச்சென்று வகுப்பறையில் படுக்கவைத்தனர்.

நாம் ஒரு பத்துநிமிடம் கழித்து அந்த வகுப்பறைக்குச் சென்றபோது ஆச்சரியமாக இருந்தது. அந்த வலிவந்த மாணவனை 3 விதமான உயரமுடைய கதிரையில் படுத்தியிருந்தார்கள். அவன் அந்த கதிரையின் உயரத்திற்கு ஏற்ப உடலைவளைத்து படுத்திருந்தான்.

என்னுடன் வந்த பேத்தியார் தாத்தா நான் லண்டனில் சரற்றி வேலை செய்த காசு  வைத்திருக்கிறேன். இப்ப உடனே நாம் கடைக்கு சென்று முதலுதவி கட்டில் ஒன்று வாங்கிக் கொடுப்போம் என்றாள். அவளின் கருணையுள்ளம் எந்தவித யோசனையும் செய்யாது உடன் அவள் ஆசையை நிறைவேற்றச் செய்தது.

25 ஆயிரம் ரூபா பெறுமதியான கட்டிலும் அதனைச் சுற்றி மறைக்க தட்டியும் வாங்கி அந்த பாடசாலைக்கு அன்பளிப்பு செய்தாள்.

ஆபத்து தினமும் வருவதில்லை. ஆனால் வரும்போது கட்டாயமாக முதலுதவி தேவை! இதுயாவருக்கும் தெரிந்த உண்மை. சென்ற வருடம் தாயகம் சென்றபோது அந்தப்பாடசாலையில் அந்த முதலுதவிக்கட்டில் இருந்த கோலத்தைப் பாரத்தபோது, அன்று அந்த மாணவனுக்கு வந்த வலி கண்முன் தெரிந்தது. என் பேத்தியின் நல்லெண்ணம் இப்படியாக விரையமானதை எண்ணும்போது நாம் இன்னும் மாறுவதற்கு எத்தனை ஆண்டுகள் ஆகும் என எண்ண வைத்தது!







## சினம் கொள் திரைப்படம்




–ஏலையா க.முருகதாசன்

ஈழத்து இயக்குனர் ரஞ்சித் ஜோசப் அவர்களினால் உருவாக்கப்பட்ட படந்தான் “சினம் கொள்“ எனும் திரைப்படம்.
சாண் ஏற முழம் சறுக்குவது ஈழத்துச் சினிமா பொருளாதார ரீதியாக வெற்றியடையதா நிலையில், ஈழத்துத் திரைப்படங்களைத் தயாரிப்பவர்களின் தனிப்பட்ட ஆர்வத்தினால் இதுவரை தயாரிக்கப்பட்ட ஈழத்திரைப்படங்கள் ஒன்றிலிருந்து அடுத்த கட்டம் என்பதை மெதுவாகவே தாண்டியிருக்கிறது.
இந்த நிலையில் சினம் கொள் திரைப்படம் ஈழத்துத் தமிழர்களை அடையாளப்படுத்திய படமாகவும் அதே வேளை திரைப்படத்திற்குரிய இலக்கணத்தை முழுமையாக கொண்டிருந்தது.
ஆராவாரமான திரைப்படங்கள் மத்தியில் இன்னமும் வரவேற்புப் பெறும் படங்களாகவும் உலக சினிமாவின் கவனத்தை கவரும் விதமாகவும் இருந்துவருபவை மலையாள, வங்காள அத்துடன் சிங்களத்திரைப்படத்தையும் இத்தொகுதிக்குள் கொண்டு வரலாம். தமிழகத் திரைப்படத்தின் சாயல்களை இதுவரை வெளிவந்திருந்த ஈழத்துத் திரைப்படங்கள் ஏதோ ஒரு வகையில் தவிர்க்க முடியாத காரணத்தாலோ அன்றி தமிழகத்திரைப்படச் சாயல் இருந்தால்தான் இரசிகர்களை உள்வாங்க முடியும் என்ற மனோநிலையில் தயாரிக்கப்பட்டிருந்தன.
ஆனால் சினம் கொள் திரைப்படம் ஈழத்து தமிழரின் பேச்சு வழக்கையும் உடல்மொழி அடையாளங்கைளை கொண்டிருந்து ஒரு வெற்றிப்படமாக அமைந்திருக்கின்றது.

2009 ஆண்டு போர் முடிந்ததன் பின் போராளிகளின் வாழ்வை மையக்கருத்தாகச் சொல்லும் படந்தான் இது.நடிக, நடிகைகளின் பெயர்களை ஞாபகம் வைத்துக் கொள்ளத் தேவையில்லை என்ற மனநிலையை தோற்றுவிக்கும் விதமாக கதாபாத்திரங்கள் இரசிகர்களின் மனதில் நிலைத்து நிற்கக்கூடியதாக நடிகர்கள் கதை மாந்தருக்கு பொருத்தமாக இருக்கக்கூடிய விதத்தில் பொருத்தப்பட்டுள்ளார்கள்.

திரைப்படத்துறையில் தமிகத் திரைப்படம் அல்லது இந்தியத் திரைப்படம் கதாநாளயகர்களுக்கு என்று விசேசமான அடையாளமாக சோடியாக ஒரு பெண்ணை கதாநாயகியாக்குவதும், பாடுவதும்,வானத்தில் பாய்ந்து பத்துப்பேரை அடிப்பதுமாக கிலுகிலுப்பு திரைப்படங்களுக்கு மத்தியில் எமது அடையாளத்தை நாமே பார்க்கும்விதமாக மட்டுமல்ல இதுதானஇ எம்மடையது என மீள வைத்திருக்கின்றது.
தமிழகத்திரைப்படங்கள் எமது அடையாளங்களைக் காட்டுகின்றன என ஈழத்துத் தமிழர்கள் நினைக்குமளவிற்கும் உறுதிப்பாட்டு நிலைக்கும், அந்தப் பேச்சுவழக்கு நம் அன்றாட வாழ்வில் திணிக்கப்படாத திணிப்பாக இருக்கும் நிலையில் எம்மை பிடித்து இழுத்து அதுவல்ல இதுதான் என சொல்ல வைத்து இரசிக்கவும் மகிழவும் வைத்திருக்கின்றது சினம் கொள்ள திரைப்படம்.
நலிந்து போன சூழ்நிலையிலும், போரில் ஈடுபட்ட வேளைகளில் கற்றுக்கொண்ட நல்லொழுக்கம் கட்டுப்பாடு போன்றவை கதாபாத்திரங்கள் ஊடகச் சொல்லப்பட்டிருக கின்றன.போரின் முடிவில் வெளிநாட்டில் வாழும் பொறுப்பாளர்கள் நிதிசார்ந்த விடயத்தில் பொறுப்புக்கூற வேண்டுமென்பதையும் இப்படம் சொல்லியிருக்கின்றது. வன்முறையைக் கையிலெடுக்கும் கட்டுப்பாடற்ற சமூகம் ஏன் உருவாகியது என்பதையும் கோடிட்டுக் காட்டிய இப்படம் வெளிநாட்டிலிருந்து வருவோர் ஆடம்பரமான குடும்பநிகழ்வுகளைச் செய்வதை விமர்சிக்காத விதத்திலும் ஆனால் அதை மக்களுக்கு வெளிச்சம் போட்டு இப்படம் காட்டியிருக்கின்றது. வெளிநாட்டியலிருந்து தாயகத்துக்கு வருவோரைப்பற்றிய விபரங்களை கப்பம் வாங்கும் குழுக்களுக்கு அறிவிப்பதும் அதனால் வெளிநாட்டிலிருந்து தாயகம் வருவோர் பயமுறுத்தப்படுவதும் கப்பம் கேட்பது போன்றவை சமூகப் பயமுறுத்தலாக வளர்ந்து வருவதையும் இப்படம் சொல்லியிருக்கிறது.தமிழகத்தின் பல்வேறுபட்ட கலைஞர்கள்,உதவி செய்வோரின் ஆதரவுடனும் தமிழக நடிகர்கள் ஒருசிலரையும் இணைத்து உருவாக்கப்பட்ட இத்திரைப்படம் ஒரு சினிமாவுக்குரிய அடையாளத்துடன் எமது படம் இதுதான் எனச் சொல்லுமளவிற்கு சிறந்தபடமாக தயாரனிக்கப்பட்டிருக்கின்றது.இப்படத்தை உருவாக்கிய ரஞ்சித் ஜோசப் அவர்பகளைப் பாராட்டுகிறேன்.

02ம் பக்கத் தொடர்ச்சி



பல்கலைக்கழக மாணவர்கள், பொதுமக்கள் எனப் பல்லாயிரக் கணக்கானோர் கலந்து கொண்டனர்.

நம்முன்னோர்கள் பயன்படுத்திய போக்குவரத்துச் சாதனங்களான சவாரி வண்டில், திருக்கை வண்டில், கூடார வண்டில் போன்றனவும் 1950 ஆண்டுக்கு முன் வந்த வாகனங்கள், 2ஆம் உலகயுத்தத்தின் பின் யாழ்ப்பாணத்தில் பயன்படுத்தப்பட்ட தட்டி வான், பாரம்பரிய பொருட்கள், பித்தளைப் பாத்திரங்கள், ஆரம்பகாலக் கடிகாரங்கள், வானொலிப் பெட்டி, முன்னோர் பயன்படுத்திய அருவி வெட்டும் கத்தி, போத்துக்கீசர், ஒல்லாந்தர், நாணயங்கள், ஒளிப்படங்கள், ஈழத்துப் புலவர்கள், பண்டிதர்கள், பாவலர்கள், கோயில்களின் பழைமையான தோற்றங்கள், 1800 ஆண்டுகளிலிருந்து வெளிவந்த பழைய பத்திரிகைகளின் முன்பக்கங்கள், யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களால் வரையப்பட்ட கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் ஓவியங்கள், ஆலயங்களின் பழைய ஒளிப்படங்கள் போன்றன காணப்படுகின்றன.

**கலைஞானியும் ஆவணஞானியும் கண்ட கனவு நனவாகியது**

அருங்காட்சியகத் துறையில் ஆர்வமுள்ள காலஞ்சென்ற கலைஞானி செல்வரெட்ணம் அவர்கள் யாழ்ப்பாணத்தில் ஒரு அருங்காட்சியகம் அமைக்க வேண்டும் என்று எவ்வளவோ முயற்சிகள் எடுத்தார். அதேபோல் குரும்பசிட்டி கனகரெட்ணம் என்பவரும் எவ்வளவோ முயற்சிகள் எடுத்தார். இவர் வீரகேசரி பத்திரிகை தொடக்கம் பலவற்றைச் சேகரித்திருந்தார். ஆனால் போர்ச்சூழலால் அனைத்தும் அழிந்து போயின. அதன் பின் தற்போது இவ் அருங்காட்சியகம் உருவாகியுள்ளது. இதேபோல் எதிர்காலத்தில் வன்னி, மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, மலையகம் போன்ற பகுதிகளில் தமிழர்களின் பண்பாட்டை வெளிப்படுத்தும் வகையில் அருங்காட்சியகங்கள் உருவாக வேண்டும் என்று சிவபூமி அறக்கட்டளை அமைப்பினர் விரும்புகின்றார்கள். இதனைப் பார்வையிடச் செல்வோருக்கு முதல் மூன்று நாட்களும் இலவச அனுமதி வழங்கப்பட இருக்கின்றது. அதன்பின் பாடசாலை மாணவர்களுக்கு 50 ரூபாய்களும் ஏனையோருக்கு 100 ரூபாய்களும் அனுமதிச் சீட்டாக அறவிடப்படும் என சிவபூமி அறக்கட்டளை தீர்மானித்துள்ளது.






# வயலின் ஏன் அழுகிறது?




ராம் பரமானந்தன்

"சுருதி மாதா லயம் பிதா" என்று சொல்லும் போது தொடங்கி இருக்கலாம். நடனம் ஆடும் சலங்கைகளை சாமித்தட்டருகேயே வைத்திருக்கவேண்டும் என்று சொல்லும் போது தொடங்கியிருக்கலாம். நான் உன் முதுகில் ஏறி ஆடப்போகிறேனென பூமிமாதாவிடம் மன்னிப்பு வேண்டும் போதோ, அல்லது தன்மேல் ஆடவிட்டதற்காக அவளிடம் நன்றி கூறும்போதோ தொடங்கி இருக்கலாம். எனது நண்பன் தனது வீட்டு அலுமாரி எட்டாததனால், புத்தகங்களை அடுக்கி அதன்மேல் ஏறி, தான் நினைத்ததை எடுப்பதைக்கண்டு மேனி சிலிர்த்த நொடியில் தொடங்கி இருக்கலாம். கோயில் பெரியார் எனக்கு அடுத்து, எனது வயலினிற்கு திருநீறு, குங்குமம், சந்தனம் வைத்த நொடியில் தொடங்கி இருக்கலாம். விஜயதசமி அன்று, புத்தகங்களை வைத்து, வழிபடும்போது தொடங்கியிருக்கலாம். விளையாட்டுவீரன் Neymar ஜேர்மனியை வெல்லும் penalty அடிக்கமுன், கால்ப்பந்தை முத்தமிட்டு உதைத்த நொடியில் தொடங்கி இருக்கலாம்.

தாளின் மேல் எழுத்து ஊர்ந்து செல்லும் வேளையில் தொடங்கியிருக்கலாம். பொருள் ஒன்றிற்கு ஆத்மா இருப்பதாக நான் கண்டது எப்போதெனச் சொல்ல முடியாது. முட்டையா கோழியா முதல் தோன்றியது என்ற கேள்வி போல் ஆகிடும். ஆனால் பொருட்களிடையே ஆத்மா இருக்கலாம் என்ற நம்பிக்கை எம்மவரிடயே இருக்கிறது என்பது நிச்சயம். வயலின் பயிற்சி செய்யும் போது சுருதி விலகுவதைக்கேட்டு எனது அம்மா, "ஏன் வயலின் அழுகிறது?" என்று கேட்பார். வீணாக அழும் வயலினை நினைத்து அதன்மேல் சிறுவயதில் நான் சினம் கொள்வேன். இருந்தும் புனிதமான வயலின் மேல் சினம் காட்ட பயம் கொள்வேன். வாத்தியத்தின் நுண்ணியமான, மென்மையான தொழில்நுட்பம், தவறானதொரு பாவனையாலேயே முழுதும் அழிந்திடும், அதுபோல அதன் மனமும் தொட்டாச்சிணுங்கி போல் துன்புறுமோ என்று எண்ணுவதாலா இந்தத் தயக்கம்?

இன்று என் சோகங்களையும், இன்பங்களையும், பயங்களையும் கரை சேர்க்க அவற்றை நான் என் வயலின் இசையில் கப்பல் ஏற்றுவேன். வித்துவானாக நான் இல்லாவிடினும் சிறு வயதில் இருந்து எனக்காக அழும் வயலின் எனக்குப் பணி புரிவதற்காக தலைவணங்குவதாக நினைத்துக்கொள்வேன். பூசை அறையை விட அந்த வயலின் வேறு எங்கு இருந்தாலும் அதற்கு அசௌகரியம் ஆகிடும், என எனக்குள் மன அழுத்தம். அதனுடைய தூய்மையான தகுதிக்கு அதுவே சரியான இடமென எண்ணிக்கொள்வேன். கலைக்கும் பக்திக்கும் இடையே ஆன்மீகமான உறவு இருக்கிறதென நினைத்ததனாலா இந்த மனப்பாங்கு?

எனது கணனியும், என் பக்கம் விட்டு நகராமல், நாள்தோறும் எனது சிந்தனைகளை எனது மடியில் இருந்து நான் குத்தக்குத்த வாங்கிக்கொண்டு இருக்கும். பல ஆயிரம் யூரோக்கள் செலவு செய்து அதை வாங்கினாலும், அதன் அயராத உழைப்புக்கு ஏனோ எனது நன்றிக்கடன் அவசியமென எனது மனம் சொன்னபடி.
ஏழு வருடம் நான் பாவிக்கும் கணணி இன்றுவரை ஒருமுறை கூட என்னை கைவிட்டதில்லை. அதற்கு எதுவும் ஆகக்கூடாது என, கோயிலில் தொடங்கி, பலகையில் தட்டுவது வரை நான் செய்யாத வழிபாடுகள் இல்லை. அது தனது வேலையைச் செய்துகொண்டு இருக்க, ஏன் இந்த பிரத்தியேக மரியாதை? நான் உண்ணும் சோற்றை அடையப் பாலம் அது என்பதனாலா? அது இல்லாவிடில் நாம் என்ன செய்வோம் என்ற அவஸ்தையா? எந்த அலுவலுக்கும் கணினி இன்றி எதுவுமே முடியாத காலத்தில், அது இல்லாவிடின் உள்ள சிரமம் நினைத்துப் பார்க்க முடியாது. சென்ற வருடம் விடுமுறை செல்லும் போது, எனது கைத்தொலைபேசியை வீட்டில் வைத்துவிட்டுச் சென்றேன்.



ராம் பரமானந்தன்

எனது ஒரு கையை விட்டுச்சென்றது போன்று இருந்தது. உதவுவதாலா? என்றும் உடனிருந்ததனாலா இந்த ஆத்மார்த்தம் ஏற்படுகிறது?

மதம், சம்பிரதாயம் ஆகியவை பொருட்களுக்கு மிகச் சுலபமாக ஆத்மாக்களை வழங்கி விடும். ஒரு இடத்தில் கல்லாக இருக்கக்கூடியது, இன்னொரு இடத்தில் கடவுள் ஆகிறது. வெளிச்சத்திற்கு ஏற்றும் விளக்கு, இன்னொரு இடத்தில் ஒளியேற்றி வணங்கத்திற்குரியதாகிறது. விளக்கு சுடர்விடும்போது, மனதில் சாந்தமும், பிரகாசமும் ஏற்படுகிறது. இதனால் இங்கே விளக்கிற்கு அமைதியான குணம் ஏற்படுகிறது. ஆத்மாவுடன் குணங்களும் வர, பொருட்களுக்கு உயிர்ப்பிக்கும் பரிமாணங்கள் மேலும் தோன்றுகின்றன.

இதைவிட மொழி கூட பொருட்களுக்கு ஆத்மாவை வழங்குகிறது. நான் எனது அம்மா செய்து வைக்கும் இனிப்புப்பண்டங்களை வீடு சென்றால் எடுக்க, குளிர்சாதனப் பெட்டியை நாளுக்கு 60 முறை திறந்து பார்ப்பேன். "இந்த Fridge க்கு வாயிருந்தால் அழும்" என்று அம்மா சொன்னதும், ஆத்மா என்ற பரிமாணத்தைப் பெறுகிறது குளிர்சாதனப்பெட்டி. யாராவது பேசுவதை செவிமடுக்காவிடின், சுவருடன் பேசுகிறேனா?" எனக் கேட்கும்போது அங்கே ஆத்மாவைக் கொள்கிறது சுவர். உயர்வு நவிற்சிகளும், உவமான உவமேயங்களும், ஒரு வேளை நாம் பேசுவதை சுவர்கள் கேட்டுக்கொண்டு இருக்குமோ? அல்லது எனது பசியால் Fridge க்கு உண்மையில் வலி ஏற்படுமோ? என நினைக்கத் தோன்றுகிறது.

ஆத்மாவை வழங்குவது உயிர் இல்லாத ஒன்றிடம் உயிரை கொடுப்பதற்கு சமனாக விளங்குகிறது. எனது நண்பன் தொலைத்ததாக நினைத்த ஒன்றை, தேடிப்பிடித்தால், அதற்கு முத்தமிடுவார். அது திறப்பாக இருக்கட்டும், அலுவலகத்தில் தனக்கு பிடித்த கோப்பிக்கப்பாக இருக்கட்டும், அனைத்திற்கும் நெஞ்சார மூன்று முத்தம் வழங்கிக்கொள்வார். உயிரில்லாத ஒன்றிற்கு உயிரை வழங்குவது மட்டுமல்லாமல், அதனுடன் உறவும் கொண்டாடுகிறோம். பொருட்களுக்கு ஆத்மா இருக்கலாம் என்ற தத்துவம், எம்மவர் வாழ்க்கையில் மிகப் பெரிய பங்கை எடுக்கிறது. ஒரு மேடையில் ஏறும்போது, அதைத் தொட்டுக் கும்பிடாமல் என்னால் ஏற முடிவதில்லை, இதை நான் சக கலைஞர்களிடமும் கண்டு ரசித்துள்ளேன். எங்கள் பழக்கவழக்கங்களை நாம் இந்த தத்துவத்திற்கு ஏற்ப அமைத்துக் கொள்வதுடன், ஏனையவருடைய பழக்கவழக்கங்களையும் இதன் அடிப்படையில் அளந்துகொள்வோம். கலையின்மேல் இவரது மதிப்பு எந்த விதம்? பொருட்களுக்கு உரிய மரியாதை வழங்குகிறாரா?



தொடர்ச்சி 21 ம் பக்கம்




Thushi -Deko
Thushi-Deko
காதலர்களே! நீங்கள் மகிழ்வுடன் திருமணம் புரிந்திட
அழகான மணவறைகள் மாளிகைபோல் கட்டித்தருகின்றோம்
Happy Valentines Day Feb.14
Christal mandapa Set round
Rada Krishna Stage
and Raja Gopuram
Tel:02305 - 85945 - 0176 608 108 13
Thushiyanthan.Thiruselvam

# விழியில் விழுந்து இதயம் நுழைந்து

## உயிருள் கலந்த உயிரே!காதல்!!



காதல் என்பது ஒரு மனஉணர்வு. இதைக் கடந்து யாரும் வாழ்க்கையில் பயணிக்க முடியாது. இதனைத்தான் காதல் என்பது மாயவலை சிக்காமல் போனவர் யாருமில்லை என்று விக்னேஷ் சிவன் எழுதினார். மனதுள் பூட்டி உணர்வில் வெளிப்படுத்தும் இக்காதலை நிறமூட்டி உலகத்திற்கு வெளிச்சம் போட்டுக்காட்டிய பெருமை இலக்கியங்களுக்கும், திரைப்படங்களுக்குமே இருக்கின்றது.

கதையாய்ப் பாடலாய் இலக்கியங்கள் அழகுக் காதல் சொல்லும். நடிப்பால் காட்சிகளால் திரைப்படங்கள் காதலை வெளிப்படுத்திக் காட்டும். வாழ்க்கையைப் பிரதிபலித்துக் காட்டும் கண்ணாடி இலக்கியங்கள் என்றால், திரைப்படங்கள் என்று சொல்லப்படுகின்ற சினிமாவும் அதைத்தான் செய்கின்றன. சினிமா வரலாற்றிலே காதலைச் சொல்லாத தமிழ் சினிமாப் படங்களை விரல்விட்டுத்தான் எண்ண வேண்டும். ஊனமுள்ளவனாக இருந்தாலும் காதல் வரும் என்று எடுத்துக்காட்டிய பேரழகன், ஒருவரை ஒருவர் தீண்டாமலே காதல் சொல்லும் ஒரு தலை ராகம், பார்க்காமலே உணர்வுகளைப் பரிமாறிக் கடிதம் மூலம் காதல் வெளிப்படுத்திய காதல் கோட்டை, கால் சலங்கையால் காதலியைக் காலமெல்லாம் நினைத்திருந்த காதல் சலங்கை ஒலி, கலையைக் காதலித்து அக்கலைஞனில் காதல் கொண்ட சிந்துபைரவி, பார்வையற்ற ஒருவனாக இருந்தாலும் பணக்காரக் பெண்ணுக்கு காதல் வரும் என்று சொன்ன ராஜபார்வை, வயது பேதம் பார்க்காது தன்னைவிட வயதான பெண்ணின் மேல் காதல் கொண்ட அபூர்வராகங்கள், முதியவர்க்கும் காதல் வரும் என்று சொன்ன முதல் மரியாதை. எனை மாற்றும் காதலே என்று சொன்ன நானும் ரௌடி இவ்வாறு சினிமா சொன்ன காதல் எண்ணிக்கையற்றன.

இவ்வாறான சினிமாவில் தேன் சுவை சொட்டச் சொட்ட மக்கள் மனதுக்குள் இதமான காதல் உணர்வுகளை வெளிப்படுத்திய சில பாடல் வரிகளை காதலர் தினத்தில் இரசித்து இன்புறுவாம்.

காதல் பாடல்களில் வகைகளை எடுத்து நோக்கினால், காதலன் காதலியின் அழகைப் புகழ்ந்து பாடும் பாடல்கள், காதலி காதலன் அழகைப் புகழ்ந்து பாடும் பாடல்கள், காதலியின் மனதை ஈர்க்கும் பாடல்கள், காதலனை எதிர்பார்த்துக் காதலியும் காதலியை எதிர்பார்த்துக் காதலனும் ஏங்கும் பாடல்கள், பிரிவுத் துயரை வெளிப்படுத்தும் சோகப் பாடல்கள் என வகைப்படுத்தலாம்.

காதலன் காதலியை வர்ணிக்கும் போது அவள் கண்களுக்கு முக்கித்துவம் கொடுப்பது வழக்கம். “பருவ மங்கையர் பங்கய வாள் முகத்து உருவ உண்கணை ஒண்படை ஆம் எனக் கருதி அன்பொடு காமுற்று” எனக் கம்பன் பாட கம்பனைக் கற்ற கண்ணதாசன் அதேபாணியில் “பொன் வண்டொன்று மலரென்று முகத்தோடு மோத நான் வளை கொண்ட கையாலே மெதுவாக மூட என்று இரு வள்ளவர்கள் என்ற படத்திற்கு கண்ணதாசன் பாடல் வரிகளைத் தந்துவிடுகின்றார். பெண்களுடைய கண்களை பெண் வண்டுகள்

என்று கருதிய ஆண்வண்டுகள் அவளுடைய மலர் போன்ற முகத்திலே வந்து மோதுகின்றன. அந்த வண்டுகளைத் தடுப்பதற்காக அவள் கைகளால் மூடுகின்றாள். எவ்வளவு அறபுதமான வரிகள்.



கௌசி

“செந்தமிழ் தேன்மொழியால் நிலாவென சிரிக்கும் மலர் கொடியாள், பைங்கனி இதழில் பழரசம் தருவாள் பருகிடத் தலைகுனிவாள். சேற்றினில் மலர்ந்த செந்தாமரையோ செவ்வந்தி பூச்சரமோ, கண்களில் நீலம் விளைத்தவளோ அதைக் கடலினில் கொண்டு கரைத்தவளோ” என்னும் கண்ணதாசன் வரிகள் இன்றும் நெஞ்சில் நிலைத்திருக்கின்றன.

கடலின் நீலமே அவள் கண்களிலிருந்து கரைத்ததுதான் என்று தற்குறிபேற்ற அணியில் வர்ணிக்கின்றார். அவள் பிறந்த குலம் எவ்வாறாக இருந்தாலும் அழகில் குறைந்துவிடவில்லை என்பதற்கு உதாரணமாக தாமரை சேற்றில் பிறந்தாலும் அழகானது என எடுத்துக்காட்டிள்ளது சிறப்பாக இருந்தது.

“வண்ணத்தமிழ் பெண்ணொருத்தி என்னருகில் வந்தாள். கண்ணசைவில் கோடி கோடி கற்பனைகள் தந்தாள். அன்னம் கூட அவளிடத்தில் வந்து நடை பயிலும். ஆடல் கலை இலக்கணத்தை அறிய வரும் மயிலும். இன்னிசையைப் பாடங் கேட்க எண்ணி வரும் குயிலும். இயற்கை எல்லாம் அவள் குரலின் இனிமையிலே துயிலும்” என்னும் பாவை விளக்குப் படத்தில் வரும் வரிகளில் அன்னநடையைப் புலவர்கள் பெண்ணின் நடைக்கு உவமையாகச் சொல்வார்கள்.

அந்த அன்னமே இவளிடம் நடைப்பாடம் கற்க வருவதாகச் சொல்வது காதலனின் அதீத கற்பனையாக வெளிப்படுகின்றது. அதேபோல் மயில் ஆடல்கலையையும், குயில் பாடலையும் பயில வருகின்றன. “என்னிசை நின்றால் அடங்கும் உலகே” என்று சிவபெருமான் தேவநாதருக்குப் புத்திபுகட்டுவதற்காக தன் இசையை நிறுத்தி உலகத்தையே அசையாமல் செய்தார் எனப் புராணம் கூறுகின்றது. இங்கு இயற்கையைத் தன் காதலி அவள் குரலினால் துயில வைக்கின்றாள் எனக் கவிஞர் எழுதியிருப்பது சுவாரஸ்யமாக இருக்கின்றது.

உலகத்தில் எவையெல்லாம் சிறப்பாக இருக்கின்றனவோ, அவையெல்லாம் தன் காதலியாகக் காணுகின்ற காதலனின் மனதை “காலங்களில் அவள் வசந்தம், கலைகளிலே அவள் ஓவியம், மாதங்களில் அவள் மார்கழி(குளிர்மை), மலர்களிலே அவள் மல்லிகை(வாசனை). பறவைகளில் மணிப்புறா, பாடல்களில் தாலாட்டு, கனிகளிலே மாங்கனி, காற்றினிலே தென்றல், பால் போல் சிரிப்பதில் பிள்ளை(களங்கமில்லை). பனிபோல் அணைப்பதில் கன்னி, கண் போல் வளர்ப்பதில் அன்னை. எனப் புகழ்ந்து பாடிய கவிஞர், அன்னை பிள்ளையை வளர்ப்பது போலவே என்னைக் கவிஞனாக வளர்த்துள்ளாள் எனத் தன் காதல் உணர்வுகளைப் பாடலாகத் தந்திருக்கின்றார்.

இந்தக் காதலி எவ்வாறான அழகானவளாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் மனதுக்குப் பிடித்துவிட்டால், அவள் காதலனுக்குத் தேவதைதான். அவள் கோபுரங்கள் சாய்வதில்லை படத்து அறுக்காணியாகக் கூட இருக்கலாம். 16 வயதினிலே கமலஹாசன் போல் சப்பாணியாகக் கூட இருக்கலாம். இருந்தாலும் காதல் மலரும், மனங் காவியம் பாடும். அதுவே காதலுக்கு உள்ள மகத்துவம். அதனாலேதான் என்னவோ தன்னுடைய காதலனின் அழகை எடுத்துக் காட்டுவதற்கு பல எடுகோள்களை முன் வைக்கின்றாள்

“கறுப்புத்தான் எனக்குப் பிடித்த கலரு. அவன் கண்ணு ரெண்டும் என்னை மயக்கும் தவுஸண்ட் வோட்ஸ் பவரு என்று சொல்வது மட்டுமல்லாமல்ல. இரவு, விவசாயி, மண்ணுக்குள்ள இருக்கிறப்போ வைரம், காதலனை ரசிக்க வைச்ச கண்ணுமுழி, கண்ணகி, கருவறை , பாவாடை கட்டிப் பதிஞ்ச தடம், என்று பலவாறாக கறுப்பின் பெருமைகளைப் பாடுகின்றாள். ஏனென்றால், இவ்வாறான பெருமைகள் பொருந்திய கறுப்பு தான் தன் காதலன்.

தொடர்ச்சி 29 பக்கம்



# அகவன் மகளே ! அகவன் மகளே !





தனசேகர் .பிரபாகரன்

இன்றைக்கும் யேர்மனி, நெதர்லாந்து நகரப் புறங்களில் "soothsayers எனும் குறிசொல்பவர்கள் உண்டு, காலத்திற்கேற்ப கணினியிலோ, படங்கள் வரையப்பட்ட அட்டைகள் மூலமோ அதிர்ஷ்டத்தை கணித்துச்சொல்வார்கள், காற்பந்தாட்டத்தில் யார் வெற்றி பெறுவார் என்று கூடு சிலசமயம் ஆருடம் கூறுவதுண்டு, இந்த குறி சொல்லும்.்.கேட்க்கும் பழக்கம் பண்டைய உலகத்திலிருந்தே தொடர்ந்து வரும் ஒரு பழக்கம். தமிழக.்.ஈழ வாழ்வியலில் குறிசொல்பவர்கள் குறிஞ்சிநிலத்து குறவர்கள்.

தமிழரின் ஐவகை நிலங்களில் முதலாவதும் இயற்கை எழில் கொஞ்சுமிடமாகவும் விளங்குவது "குறிஞ்சி", கல் தோன்றி மண் தோன்றா காலத்தே என்னுஞ் சொற்றொடரில் கல்லென்பது உலகில் முதலில் தோன்றிய மலைப்பகுதியே என்று கூறுவர், ஆறுகளுக்கு பிறப்பிடமாகவும் எண்ணற்ற உயிரினங்களுக்கு வாழ்விடமாகவும் விளங்குவது இந்த குறிஞ்சி நிலம், இங்கு வாழ்வோர் குறவர் குறத்தியர்.

இன்று இவர்களைப் பற்றிய பார்வை தமிழரிடையே எப்படி இருக்கிறது என்று தெரியவில்லை ஆனால் தமிழக வரலாற்றில் முக்கிய இடமும் இயற்கையோடு இயைந்த வாழ்க்கையும் இவர்கள் வாழ்ந்து வந்துள்ளனர் என்பதை அறியமுடிகிறது.

முக்காலம் உணர்ந்து திறமுரைக்கும் ஆற்றல் பெற்றவர்களாய் இவர்கள் இருந்துள்ளனர்.
சங்க காலம் முதல் தற்காலம் வரை இந்த குறிஞ்சி நில மக்களாம் குறவர் குறத்தியர் பற்றியும் அவர்களை சார்ந்து தமிழில் வளர்ந்த இலக்கியங்களை பற்றியும் காண்போம்.

பண்டு முதலே தமிழரிடம் குறிகேட்கும் பழக்கம் இருந்துள்ளது, இந்த குறி சொல்வதில் மலைநாட்டை சேர்ந்த பெண்களாம் குறத்தியர்கள் வல்லவர்கள், இந்த நிகழ்வு சங்க இலக்கியங்களில் பலவிடங்களில் காணப்படுகிறது.
குறி சொல்லும் பெண்ணை அகவன்மகள் என்றும் கட்டுவிச்சி என்றும் இலக்கியங்கள் விளிக்கின்றன, முறத்தில் நெல்லைப்பரப்பி அதை எண்ணிப் பார்த்து குறி சொல்லுவது அவளுடைய வழக்கம். குறுந்தொகையில் ஔவையார் பாடிய பாடல் ஒன்றில் இந்த நிகழ்வு வருகிறது.

தலைவன் மேல் கொண்ட காதல் நோயால் வாடியிருக்கிறாள் தலைவி, இப்படி வாடி இருக்குங்காலத்து தாய் இவளுக்கு ஏதோ நேர்ந்துவிட்டது என பயந்து கட்டுவிச்சியை அழைத்து குறிகேட்கிறாள், அந்த நேரத்தில் தலைவியின் தோழி கட்டுவிச்சியிடம் தலைவன் இருக்கும் மலையைப்பற்றி பாடுவாயாக என்று கூறுவதாய் அமைந்த பாடல், தலைவன் மலையைப் பற்றி கேட்டால் தலைவி துயரம் தீரும் என்று தோழி நினைத்தாள்.

அகவன் மகளே அகவன் மகளே
மனவு கோப்பு அன்ன நன் நெடும் கூந்தல்
அகவன் மகளே பாடுக பாட்டே
இன்னும் பாடுக பாட்டே அவர்
நன் நெடும் குன்றம் பாடிய பாட்டே (ஔவையார் குரு23)

இப்படி குறி சொல்லும் கட்டுவிச்சி சிலசமயம் பெண் மீது முருகன் அணங்கினான் போலும் எனவே வேலனை அழைத்து வெறியாட்டம் நிகழ்த்துக என்று சொல்வதும் உண்டு. இப்படி பழங்காலத்தே இருந்த மரபு பக்தி இலக்கிய காலத்திலும் பிற்காலத்திலும் குறமாகவும் பின்பு குறவஞ்சி நாடகமாகவும் விரிந்தது. குறவஞ்சி மற்ற இலக்கியங்களை காட்டிலும் தனித் தன்மை வாய்ந்தது, பாமரரும் கேட்டு இன்புறும் சந்தங்களையும் ஓசை நயங்களையும் எளிய சொற்களில் உரைப்பது. காதல், நகர்வளம், நாட்டுவளம் என்று ஊர்ப்பெருமை பேசி இயற்கை வருணனையும் கொண்டு விளங்குவது. இந்த குறிகேட்கும் பழக்கம் தமிழில் நல்ல நூல்களையும் தந்தது. குற்றாலக் குறவஞ்சி குழந்தைகளும் பாடி மகிழும்படி எளிமையானது, ஈழத்தில் எழுந்த மாத்தளைக் குறவஞ்சி குறவஞ்சி இலக்கியங்களிலேயே புதுமையானது. ஈழத்தில் மாத்தளைக் குறவஞ்சி போலே கதிரைமலைக் குறவஞ்சி, கீரிமலைக் குறவஞ்சி போன்ற நூல்களும் எழுந்தன. நாமும் இந்த இலக்கியங்களை வாசித்து நமது குழந்தைகளுக்கும் கொஞ்சம் சொல்லிக்கொடுப்போமே !





## டோட்முண்ட் பொங்கல் விழா

18.01.2020 அன்று டோட்முண்ட் நகரில் தமிழ் மக்களும் வர்த்தகர்களும் இணைந்து பொங்கல் விழாவை கொண்டாடினார்கள்.பொங்கல் விழாவை டோட்முண்ட் மற்றும் அதை அண்டியுள்ள நகரங்களில் செயற்படுகின்ற அமைப்புக்கள் ஒருங்கிணைத்திருந்தன. கொள்கைகளிலும் செயற்பாட்டுத் தளங்களிலும் வேறுபாடுகள் இருக்கின்ற போதும், விட்டுக் கொடுப்புகளை செய்து பொங்கல் விழாவிற்கான ஏற்பாடுகளை அனைத்து அமைப்புகளும் இணைந்தே செய்வதானது பல நகரங் களுக்கு ஒரு முன்னுதாரணமாக அமைந்துள்ளது.

பல்வேறு வகையான நடனங்கள், தமிழிசை, நாடகங்கள் என்று பொங்கல் விழா சிறப்பாக நடைபெற்றது. பொங்கல் விழாவின் ஊடாக கிடைக்கின்ற நிதி தாயகத்தில் அல்லலுறும் மக்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் அனுப்பி வைக்கப்படுகிறது. இதுவரை ஏறக்குறைய 20 லட்சம் ரூபாய்கள் தாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத் தக்கது.






27 ம் பக்கத் தொடர்ச்சி

# விழியில் விழுந்து ......

இருமனங்கள் சந்தர்ப்பவசத்தால் ஈர்க்கப்படுகின்றன. அதைத்தான் சிலரைக் கண்டால் மனதுக்குள் பல்ப் எரிகின்றது என்பார்கள். அவ்வாறு ஈர்க்கப்பட்ட மனங்கள் ஒன்றாகக் கலக்கின்றன. உயிரில் கலந்து விடுகின்றன. உயிரில் கலக்கும் போது "யாருமில்லா தனியறையில் ஒரு குரல் போல எங்கோ இருந்து என்னை இசைக்கிறாய்" என்கிறார் கவிஞர் பா.விஜய். தனியாக இருக்கும் ஒரு அறையில் அமைதி குடிகொண்டிருக்கும். அந்த அறையில் ஒருவரை எங்கோ இருக்கும் ஒருவர் இசைக்க வைக்க எப்படி முடியும்! இசைக்குத்தானே மனங்களை மட்டுமல்ல மரங்களைக் கூட இசைய வைக்கக் கூடிய சக்தி உண்டு. ஆனால், எங்கோ இருந்து ஒருவரை இசைக்க வைக்கக் கூடிய சக்தி அந்தக் காதலுக்குத்தான் உண்டு.

விழியில் விழுந்து இதயம் நுழைந்து உயிருள் கலந்த காதல் உணர்வுகள் "Black and White கண்ணு காதலியைப் பார்த்தா கலரா மாறும். துருப்புடுச்ச காதல் நரம்பெல்லாம் சுறுசுறுப்பாக சீறும்" என்று விக்னேஷ் சிவன் அவர்கள் நானும் ரௌடிதான் என்னும் படத்தில் எழுதுகின்றார். "காதலுக்கு மொழி தேவையில்லை கண்கள் பேசும் வார்த்தைகளே காதலுக்கு மனப்பதிவுகளை வலிமையாக்குகிறது. இதனையே ஒலி இல்லாத உலகத்தில் இசையாக நீயே மாறி காற்றில் வீசினாய் காதில் பேசினாய். மொழியில்லாத மௌனத்தில் விழியாலே வார்த்தை கோர்த்து கண்ணால் பேசினாய்" என்று அதே நானும் ரௌடிதான் என்னும படத்தில் தாமரை வரிகளைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

"வெண்பஞ்சு மேகங்கள் உன் பஞ்சுப் பாதங்கள் மண் தொட்டதால் இன்று செவ்வானம் போல் ஆச்சு. விண் சொர்க்கமே பொய் பொய் என் சொர்க்கம் நீ பெண்ணே" என்னும்போது வாழ்க்கையில் சொர்க்கத்தைக் காணவே விரதங்களும் கோயில், குளங்களும் சுற்றுகின்ற அடியார்களுக்கு நடுவே ஒரு பெண் போதும் சொர்க்கம் காண என்று கூற உண்மைக் காதலுக்குத்தான் முடியும். "ஒரு பெண்ணைப் பார்த்து நிலவைப் பார்த்தேன் நிலவில் குளிரில்லை. அவள் கண்ணைப் பார்த்து மலரைப் பார்த்தேன் மலரில் ஒளியில்லை. குயில் ஓசை போலொரு வார்த்தை குழலோ யாழோ என்றிருந்தேன். கலை அன்னம் போலவள் தோற்றம் இடையில் இடையோ கிடையாது" என்னும் வாலியின் கற்பனை வரிகளை விட்டு காதல் பாடல்களை எழுத முடியாதுள்ளது.




காதல் பாடல்களில் சோகப்பாடல்களே அதிகமாக பலரின் மனங்களை இலகுவில் ஆட்கொண்டுவிடுகின்றன. பிரிவுத்துயரை வெளிப்படுத்தும் "கண்கள் இரண்டும் என்று உன்னைக் கண்டு பேசுமோ? காலம் இனிமேல் நம்மை ஒன்றாய்க் கொண்டு சேர்க்குமோ? கணையாழி இங்கே மணவாளன் அங்கே காணாமல் நானும் உயிர் வாழ்வதெங்கே" ஆண்டுகள் கடந் தாலும் மனதுக்குள் ஆழமாகப் பதியும் வரிகள் உன்னைக் காணாமல் உயிர் வாழ முடியாது என்பதை காதலி வெளிப் படுத்தும் பாங்கைக் கண்ணதாசன் வரிகளில் கேட்டு இன்புறக் கூடியதாக இருக்கின்றது.

எதுக்காகக் கிட்ட வந்தாளோ! எதைத்தேடி விட்டுப் போனாளோ! விழுந்தாலும் நான் ஒடஞ்சே போயிருந்தாலும் நினைவிருந்தால் போதும் நிமிர்ந்திடுவேன் நானும் என்று பாடும் வரிகளில் கண்ணீரும் கூட சொந்தமில்லை என்று வலி சுமந்த வரிகள் நெஞ்சைத் தொடுகின்றன.

100 வீதம் காதல் என்னும் படத்திலே "இரு விழிகள் போதவில்லை அழுதிடக் கண்கள் கோடி எனக்கில்லை. காற்றிலே ஆடும் காகிதம் போல தூரமாகப் போகவே நேர்ந்தது ஏனடி. கண்ணுக்கு இமையின்று தூரம். நெஞ்சுக்கு நினைவின்று தூரம். உடலுக்கு உயிரின்று தூரம் ஆனதே. கிளை மேலே இணை சேர்ந்த பூக்கள் புயலாலே மண் மேலே விழுந்தால் மீண்டும் ஒன்றாகச் சேரக் கூடுமோ" என்னும் போது கண்ணுக்கு இமைபோல் காதலியைக் காத்து நின்ற காதலன் நெஞ்சு முழவதும் அவள் நினைவுகளைச் சுமந்தான். அவள் பிரிந்து சென்றதனால் உடல்தான் தாங்கி நிற்கின்றான். உயிரான காதலியை வெகுதூரம் பிரிந்துவட்டான் என்னும் போது உயிரும் உடலும் ஒன்றிணைந்த காதல் உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கான வரிகளை மோகன் ராஜ் தந்திருப்பது ரசித்து இன்புற வைக்கின்றது. இதேபோன்று அள்ளஅள்ளக் குறையாத அட்சய பாத்திரம் போல் சினிமா காதல் பாடல்களை எமக்கு தந்து கொண்டே இருக்கும். இதற்கு அனைத்துக் கலைகளும் போல் பாடலும் பாடகர், இசையமைப்பாளர், கவிஞர், போன்ற மூவரும் ஒன்றிணைந்த கூட்டுச் சேர்க்கையிலேயே சினிமாவில் களை கட்டி இரசிக உள்ளங்களுக்கு நல்ல தீனி போடுகின்றது



# வாழும் சுவர்கள்



**இளவாலை எஸ்.ஜெகதீசன்**

யாழ்ப்பாணம் வரவேற்கின்றது போன்ற வரவேற்பு வளைவுகளை பார்த்துப் பழகிய கண்களை இலங்கை பூராவும் வரவேற்கத் தயாராகின்றன வர்ண வண்ண வாழும் சுவர்கள்.

வாழும் சுவர்கள் என்றால் என்ன என அறியும் ஆவல் அண்மைக் காலங்களில் இலங்கை மக்கள் பலரின் தூக்கத்தைத் துரத்துகின்றது. அத்துடன் கடைகண் பார்வையுடன் மட்டும் எவரையும் கடந்து போக விடாமல் செய்கின்றன விழிக்கும் வீதிகளில் தென்படும் நகரத்துச் சுவர்கள்.
அசுத்தமாக இருக்கும் சுவர்களையும் சுவரொட்டிகளையும் அகற்றிவிட்டு அந்த இடங்களை வர்ணமய ஓவியங்களாக அலங்கரிக்க ஆரம்பித்துள்ளன இலங்கையின் பல பகுதிகள்.

பாதிப்படைந்தவர்கள்தான் முண்டியடித்துக் கொண்டு சுவரோவியங்களைப் பார்ப்பார்கள் என்ற நிலையைமாற்றி பரவசப்படுபவர்கள்தான் முதலில் பார்ப்பார்கள் என்ற மாற்றத்தை காலத்துக்கு கட்டாயமாக கட்டிவைக்க முயல்கின்றது இலங்கையின் புது அரசு!
தெருச் சித்திரம் (STREET ART) வரைகலை (GRAPHIC) கிறுக்கல் (GRAFFITI) சுவரோவியம் (MURAL) போன்ற பல பெயர்கள் திடீரெனக் காணமற்போய் தற்காலத்தில் வாழும் சுவர் ( LIVING WALL) என்ற புதுப் பெயர் பொலிவு பெறுகின்றது.
முன்பு ஒரு காலத்தில் ஊருக்குள் நம்ப முடியாத செய்திகளை நம்ப வைத்ததில் தெருச்சித்திரங்களுக்கும் பங்கிருந்தது.
பாடசாலை கழிவறைகள் தொடக்கம் தெரு மதகுகள் சிதிலமடைந்த மதிற் சுவர்கள் மயான மண்டபங்கள் போன்றன கரித்துண்டுகளாலும் பச்சிலை களாலும் கிறுக்கர்களின் களமாகி கிறங்கடித்தன.
அசுத்தமான இடங்கள் அவர்களுக்கு தடையாக இருந்ததுமில்லை.
அசிங்கமான வார்த்தைகளுக்கு அவர்கள் தடை விதித்ததுமில்லை.
வியப்பு – திகைப்பு – தவிப்பு – முறைப்பு – வெறுப்பு – கடுப்பு என பல உணர்வுகள் பாதிப்படைந்தவர்களிடம் மட்டுமல்ல அவற்றை பார்த்தவர் களிடமும் ஏற்பட வேண்டும் என்ற கற்பனையுடன் அந்த கிறுக்கர்கள் அநாமதேயமாகவே சிரித்தார்கள்.

அந்த கிராமிய நினைவுகள் பலருக்கு இப்பொழுதும் மங்கலாக ஞாபக இடுக்குகளில் அப்பியிருக்கும்.

அரசை விமர்சித்தும் இவிழிப்புணர்வை ஏற்படுத்தியும் இரகஸிய தகவல்களை பகிரங்கமாக்கியும் இநாட்டு நடப்புடன் கேலி பேசியும் ஏனைய கண்டங்களில் மனங்களை கொள்ளை அடிக்கும் இவ்வித வாழும் சுவர் ஓவியங்கள் இலங்கையில் மட்டும் கலை கலாசார பாரம்பரிய சித்திரிப்புகளுடன் மனங்களை வெள்ளை அடிக்கும் தனது இப்போதைய பணியுடன் நிறுத்திக் கொள்ளும்.
ஆனால் அதே விழிப்புணர்வும் இரகஸிய தகவல்களும் நாட்டு நடப்புகளும் என்றோ ஒரு நாள் மறைவிடங்களை விட்டு வெளியேறி இதே பொது இடங்களில் வந்து சிரிக்கும் சந்தியாக சாட்சியமளிக்காமலா இருக்கப் போகின்றன. வாழும் சுவர்கள் என்ற பதத்தை உலகிற்கு அறிமுகப்படுத் தியவர் பாங்ஸி (BANKSY).
மேற்குலகில் குறிப்பாக இங்கிலாந்தில் பல காலமாக வாழும் சுவர்களுடன் பாங்ஸி என்ற பெயரும் விழிக்கும் வீதிகளில் சுவர்களுடன் வாழ்கின்றது.
அவர் சுவர்களில் புதுமை புகுத்தும் சைத்திரிகர் மட்டுமல்ல தீவிர அரசியல் ஈடுபாடு உடையவர் திரைப்பட இயக்குனர்.
உலகின் பல நாடுகளின் தலைநகரங்களில் பாங்ஸியின் கைவண்ணம் மக்களின் மகோன்னத வரவேற்பு பெற்றுத் திகழ்கின்றது.
2010 ம் ஆண்டு உலகின் மிகவும் சக்தி வாய்ந்த 100 மனிதர்களில் பாங்ஸியும் ஒருவர் என்றது டைம் சஞ்சிகை. பாங்ஸியின் தெருச் சித்திரங்கள் வித்தியாசமானவை.
சித்தரிக்கும் விதத்தில் சித்தரிப்பதால் அவசர அலுவல்களுக்குக் கூட அசையாதவர்களையும் பிரமிப்பூட்டுவது பாங்ஸியின் பாணி.
வெற்றுச் சுவர்களா? அவை போன்ற கொலைக்களங்கள் வேறில்லை என்ற கருத்துடைய பாங்ஸியின் சுவரோவியங்கள் ஜேர்மனியில் மட்டும் 36 முக்கிய இடங்களில் மக்கள் கவனத்தை கவர்கின்றன.



ஹாம்பேக்கிலிருந்த சிறுமி அரவணைத்த வெடி குண்டு ஜேர்மன் மக்களால் வெடிகுண்டு அர வணைத்த சிறுமியாகவே பார்க்கப்பட்டது.
அநியாய உயிரிழப்பால் உறையும் குருதி அப்பாவி பொது மக்களின் குருதியாகவே அத னைப் பார்த்த ஜேர்மனியரின் கண்களில் பிசு பிசுத்தது.
பெர்லின் மதில் மீதே தீட்டப்பட்ட பெர்லின் சுவர் உடைபடுவது நியாய மானது என்ற கருத்திலான பாங்ஸியின் ஓவியத்தில் மக்கள் வெள்ளம் கரை புரண்டது.
மூனிச்சில் காணப்பட்ட சிவப்பு பலூனை நோக்கி நீளும் சிரியா சிறுமியின் கை (Girl with Baloon) என்ற தெருச் சித்திரம் பிரதி எடுக்கப்பட்டு 1.2 மில்லியன் அமெரிக டாலர் ஏலத்தில் விற்பனை யானது. வெற்றுச் சுவர்கள் உலகெங்கும் இனி வெறும் சுவர்களல்ல. அவை வாழும் சுவர்கள்.

**ஹாம்பேக்கிலிருந்த சிறுமி அரவணைத்த வெடிகுண்டு யேர்மன் மக்களால் வெடிகுண்டு அரவணைத்த சிறுமியாகவே பார்க்கப்பட்டது.**












# உலகை வியக்க வைத்த தமிழ் விஞ்ஞானிகள்

## Dr.நிரோஷனின் அதிசய உலகம்


உலகெங்கும் பரவி வாழ்ந்து வரும் நமது தமிழர்களில் ஒருவர் சாதனை ஒன்றைப் படைத்தால் அதை எண்ணி ஒட்டுமொத்த தமிழ் மக்களும் பெருமைப் படுவர். அது கூகுள் நிறுவனத்தின் முதன்மை செயல் அலுவலரான சுந்தர் பிச்சையாக இருக்கட்டும் அல்லது பாக்கு நீரிணையை முதல் நீந்திக் கடந்த நவரத்தினசாமி ஆகட்டும்,கின்னஸ் உலக சாதனை படைத்த விவேகானந்தன் செல்வகுமார் ஆனந்தனாகவும் இருக்கட்டும், இவர்களால் தமிழுக்கும் தமிழர்களுக்கும் பெருமை நிச்சயம்.
அறிவியலில் மிகவும் ஆர்வம் கொண்ட நான் பெரும் ஆச்சரியத்துடன் அறிந்துகொண்ட விடயம் என்னவென்றால் நமது தமிழர்கள் பல்வேறு அறிவியல் துறைகளில் மாபெரும் சாதனைகளை படைத்திருக்கின்றனர் என்பது தான். அவ்வாறு வியப்பூட்டும் அந்த விஞ்ஞானிகள் யார் தெரியுமா?

22.12.1887 அன்று கணித மாமேதை ஒருவர் பிறந்தார். இன்று வரை பலரால் ஆங்கிலத்தில் கூட ஆயவாநஅயவஉைல புநைரள என்று அழைக்கப்படும் இவர், நமது தமிழர்களுக்கே பெருமை சேர்த்துத் தந்தவர் ஆவார். அது வேறு யாரும் இல்லை தமிழ் நாட்டைச் சேர்ந்த, தமிழர் ஆகிய சீனிவாச இராமானுஜன் அவர்கள் தான். இவரிலுள்ள வியப்பூட்டும் விடயம் என்ன தெரியுமா? 13 வயதிலேயே கணிதத்தின் அடிப்படையான ஆழ் உண்மைகளை யாருடைய உதவியும் பெறாமல் சுய முயற்சியில் கற்றுக்கொண்டார். தொடர்ந்து 15 வயதில் „Synopsis of Elementary Results in Pure and Applied Mathematics“ என்கின்ற புத்தகத்தைப் படித்ததிலிருந்து, இவர் 3000கும் மேலான புதிய கணிதத் தேற்றங்களை (mathematical theorems) கண்டுபிடித்தார். இவரது தேற்றங்கள் இன்று இயற்பியல் முதல் மின்தொடர்புப் பொறியியல் போன்ற பல துறைகளில் பயன்படுத்தப் படுகின்றது.
கவலைக்கிடமான விடயம் என்னவென்றால், சீனிவாச இராமானுஜன் அவர்கள் 26.04.1920 அன்று 33 வயதிற்கு முன்னரே இறந்துவிட்டார். அவர் தொடர்ந்து பல்லாண்டுகள் வாழ்ந்திருந்தால் இன்றைய கணிதத்தை மாற்றி அமைத்திருப்பார் என்பதில் சந்தேகமே இல்லை. இன்று இந்த மாமேதையைக் கௌரவிப்பதற்காக „The Ramanujan Journal“, „Journal of the Ramanujan Mathematical Society“ மற்றும் „HardyRamanujan Journal“ என்னும் கணித ஆய்விதழ்கள் வெளியிடப் படுகின்றது. அது மட்டும் இல்லாமல் அவர் பெயரில் சாஸ்த்ரா இராமானுஜன் பரிசு (SASTRA Ramanujan Prize), இன்று ஒவ்வொரு வருடமும் அவர் ஆர்வம் கொண்ட கணிதத் துறைகளில் சாதனைப் படைத்த கணிதவியலாளர்களுக்கு வழங்கப்படுகிறது.
உலக அளவில் சரித்திரத்தில் மிகவும் புகழ் பெற்ற இன்னுமொரு தமிழ் அறிவியல் அறிஞர் யார் என்று கேட்டால், அது நிச்சயமாக சந்திரசேகர வெங்கட ராமன் அல்லது பொதுவாக எல்லோராலும் சி. வி. ராமன் (C.V. Raman) என்று அழைக்கப்படும் இயற்பியலாளர் ஆவார். 07.11.1888 21.11.1970 வரை வாழ்ந்த இவருக்கு 1930ம் ஆண்டில் ராமன் விளைவு எனப்படும் அவரின் கண்டுபிடிப்புக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது. இந்தப் பரிசைப் பெற்ற முதல் தமிழர் என்கின்ற பெருமையும் இவரை சென்றடையும். இதில் உள்ள அதிசயம் என்ன தெரியுமா? ராமன் விளைவு பற்றிய அவரது ஆராய்ச்சியை செயலாக்கம் பண்ண அவர் உபயோகித்த பொருட்களின் மதிப்பு அந்நேரத்தின் 200 ரூபாய்கள் மட்டும் தான். இதுவே இன்று அவரது கண்டுபிடிப்பை மறுபரிசோதனை செய்வதற்குப் பல கோடிகள் செலவிடப்பட்டுள்ளது.

தமிழர்களுக்குப் பெருமை சேர்த்த மற்றுமொரு நோபல் பரிசு வென்றவர் சுப்பிரமணியம் சந்திரசேகர் ஆவர். இதில் குறிப்பிடவேண்டிய விடயம் என்னவென்றால், இவர் C.V. ராமனின் உறவினர் என்பது தான். 19.10.1910இல் லாகூரில் (பாக்கிஸ்தான்) உதயமான இவர், தனது ஆரம்பக் கல்வியைத் தன் தந்தை மற்றும் தனிப்பட்ட ஆசிரியரின் உதவியோடு பெற்றுக் கொண்டார். பின்னர் 1918ஆம் ஆண்டு சென்னையில் இடைநிலைக் கல்வியையும், இயற்பியல் துறையில் மேற்கல்வியையும் தொடர்ந்தார். கொம்தன் சிதறுகை மற்றும் புதிய புள்ளிவிவரம் (Compton Scattering and New Statistics) பற்றி இவர் எழுதிய முதல் ஆராய்ச்சிக்கு கட்டுரை 1928ஆம் ஆண்டு "Proceedings of the Royal Society" எனும் அறிவியல் இதழில் பிரசுரிக்கப்பட்டது. இவரின் இந்த அபார ஆராய்ச்சியின் பலனாக கேம்பிரிட்ஸ் பல்கலைக்கழகத்தில் பயில இவருக்கு வாய்ப்புக் கிட்டியது. வெள்ளைக் குள்ள நட்சத்திரங்களின் கோட்பாட்டு தத்துவத்தை வழங்கிய இவர் தன்னுடைய டாக்டர் பட்டத்தை 1933ஆம் ஆண்டில் பெற்றார். இதனைத் தொடர்ந்து சிக்காகோ பல்கலைக்கழகத்தில் வானியல் விரிவுரையாளராகப் பணி புரிந்து வந்தார். பணியில் சேர்ந்த பின் பல உயர்தரப்பட்ட ஆராய்ச்சிகளை மேற்கொண்ட இவர் 1958ஆம் ஆண்டு அமெரிக்காவின் குடியுரிமையைப் பெற்றார். 1983ஆம் ஆண்டு, தன்னுடைய 73 ஆவது வயதில் நட்சத்திரங்கள் மற்றும் அவைகளின் பரிணாம வளர்ச்சி குறித்த இவரின் ஆராய்ச்சிப் பணிக்காக இயற்பியல் துறைக்கான நோபல் பரிசை வென்றார். வயது முதிர்ந்தாலும் அறிவியல் துறையில் பல சாதனைகளை மேற்கொண்ட இவர், 50கும் மேற்பட்ட டாக்டர் பட்டதாரிகளை உருவாக்கியுள்ளார். இவரின் சில மாணவர்களும் நோபல் பரிசை வென்றுள்ளனர் என்பது மிகவும் வியப்பான விடயம் ஆகும். பல தலைப்புகளில் சுமார் 10கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்ட இவர், 21.08.1995 இல் தன்னுடைய 84-வது வயதில் சிக்காகோ நகரில் இயற்கை எய்தினார்.

அடுத்து வரும் விஞ்ஞானியைச் சுருக்கமாகத் தமிழ் விஞ்ஞானிகளில் சூப்பர் ஸ்டார் என்றே அழைக்கலாம். இவரைப் பற்றி அறியாத தமிழர் இருக்க மாட்டார். அப்படிப் புகழ் பெற்ற தமிழ் விஞ்ஞானி வேறு யாரும் இல்லை 15.10.1931இல் இராமேஸ்வரத்தில் உதயமான டாக்டர் ஆ. ப. ஜெ. அப்துல் கலாம் (Avul Pakir Jainulabdeen Abdul Kalam) அவர்கள் தான். இவரில் உள்ள விசேஷம் என்னவென்றால், இவர் முதலில் இயற்பியலில் பட்டம் பெற்றதும், அதில் ஆர்வம் இல்லாமல் போனதால் அடுத்ததாக விண்வெளி பொறியியல் படித்த பின் சிறந்த அறிவியலாளராக பணிபுரிந்தார். இவர் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்திலும் (DRDO) இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்திலும் (ISRO) விண்வெளி பொறியாளராக பணியாற்றினார். வாழ்நாள் அறிவியலாளராகக் கருதப்படும் இவர், 1998ம் ஆண்டில் இவர் மேற்கொண்ட அணு ஆயுத சோதனையால் உலகமே போற்றும் மனிதராகத் திகழ்ந்தார். 2002ம் ஆண்டில், கோச்சேரில் ராமன் நாராயணன் அவர்களை எதிர்த்துத் தேர்தலில் வென்று, இந்தியாவின் 11-வது குடியரசுத் தலைவரானார்.

இதில் வியப்பூட்டும் விடயம் என்ன தெரியுமா? அவருக்கு பத்ம பூசண், பத்ம விபூசண் மற்றும் இந்தியக் குடிமக்களுக்கு வழங்கப்படும் மிக உயர்ந்த விருதாகிய பாரத ரத்னா விருதும் வழங்கப்பட்டது. இது எல்லாம் போதாது என்று 40கும் மேற்பட்ட பல்கலைக் கழகங்கள் அவருக்குக் கௌரவ டாக்டர் பட்டங்களைக் கொடுத்துள்ளன. இவர் 27.07.2015 83-வது வயதில் காலமானார்.





G.Vijay Home Designer
Sauber- Professionell - Pünktlich-Preiswert
web.www.vijay-home-designer.de
உங்கள் வீடுகளை
சிறப்பாக வடிவமைக்க நாடுங்கள்!
சிறந்ததொழில் தேர்ச்சிபெற்வர்களால்
குறித்த நேரத்தில் குறைந்த செலவில்
நேர்த்தியாகச் செய்து தரப்படும்.
e.mail:G.Vijay@outlook.de
Kleiststrasse 07
41844 Wegberg
Germany
Inh.: Gunaratnam Vijayakumar
Telefon: +49 176 72 21 84 66
Facebook:
Vijay Home Designe Gunaratnam
0176 7221 8466

# சும்மா இருந்திருக்கலாமோ?




ஜூட் பிரகாஷ் அவுஸ்திரேலியா

**சும்மா இருத்தல்**
**சும்மா இரு**

யாழ்ப்பாணமும் மட்டக்களப்பும் முதியோர் இல்லங்கள் போலாகி விடும்.

சும்மா இருக்கிறது ஒன்றும் லேசுபட்ட வேலையில்லை. வேலை..வேலை.. பிஸி..பிஸி என்னு அலுத்துக் கொண்டே ஓடித் திரியிறவனைக் கூப்பிட்டு, சும்மா இருக்க வைத்தால் அவனுக்கு மண்டையே வெடித்து விடும்.. யாராலும் சும்மா இருக்கேலாது.

" யாரு வேணுமென்டாலும் சும்மா இருக்கலாம்" என்று சவால் விடும் புளிமூட்டையை வடிவேலு வச்சு செய்யும் "கற்க கசடற" திரைப்பட comedy காட்சியையும் இந்த நேரத்தில் நினைவூட்டுவதும் பொருத்தமானது.

சும்மா இருப்பது ஒரு பிரச்சினை என்றால், சும்மா இருப்பதாலும் பிரச்சினைகள் வரும், சும்மா இருப்பவர்களாலும் பிரச்சினை வரும். நேர்மறையாக, சில நேரங்களில் சும்மா இருப்பது தான் சரியான தேர்வாக இருக்கும், சும்மா இருப்பதாலும் பிரச்சினைகள் தீரும்.
ஊசஉைமநவ விளையாட்டில் நன்றாக அடித்து ஆடிக்கொண்டிருக்கும் Batsman, off stump க்கு வெளியே சிவனே என்று போய்க் கொண்டிருக்கும் பந்தை சொறிய வெளிக்கிட்டு, keeper டம் பிடி கொடுத்து out ஆவான். Pavilion நோக்கி batsman நடந்து கொண்டிருக்கும் போது, அவனது மண்டை சொல்லும்.. சும்மா இருந்திருக்கலாம்.

கிரிக்கெட்டைப் போலத் தான் வாழ்க்கையிலும் அரசியலிலும் சும்மா இருப்பதற்கான தருணங்கள் நிறையவே வரும். சும்மா இருக்க வேண்டிய நேரத்தில் சும்மா இருக்காமால், எதையாவது செய்துவிட்டு பிறகு தலையைச் சொறிந்து கொண்டருக்க வேண்டிய நிலைக்கு நாங்கள் தள்ளப்படுவோம்.

சரியாக ஓராண்டிற்கு முன்னர், இலங்கையின் அரசியல் யாப்பை தூக்கிக் கடாசி விட்டு, மைத்ரி மகிந்தவை பிரதமாரக்க, சும்மா இருக்கப் போன ரணிலிற்காக, சும்மா இருக்க முடியாமல் நீதிமன்றத்தில் வழக்கு போட்டு, வாதாடி இலங்கையின் ஜனநாயகத்தையே மீட்டுத் தந்தது சுமந்திரனும் வுயேயும் தான்.

மீண்டும் பதவிக்கு வந்த ரணில், ஜனநாயக மீட்பில் கிடைத்த வெற்றியை கட்சியை பலப்படுத்தவும் பயன்படுத்தவில்லை, மீட்டுத் தந்த தமிழர்களிற்கு நன்மைகள் தரவும் பயன்படுத்தவில்லை, பொருளாதாரத்தை வலுப்படுத்தவும் பயன்படுத்தவில்லை, ஏன் ஈஸ்டர் தாக்குதலை தடுக்கவும் பயன்படுத்தவில்லை. மாறாக, ரணில் பிரதமர் பதவியை வைத்துக் கொண்டு சும்மாவே இருந்தார். ரணில் சும்மா இருந்ததால் தான் சஜித் தோற்றார் என்று அன்னத்திற்கு வாக்களித்த சிங்களச் சனம் அல்லோலப்படுது.

2015ல் ஆட்சிக்கு வந்த போது, இந்தா ஊழலை பிடிக்கிறேன், அந்தா கொலைகார மகிந்த குடும்பத்தை கூண்டுக்குள் தள்ளுகிறேன் என்று முழக்கமிட்ட ரணில், ஆட்சிக்கு வந்ததும் விசாரணைக் குழுக்களை அமைத்து விட்டு சும்மா தான் இருந்தார். விசாரணைகளில் ஆதாரங்கள் வெளிவந்த போதும், குற்றவாளிகளை ஒன்றும் செய்யாமல் ரணிலின் அரசாங்கம் சும்மா தான் இருந்தது.

2015 செப்டெம்பரில் சர்வதேசத்தோடு சேர்ந்து இணையனுசரணை வழங்க ஜெனிவாவில் தீர்மானத்தை நிறைவேற்றி விட்டு, ஒப்புக்கு சப்பாணியாக சில காரியங்களை ஒப்பேற்றி விட்டு, ரணிலின் அரசு சும்மா தான் இருந்தது.

ரணில் அரசு சும்மா இருப்பதை பார்த்துக் கொண்டு, மேலும் மேலும் கால அவகாசங்கள் வழங்கிக் கொண்டு ஐநாவும் அமெரிக்காவும் சர்வதேசமும் சும்மா தான் இருந்தன, இன்னும் சும்மா தான் இருக்கின்றன.
ஈஸ்டர் தாக்குதல் நடக்கப் போகுது, தற்கொலை குண்டுதாரிகள் வெடிக்கப் போகிறார்கள், இந்த அவங்கட பெயர் விபரங்கள் என்று அச்சொட்டாக வந்திறங்கிய உளவுத் தகவல்களை வைத்துக் கொண்டும், சும்மா இருந்த மைத்ரியின் குழுவால் தான் நூற்றுக்கணக்கானோர் உயிரிழக்கவும் நேரிட்டது.

ஈழப் போரின் இறுதிக் கட்டத்தில், மனிதப் பேரவலம் ஒன்று தன் கண்முன்னே அரங்கேறுவதைப் பார்த்துக் கொண்டும், ஐநாவும் சர்வதேச நாடுகளும் சும்மா தான் இருந்தன.


இறுதிப் போரில் போர்க் குற்றங்கள் நிகழ்ந்ததாக அறிக்கைகள் வெளியிட்டு விட்டு, அவற்றை விசாரித்து நீதி வழங்க வேண்டும் என்று ஜெனிவாவில் ஆண்டு தோறும் தீர்மானங்கள் நிறைவேற்றி விட்டு, சர்வதேசம் இன்றும் சும்மா தான் இருக்கிறது.
1987ல் செய்து கொண்ட இந்திய-இலங்கை ஒப்பந்தத்தில் உதித்த 13வது திருத்தச் சட்டத்தின் அதிகாரங்கள் அதிகம் என்று சிங்களம் கதற, அதுவே காணாது என்று நாங்கள் கூப்பாடு போட, 13வது திருத்தச் சட்டத்தின் அதிகாரங்கள் முழுமையாகப் பகிரப்படாமல் சும்மா தான் இருக்கின்றன.

இலங்கையின் புதிய ஜனாதிபதி கோட்டாவின் முன்னிலையில் இந்திய பிரதமர் மோடி 13வது திருத்தச் சட்டம் அமுல்படுத்தப்பட வேண்டும் என்று சொன்ன போது கோட்டா சும்மா தான் இருந்தார். அது முடிய, இந்து பத்திரிகைக்கு பேட்டியளித்த கோட்டாவோ 13 தரமுடியாது என்று சொன்ன போது இந்தியாவும் சும்மா தான் இருந்தது.

யாழ்ப்பாணத்தில் வெளியாகும் பத்திரிகைகளுக்கு மட்டும், கோட்டாவின் கருத்தால் இந்தியா கடும் அதிருப்தி, நெருப்பெடுக்கப் போகுது அது இது என்று சும்மா செய்தியை கசிய விட்டு விட்டும் இந்தியா சும்மா தான் இருக்கிறது.
2005 ஜனாதிபதி தேர்தலில், நாங்கள் பகிஷ்கரித்தால் மகிந்த வருவார் என்று தெரிந்தும், நாங்கள் சும்மா இருந்ததால் வந்த வினை இன்று மகிந்தவைத் தாண்டி கோட்டாவிடம் வந்து நாளை நாமல் வரும் போதும் அனுபவிக்க வேண்டி வரப் போகிறது.
2019 தேர்தலிலோ, ஒரு தமிழ்க் கட்சி கோட்டாக்கு வழி விட நாங்கள் சும்மா இருப்போம் என்று அறைகூவல் விட, மற்ற தமிழ்க் கட்சிகள் எல்லாம் இணைந்து சும்மா இருக்கேலாமல் 13 அம்சக் கோரிக்கை ஒன்றை முன்வைத்து, இதை ஏற்பவர்களிற்கே எங்கள் வாக்கு என்று அறிக்கை விட வந்தது வினை. சும்மா இருக்கேலாமல் நாங்கள் விட்ட அறிக்கையை, கோட்டா தரப்பு வலுக்கெட்டித்தனமாக அதனது இனவாத அடிப்படையிலான பிரச்சாரத்திற்கு பாவித்து, தேர்தலில் அக்கறையில்லாமல் சும்மா இருந்த சிங்களவனையும் உசுப்பேத்தி கோட்டாவிற்கு வாக்களிக்க வைத்ததில் வெற்றியும் கண்டது.

தொடர்ச்சி 35 ம் பக்கம்





# திருமந்திரமும் வாழ்வியலும் 47

(சைவசித்தாந்த ரத்தினம் நாகேந்திரம் கருணாநிதி)

**இந்நூலில் சிவம் எனவரும் சொல்லுக்கு இறைவன் என்னும் கருத்தைக் கொள்வோமானால் இந்நூல் எல்லா மதத்திற்கும் பொது நூலாக அமைவதைக் காணலாம்.**

## அட்டமா சித்தி (எட்டு வகைச் சித்திகள்) - (பாகம் 2)

மகிமா சித்தி பெற்றவர் காலத்தைக் கட்டுப்படுத்துவார்கள் எனக் கூறும் திருமந்திரப் பாடல் எண் 677

"ஆகின்ற கால்ஒளி யாவது கண்டபின்
போகின்ற காலங்கள் போவதும் இல்லையாம்
மேல்நின்ற காலம் வெளியுற நின்றபின்
தான்நின்ற காலங்கள் தன்வழி ஆகுமே"

ஆகிவரும் நன்மைகளை எல்லாம் தரவல்ல, மூச்சுக் காற்றாகிய பிராணன், இடகலை பிங்கலை என்னும் இடப்பக்கம், வலப்பக்கம் சென்று, புருவ மத்தியிலே பொருந்துகின்ற போது தெரியும் சோதி ஒளியைக் கண்டபிறகு, விரைந்தோடிச் செல்கின்ற காலங்கள் வீணாவதில்லை. இனிவரும் காலம் எதிர்நோக்கி இருக்க, இனித் தான் வாழ உள்ள காலங்கள் தன்வசமாக இருக்கும். (காலம் இவரைக் கட்டாது, காலத்தை இவர் கட்டுவார்)

மகிமா சித்தி பெற்றவருக்குச் சிவன் அருள் கூடும் எனக் கூறும் பாடல் எண் 678

"தன்வழி யாகத் தழைத்திடு ஞானமும்
தன்வழி யாகத் தழைத்திடு வையகம்
தன்வழி யாகத் தழைத்த பொருள் எல்லாம்
தன்வழி தன்னருள் ஆகிநின் றானே"

மகிமா சித்தி பெற்றவன் மூலமாக, அறிவு விருத்தியாகும். அவன் மூலமாகவே உலகம் செழித்துத் தழைக்கும். அவன் மூலமாகவே உலகத்துப் பொருட்கள் எல்லாம் பொலிவுறச் சிறக்கும், பெருமை பெறும். இப்படியாக மகிமா சித்தி பெற்றவன் தான் பெற்ற அந்த ஆற்றலின் அருள் வலிமையால், சிவனருள் கூடப் பெற்றுச் சித்தி பெற்றவனும் ஆனான்.

எட்டுவகைச் சித்திகளில் ஒன்றான கரிமா (காலத்தை வெல்லும் கலை) பற்றிய பாடல் எண் 680

"ஆகின்ற மின்ஒளி ஆவது கண்டபின்
பாகின்ற பூவில் பரப்பவை காணலாம்
மேகின்ற காலம் வெளியுற நின்றது
போகின்ற காலங்கள் போவதும் இல்லையே"

புருவ நடுவில் பிராணன் பொருந்தியிருக்கத் தெரிகின்ற ஒளிச்சுடரைக் காணுகிற பக்குவம் அடைந்தவுடன், விரிந்தகலுகின்ற உள்ளத் தாமரையில், உலகப் பரப்பில் உள்ள பொருட்களை எல்லாம் காணலாம். இந்த நிலையில், தொடர்கின்ற காலங்கள் அவர்களைத் தீண்டுவதில்லை. அவர்களை விட்டு விலகி நிற்கும் கால வேறுபாடுகள். விரைந்தோடிக் கழிகின்ற காலம் அவர்களை ஒன்றும் செய்வதில்லை. அவர்கள் அதனால் எந்தப் பாதிப்பும் அடைவதில்லை. காலத்தை வெல்லும் கலை இந்தக் கரிமா என்னும் சித்தியாகும்.

கரிமா சித்தி பெற்றவர்கள் பெறும் அதி உன்னத சக்தி பற்றிய பாடல் எண் 681

"போவது ஒன்றில்லை வருவது தான்இல்லை
சாவது ஒன்றில்லை தழைப்பது தான்இல்லை
தாமதம் இல்லை தமர்அகத் தின்ஒளி
ஆவதும் இல்லை அறிந்துகொள் வார்க்கே"

முன் பாடலில் கூறிய உள் ஒளியைக் காணப் பெற்றவர்களுக்கு இழப்பதற்கு ஒன்றுமில்லை, புதிதாக அடைவதற்கும் ஒன்றுமில்லை. இவர்கள் இறப்பதும் இல்லை, மீண்டும் பிறப்பதும் இல்லை. தாமச குணம் அவர்களிடம் காணப்பெறுவதும் இல்லை. தம்முடைய உள்ளத்தில் உண்டாகின்ற சாத்விகம், இராசதம், தாமசம் ஆகிய குணங்கள் ஒன்றுவதில்லை. உள்ளொளி கண்டுணர்பவர்களுக்கு இவை எல்லாம் சாத்தியம் ஆகும்.

கூடுவிட்டுக் கூடு பாயும் வித்தையைக் கூறும் பாடல் எண் 682

"அறிந்த பராசக்தி உள்ளே அமரில்
பறிந்தது பூதப் படைஅவை எல்லாம்
குவிந்து அவை ஓராண்டு கூடஇருக்கில்
விரிந்த பரகாயம் மேவலும் ஆமே"

உள்ளம் உணர்ந்த அன்னை பராசக்தி உள்ளத் தாமரையில் ஒன்றிடப் பெற்றவர்களுக்கு, மனதை அலைக்கழிக்கும் புலனிச்சைகளும், மற்ற தீய குணங்களும் விலகி விடும். மன உணர்வுகள், புலன்கள் ஒருமுகமாகக் குவிந்து, ஓராண்டு புலன்கள் அடங்க இருந்தால், மிக உயர்ந்த விரிவானதான, மற்ற உடலுக்குள் புகுந்து வெளியேறும் சித்தியும் கைகூடும்.

எட்டுவகைச் சித்திகளில் ஒன்றான இலகிமா (காற்றைப் போல இலேசாகும் சித்தி) பற்றிய பாடல் எண் 674

"ஆகின்ற அத்தனி நாயகி தன்னுடன்
போகின்ற தத்துவம் எங்கும் புகலதாய்ச்
சாகின்ற காலங்கள் தன்வழி நின்றிடின்
மாய்கின்ற ஐயாண்டில் மாஇலகு வாகுமே"

ஆகிவருகிற பயன்களை எல்லாம் தரவல்ல, பராசக்தியின் அருளால், மூலாதாரத்தில் இருந்து மேலே செல்லும் எல்லா நிலைகளிலும், அப்பராசக்தி திருவருள் அதுவே துணையாக, கழிந்தோடுகின்ற காலங்கள் சென்று மறையத் தவயோகம் செய்தபடி இருந்தால், ஐந்தாண்டு கால முடிவில், மிகப்பெரும் சித்தியான இலகிமா கைவரப்பெறும்.

இலகிமா சித்தியை அடைந்ததும் பரம்பொருளைக் கண்டறியலாம் எனக் கூறும் பாடல் எண் 675

மாஇலகு வாகிய மாயனைக் கண்டபின்
தான்ஒளி யாகித் தழைத்துஅங்கு இருந்திடும்
பால்ஒளி யாகிப் பரந்துஎங்கு நின்றது
மேலொளி ஆகிய மெய்ப்பொருள் காணுமே"

மாபெரும் சித்தியான இலகிமா என்னும் மாயம் பல செய்ய வல்ல சித்தியை அடைந்தவுடன், தானே ஒளியாகத் தன்னுள்ளே அருளாற்றல் பெருக, அந்த மகிழ்ச்சியில் திளைத்திருப்பார். இப்படித் திளைத்திருக்கும் காலத்தில், பால் போன்ற தூய வெள்ளை ஒளிச்சுடராய்த் தன்னைச் சுற்றித் தன் தவ ஆற்றல் நிலா வட்டமாகத் திகழ, எல்லாவற்றிற்கும் மேலான, மெய்யான பரம்பொருளைக் கண்டறிவார் தொடரும்...


மங்கல இசை
உங்கள் மங்கலகரமான வைபவங்கள் அனைத்திற்கும் நாடுங்கள்
ஐரோப்பிய தவில் சக்கரவர்த்தி
தவில் லயஞானச் சுடரொளி
கே.பி.செல்வநாயகம்
0049 157 388 27 634
0049 0178 666 44 26
0202 2713 698




Sukan Secure Versicherungsmakler
Kamalanathan Sukan Versicherungskaufmann


வீடு,வாகன, அனைத்துக்
காப்புறுதிகளுக்கும் எம்மை நாடுங்கள்
சிறந்தவற்றை உங்கள் தெரிவாகத் தருகின்றோம்.
Versicherungsmakler
-nach Erlaubnis 34d Abs. 1 Gew0
Mansfelder Str. 46 - 59073 Hamm
Telefon (02381) 3600762 - Fax (02381) 9297049 - Mobil (0179) 7190138


எம்மிடம் தங்க நகைகள் மற்றும்
மேலதிக சேவைகளும் உண்டு
ஓடர் நகைகள்
திருத்த வேலைகள்
காது, மூக்குத்தி குத்துதல்
பழைய நகைகளுக்கு பதிலாக சிங்கப்பூர் புதிய நகைகள் மாற்றி கொடுக்கப்படும்
தரமான ஆடைகளை நியாயமான விலையில் பெற்றுக்கொள்ளலாம்
Taunusstr. 49, 60329 Frankfurt am Main, 0152 1923 9663
opening hours: Mon-Sat 10.00 am - 20.00 pm
https://www.facebook.com/sari1fashionhouse
Sari 1


Frankfurt நகரில்...
Frankfurt (Main) Hauptbahnhof முன்பாக
50 மீற்றர் தொலைவில் அமைந்தள்ளது
New
ASIA LAND
மளிகைப்பொருட்கள் மற்றும்,மரக்கறி,
கடலுணவுப்பொருட்கள்
அனைத்தும்
என்றும் சிறந்த விலைக் கழிவில்
KADHIR
Laila
BASMATI
CURRY POWDER
Tel:069 23 35 35 Fax:069 24009760 TAUNUSSTRASSE 49 60329 FRANKFURT

32ம் பக்த் தொடர்ச்சி

# சும்மா இருத்தல் ....






**வேலையில்லாமல் சும்மா இருக்கும் எங்கள் உறவுகளிற்கு, வெளிநாட்டில் இருந்து சும்மா சும்மா காசு அனுப்புவதை நிறுத்தலாம்.**

இந்தமுறையும் சும்மா இருக்க முடியாமல் ஆட்டம் காட்டும் போது, அலற போகும் சிங்களத்தை பார்த்து சும்மா இருக்கும் நாங்களும் மகிழலாம், சிரிக்கலாம்.

சும்மா இருத்தல் காலம் என்பது அஞ்ஞாசவாம் காலத்தை போன்றது. உண்மையிலேயே அது ஒரு எதிர்காலத்திற்கான தயார்படுத்தல் காலம் என்றே கருதவேண்டும். சூதாட்டத்தில் தோற்ற பாண்டவர்கள், சும்மா இருக்க வேண்டிய அஞ்ஞாசவாச காலத்தில் சும்மா இருக்காமல் தங்களைத் தாங்களே பலப்படுத்திக் கொண்டு தான் குருஷேத்திர யுத்தத்திற்கு வந்தார்கள்.

ஜனநாயக விழுமியங்களை கடைபிடித்து ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட ஒருத்தரை, அவர் போர்க் குற்றவாளியாகவே இருந்தாலும், எந்த நாடும் புறந்தள்ளி ஒதுக்காது. இந்தியாவும் அமெரிக்காவும் சீனாவும் தங்கள் தங்களது நலன்களை பாதுகாத்துக் கொள்ள சும்மா இருக்கப் போவதில்லை, கோட்டாவின் அரசோடு ஊடாடப் தான் போகிறன.

எங்களது நீதியான நீண்டகால அபிலாஷைகளில் இருக்கும் நியாயங்கள் அவர்களது நலன்களிற்கு எந்த நன்மையும் தரமாட்டாது என்பதால், எங்களுடனான அவர்களது ஊடாட்டங்கள் சும்மா தேத்தண்ணி குடிக்கவும் படம் எடுக்கவும் மட்டுமே இருக்கப் போகின்றன.

அப்ப நாங்க என்ன செய்யலாம்?

யாழ்ப்பாணத்தின் யோகர் சுவாமிகள் சொன்ன மாதிரி "சும்மா இருக்க பழக" வேண்டியது தான். சும்மா இருக்கிறதை விட எங்களால் எதுவும் செய்ய முடியாது. அறவழியில் போராடியும் தோற்றோம், ஆயுத வழியும் சரிவரவில்லை, சர்வதேச இராஜதந்திரமும் பிழைத்து போய் விட்டது, அப்ப நாங்கள் இனி சும்மா இருந்து பார்க்க வேண்டியது தான்.

ஆடிய காலும் பாடிய வாயும் சும்மா இருக்காது என்பது போல, போராடி போராடி பழகிய எங்களிற்கு சும்மா இருக்கிறது வலு கஷ்டமாகத்தான் இருக்கும். அரசியலில் சும்மா இருத்தல் என்பது மருத்துவத்தில் "நயவை யனெ நயவஉா" போன்றதே. நோயாளிக்கு செய்ய வேண்டிய வைத்தியம் எல்லாம் செய்து விட்டு "let's wait and watch" என்று மருத்துவர்கள் முடிவெடுக்கும் அதே நிலையில் தான் நாங்கள் இருக்கிறோம்.

சும்மா இருக்க வேண்டிய இந்த காலத்தில், நாங்கள் சும்மா இருக்கேலாமல் இருந்தால், எங்கள் பிள்ளைகளை படிக்க வைக்கலாம். நலிவடைந்து போயிருக்கும் எங்கள் கல்விதரத்தை உயர்த்தலாம்.
அப்படியும் சும்மா இருப்பது அலுப்படித்தால்

வேலையில்லாமல் சும்மா இருக்கும் எங்கள் உறவுகளிற்கு, வெளிநாட்டில் இருந்து சும்மா சும்மா காசு அனுப்புவதை நிறுத்தலாம். வேலை செய்யும் விருப்பமுள்ளோருக்கு வேலை வீடு தேடி வராது என்ற உண்மையை இடித்துரைக்கலாம். வேலைவாய்ப்புக்களை உருவாக்கவல்ல தொழில்முனை வோருக்கு உதவிகள் வழங்கி ஊக்குவிக்கலாம்.

சும்மா இருக்கும் போது அண்ணனும் தம்பியும் நடாத்த போகும் ஆட்சியில் அரங்கேறப் போகும் கூத்துக்களை வேடிக்கைப் பார்க்கலாம். போன முறை ஆட்சியில் இருந்த போது சும்மா இருக்கேலாமல் கொள்ளை கொள்ளாயாக அடித்து, கூத்துக்கள் ஆடி பழகிப் போன இந்த அலிபாபா கோஷ்டி, நாங்கள் தேர்ந்தெடுத்த பாதைகள் எவையும் எங்களது இலக்குகளை நோக்கி எம்மை பயணிக்க முடியாமல் தடைபட்டு போயுள்ள இந்நிலையில், நாங்கள் சும்மா இருந்து எங்கள் பிள்ளைகளின் படிப்பிலும் அவர்களின் வேலையிலும் கவனம் செலுத்தி எங்களது இருப்பை நாங்களே தற்காத்துக் கொள்வதே சாலச் சிறந்ததாகத் தோன்றுகிறது.

படிப்பும் தொழிலும் இருந்தால் தான் நாளைய சந்ததியாவது நாட்டில் நிலைத்து நிற்கும். இல்லாவிட்டால் இளைய தலைமுறைகள் நாட்டை விட்டு ஓட, யாழ்ப்பாணமும் மட்டக்களப்பும் முதியோர் இல்லங்கள் போலாகி விடும்.

தம்பி JK அண்மையில் எழுதிய காந்தாரியுடனான உரையாடலிலும் சும்மா இருத்தல் concept பற்றி தொட்டிருப்பார். அதை வாசித்துவிட்டு, சும்மா இருத்தல் பற்றி எழுத உள்ளதைப் பற்றி சொல்ல, JK சொன்னார் "சும்மா இருக்கேலாமல் எங்கட சனத்தைச் சும்மா இருக்கச் சொல்லி சொல்ல போறியள்.. சும்மா இருங்கோவண்ணே"

சும்மா இருந்திருக்கலாமோ?







NEW
ARRIVAL
AGAM
Healthy and tasty Foods
அ.க.ம்
உங்கள் அபிமான வியாபார
ஸ்தாபனங்களில் கிடைக்கும்
Happy
Valentines Day - Feb.14
StaR-Impex
www.star-impex.de



# இயக்குநர் சிகரம்
# கே.பாலசந்தர்
## வாழ்வும் படைப்பும்



**வெற்றி மைந்தன்**

### எதிர் நீச்சல்

1968ம் ஆண்டு வெளியான திரைப்படம் எதிர் நீச்சல். கே.பாலசந்தரின் கதை திரைக்கதை வசனம் இயக்கத்தில் வெளியான படம். நாகேஷ், ஆர்.முத்துராமன், சௌகார் ஜானகி, ஜெயந்தி, மேஜர் சுந்தர்ராஜன், மனோரமா, எஸ்.என்.லஷ்மி என தனக்கு நெருக்கமான நடிகர் படையை வைத்து இந்தத் திரைப்படத்தை உருவாக்கினார் பாலசந்தர்.

அடுத்தாத்து அம்புஜத்தைப் பாத்தேளா, சேதி கேட்டோ சேதி கேட்டோ, தாமரைக் கன்னங்கள், வெற்றி வேண்டுமா என அனைத்துப் பாடல்களையும் வாலி எழுதியிருந்தார். பாடல்கள் பெரிய ஹிட் அடித்தன.

மாடிப்படி மாது வாக நாகேஷ் நடித்தது இன்றைக்கும் ரசிகர்களின் நெஞ்சை விட்டு நீங்கவில்லை. அதனால் தான் எதிர்நீச்சல் எனும் தலைப்பு சமீபத்தில் கூட ஒரு தமிழ்ப் படத்துக்கு மீள் பயன்பாடு செய்யப்பட்டது.

ஒரு குடித்தன வீட்டில் பல வேலைகள் செய்து வரும் ஒரு இளைஞன் நாகேஷ். பால்கனியின் அடியில் சுருண்டு படுத்துக்கொண்டு அவனுடைய வாழ்க்கை ஓடுகிறது. அப்படியே ஒரு நல்ல மனிதருடைய உதவியினால் படிப்பையும் தொடர்கிறார்.

இடையில் இவருடைய பழைய காதலியை சந்திக்கிறார். அவளுக்கு மனநிலை பாதிப்பு என மற்றவர்கள் நினைப்பதைத் தவறென நிரூபித்து, நாகேஷ் வாழ்க்கையில் உயர்வதை வெகு சுவாரஸ்யமாக எடுத்திருந்தார் பாலசந்தர்.

படத்தில் வீட்டு உரிமையாளரான, மலையாள நாயர் முத்துராமன். "சேதி கேட்டோ சேதி கேட்டோ சேட்டன் பத்தி சேதி கேட்டோ" என மலையாள வாடையுடன் வரும் பாடலை வாலி வசீகரமாக எழுதியிருப்பார்.

அதே போல அடுத்தாத்து அம்புஜத்தைப் பாத்தேளா பாடல் காலங்கள் கடந்து இன்றும் ரசனைகளில் இடம் பிடிக்கிறது.

இந்தப் படம் பின்னர் இந்தியிலும் எடுக்கப்பட்டது. மஹ்மூத் நடித்தார்.

இந்தப் படம் பாலசந்தருக்கு முதல் முக்கியமான விருதைப் பெற்றுத் தந்தது. சிறந்த திரைக்கதை ஆசிரியருக்கான தமிழக அரசின் விருது.
இதே ஆண்டு தாமரை நெஞ்சம் எனும் திரைப்படத்தையும் கதை திரைக்கதை வசனம் எழுதி இயக்கினார் பாலசந்தர். ஜெமினி கணேசனும் பாலசந்தரும் இணைந்த முதல் படம் அது. வாணிஸ்ரீ, சரோஜா தேவி உட்பட பலர் நடித்திருந்தார்கள். அந்தப் படத்துக்கும் சிறந்த திரைக்கதை ஆசிரியருக்கான தமிழக அரசின் விருது கிடைத்து அவரை இரட்டை மகிழ்ச்சியில் திளைக்க வைத்தது.
அந்த ஆண்டு அத்துடன் நிறைவு பெற்று விடவில்லை. தமிழிலும் இந்தியிலும் நுழைந்திருந்த பாலசந்தர் அந்த ஆண்டு முதன் முறையாக தெலுங்கு திரையுலகில் நுழைந்தார். கதை திரைக்கதை வசனம் எழுதி, தெலுங்கில் அவர் இயக்கிய முதல் படம் பலே கோடலு அந்த ஆண்டு தான் வெளியானது. 1968ம் ஆண்டு இப்படி அவரை மாறில அளவில் விருது வாங்க வைத்ததென்றால் அடுத்த ஆண்டு வெளியான படம் அவரை தேசிய விருது வாங்க வைத்தது !
அந்தப் படம் தான் தமிழ்த் திரையுலகம் என்றுமே மறக்க விரும்பாத, "இரு கோடுகள்"

தொடர்ச்சி 38 ம் பக்கம்





37 ம் பக்கத் தொடர்ச்சி

## இரு கோடுகள்




பூவா தலையா திரைப்படத்துடன் பாலசந்தரின் 1969ம் ஆண்டு தொடங்கியது. ஜெமினி கணேசன், ஜெய்சங்கர் இருவரும் நேருக்கு நேர் நடித்திருந்தனர். அவர்களோடு நாகேஷ், வரலக்ஷ்மி, வெண்ணிற ஆடை நிர்மலா, ராஜஸ்ரீ என பலரும் நடித்திருந்தார்கள். இந்தப் படத்தின் வெற்றி பிறகு இந்தத் திரைப்படம் வேறு மொழிகளில் வருவதற்கு அடித்தளமிட்டது.
தமிழக அளவில் பிரபலமடைந்து கொண்டிருந்த கே.பாலசந்தரை தேசமே நிமிர்ந்து பார்க்க வைத்த முதல் படம். இரு கோடுகள். ஜெமினி கணேசன், சௌகார் ஜானகி, ஜெயந்தி, நாகேஷ், வி.எஸ்.ராகவன், எஸ்.என்.லக்ஷ்மி என பலரும் நடித்திருந்தார்கள். கதை இது தான்.

ஜெமினி கணேசன் சௌகார் ஜானகியைக் காதலித்து காசியில் வைத்துத் திருமணம் செய்து கொள்கிறார். இந்தத் திருமணத்தை ஜெமினியின் அம்மா ஒத்துக் கொள்ளாததால் தம்பதியர் பிரிகிறார்கள். ஜானகி தாய்மையடைகிறார். அவளுடைய தந்தை அவளை கலெக்டராக்க முடிவெடுக்கிறார். ஜெமினி கணேசன் தென்னிந்தியாவுக்கு வருகிறார். அங்கே ஜெயந்தியைச் சந்திக்கிறார். தனது முதல் திருமணத்தை மறைத்து ஜெயந்தியைத் திருமணம் செய்து மகிழ்ச்சியாக வாழ்கிறார். அவர்களுக்கு மூன்று குழந்தைகள் பிறக்கின்றனர்.
ஜெமினிக்கு கலெக்டர் அலுவலகத்தில் கிளார்க் வேலை. அந்த அலுவலகத்துக்கு புது கலெக்டராக வருகிறார் இவருடைய முதல் மனைவி. இவர்கள் இருவருக்குமிடையே கசமுசா என கதை கட்டி விடும் நாரதராகிறார் நாகேஷ். விஷயம் ஜெமினியின் இரண்டாவது மனைவிக்குத் தெரிய வருகிறது.
இரண்டு மனைவியருக்கும் பிறந்த பிள்ளைகள் ராமுவும், பிரபாகரும் சுழியில் சிக்கி மருத்துவமனையில் இருக்கிறார்கள். உணர்ச்சிகரமான காட்சி நகர்வுகளுடன் இரண்டாவது மனைவி, தனது கணவனின் முதல் மனைவியை சகோதரியாய் ஏற்றுக்கொள்கிறாள். இதற்கிடையில் முதல் மனைவியில் குழந்தை மருத்துவமனையில் இறந்து விடுகிறது.
தனது குழந்தையையே அவர்களுக்காய் கொடுக்கிறாள் இரண்டாவது மனைவி. முதல் மனைவி மகனுடன் வெளிநாடு செல்கிறார்.
படத்தின் இயக்கமும், காட்சியமைப்புகளும் மிகவும் சிலாகித்துப் பேசப்பட்டன. இது தான் பாலசந்தர் பாணி. பாலசந்தர் கதை எழுதும் பாணியே வித்தியாசமானது. அவர் முதலில் கதை எழுதுவதில்லை. கதாபாத்திரங்களை உருவாக்குகிறார். கதாபாத்திரங்களைச் சுற்றி நிகழ்வுகளைப் பின்னுகிறார். அவற்றில் சுவாரஸ்யங்களையும் புதுமைகளையும், முடிச்சுகளையும் உருவாக்குகிறார். கடைசியில் திரைக் கதை உருவாகிவிடுகிறது.
இந்தப் படத்துக்கான பாலசந்தர் முதல் தேசிய விருதைப் பெற்றுக் கொண்டார். சிறந்த தமிழ் திரைப்படத்துக்கான தேசிய விருது இந்தப் படத்துக்குக் கிடைத்தது. படத்தில் மிகச் சிறப்பாக நடித்திருந்த சௌகார் ஜானகிக்கு தமிழக அரசின் சிறந்த நடிகைக்கான விருது கிடைத்தது. வெற்றிப்பட வரிசையில் இரு கோடுகள் இணைந்தது.



இந்தப் படத்தை பாலசந்தர் பிற்காலத்தில் கன்னடத்தில் இயக்கினார். ஒவ்வோர் ஆண்டும் ஒவ்வொரு படிக்கட்டாய் ஏறிக்கொண்டிருந்த பாலசந்தருக்கு 1970ல் என்ன நேர்ந்தது ? அவருடைய முதல் மலையாளப் பிரவேசம். படம் பீகர நிமிஷங்ஙள்.

நூற்றுக்கு நூறு
1970ம் ஆண்டின் இறுதியில் கே.பாலசந்தரின் கதை ஒன்று மலையாளத் திரையுலகில் நுழைந்தது. அந்தப் படம் பீகர நிமிஷங்ஙள். சத்யன், மது, ஷீலா, அடூர் பாஷி போன்றோர் முன்னணி கதா பாத்திரங்களில் நடிக்க உருவான படம் அது.
அந்த ஆண்டு நான்கு திரைப்படங்களை இயக்கினார் கே.பாலசந்தர். பத்தாம் பசலி, எதிரொலி, நவக்ரகம், காவிய தலைவி போன்றவையே அந்தப் படங்கள்.
இதில் சிவாஜிகணேசனை இயக்கிய “எதிரொலி“ திரைப்படம் வசூலில் சாதனை படைத்து வெற்றிப் படைப்பாக மாறியது.
ஜெமினி கணேசன் நடித்த காவியத் தலைவி தமிழக அரசின் சிறந்த நடிகருக்கான விருதை அவருக்குப் பெற்றுத் தந்தது.
அடுத்த ஆண்டு, 1971ல் பாலசந்தர் ஒரு திரில்லர் படம் எடுத்தார். அது நூற்றுக்கு நூறு. ஜெய்ஷங்கர் முதன்மைக் கதாபாத்திரத்தில் நடித்தார். ஒரு கல்லூரி பேராசிரியருக்கு எதிராக மூன்று பெண்கள் பாலியல் பலாத்கார குற்றச் சாட்டை வைக்கிறார்கள். அவருக்கு திருமணம் நடக்கப் போகும் சமயம் அது. என்னவாயிற்று எனும் பரபர திரைப்படம் அது. வசூலில் மிகப்பெரிய வெற்றியைப் பெற்றது.

இந்தப் படத்தின் ஒரு சிறப்பம்சம் உண்டு. இந்தப் படத்தில் தான் பாலசந்தரும் கமலஹாசனும் முதன் முறையாக இணைந்தார்கள். அந்தப் படத்தில் கமலஹாசனுக்கு அதிக வேலையில்லை. இருவரும் இணைந்த முதல் திரைப்படம் என்பதைத் தவிர அதில் சிலாகிக்க எதுவும் இல்லை என்பது தான் நிஜம். 1959ம் ஆண்டு களத்தூர் கண்ணம்மா திரைப்படம் மூலம் தமிழ் சினிமாவிற்குள் சிறுவனாக நுழைந்த கமலஹாசன், நூற்றுக்கு நூறு திரைப்படத்துக்கு முன்னால் சில படங்களில் தலை காட்டியிருந்தார். பார்த்தால் பசி தீரும், பாத காணிக்கை, கண்ணும் கரளும் எனும் மலையாள திரைப்படம், வானம்பாடி, ஆனந்த ஜோதி, மன்னவன் போன்றவை கமல் முன்பு நடித்திருந்த திரைப்படங்கள். நூற்றுக்கு நூறு அந்த வகையில் அவருக்கு எட்டாவது திரைப்படம். நான்கு சுவர்கள், புன்னகை எனும் வேறு இரண்டு தமிழ் படங்களையும் 1971ல் கே.பாலசந்தர் இயக்கினார். பொம்ம பொருஸா எனும் தெலுங்கு படத்தை பாலசந்தர் இயக்கினார். அது தமிழில் வெளியான பூவா தலையா திரைப்படத்தின் தெலுங்கு வடிவம்.

நான்கு சுவர்கள் திரைப்படத்தில் ஜெய்சங்கர், வாணிஸ்ரீ நடித்தனர். வி.எஸ்.ஷர்மா ஸ்க்ரீன் என்டர்டெயின்ட்மென்ட் தயாரிப்பாக, எம்.எஸ்.வி இசையில் வெளியானது. புன்னகை திரைப்படத்தில் ஜெமினி கணேசன், ஜெயந்தி ஆகியோர் நடித்தனர். புன்னகை திரைப்படமும் கே.பாலசந்தருக்கு நல்ல பெயரைப் பெற்றுத் தந்தது.
அதே ஆண்டு மூன்று திரைப்படங்களுக்கு அவர் கதையெழுதினார். அதில் இரண்டு திரைப்படங்கள் இந்தித் திரைப்படங்கள். ஒன்று தெலுங்கு திரைப்படம்.

**தொடரும்....**



# அரசியலில் மட்டுமா! சினிமாவிலும் எது வேண்டுமானாலும் நடக்கலாம்.



## கமல் தயாரிப்பில் ரஜினி நடிப்பாராம்!

சென்னை: நடிகர் ரஜினிகாந்த்தின் அடுத்த படத்தை, நடிகர் கமல்ஹாசன் தயாரிக்கப் போவதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன. ரஜினிகாந்த், நயன்தாரா நடித்துள்ள தர்பார் படம், கடந்த 9 ஆம் தேதி வெளியானது.
தற்போது சிவா இயக்கத்தில் குஷ்பு, மீனா இதில், நடிகர் ரஜினியுடன் குஷ்பு, மீனா, கீர்த்தி சுரேஷ், சூரி, சதீஷ், உட்பட பலர் நடிக்கின்றனர். ரஜினியின் எந்திரன், பேட்ட படங்களைத் தொடர்ந்து சன் பிக்சர்ஸ் இந்தப் படத்தைத் தயாரிக்கிறது. இதற்கு டி.இமான் இசையமைக்கிறார். விவேகா பாடல்கள் எழுதுகிறார். இதன் முதற்கட்ட படப்பிடிப்பு ஐதராபாத் ராமோஜிராவ் பிலிம்சிட்டியில் நடந்தது.



இந்நிலையில் ரஜினிகாந்தின் 168-வது பட தலைப்பு மன்னவன் என்று சமூக வலைத்தளங்களில் ஒரு தலைப்பு வைரலானது.இது தொடர்பான அதிகாரபூர்வ அறிவிப்பு வெளியாகும் என்றும் கூறிவருகின்றனர்.

இதற்கிடையே, ரஜினிகாந்தின் அடுத்த படத்தை லோகேஷ் கனகராஜ் இயக்க இருப்பதாகவும், இதை நடிகர் கமல்ஹாசன் தனது ராஜ்கமல் இண்டர்நேஷனல் மூலம் தயாரிக்க இருப்பதாகவும் லேட்டஸ்ட் செய்திகள் கூறுகின்றன.

லோகேஷ், இப்போது விஜய் நடிக்கும் மாஸ்டர் படத்தை இயக்கி வருகிறார். இவர், கடந்த சில மாதங்களுக்கு முன் கமல்ஹாசன் நடிப்பதற்காக, கதை சொன்னதாகவும் கதையை கேட்ட கமல், இந்தக் கதை ரஜினிக்கு பொருத்தமாக இருக்கும் என்று அவரிடம் கேட்கச் சொன்னதாகவும் கூறப்படுகிறது. கதையை கேட்ட ரஜினிகாந்த் நடிக்க சம்மதித்துவிட்டாராம். இந்நிலையில் இந்தக் கதையை கமல்ஹாசனே தயாரிக்கிறார் என்றும் ஜூன் மாதம் இதற்கான அறிவிப்பு வரலாம் என்றும் செய்திகள் வெளியாகியுள்ளன.



## மிக மிக அவசரம் !!!

ஒரு பெண் அதுவும் ஒரு போலீஸ் ஆன பெண் தனது கடமை நேரத்தில் படும் அவஸ்தையை சொல்லும் சினிமா இது. ஒரு ஏஜீ ஆலயத்திற்கு வருகிறார் என்பதற்காக பொலிசார் வீதி பாதுகாப்பு பணியில் நிறுத்தப்படுகிறார்கள்
ஸ்ரீபிரயங்கா ஒரு பாலத்தின் பாதுகாப்பிற்காக அவரது பொலிஸ் அதிகாரி முத்துராமனால் அனுப்பப்பட்டார். தனது பாலியல் இச்சைக்கு இசைந்து போகாதலால் பழிவாங்க கடும் வெயிலில் நிறுத்துகிறார்.

அவளுக்கு சிறுநீர் கழிக்க வேண்டிய அவசரம் ஏற்படுகிறது. இதைத் தெரிந்து கொண்ட அந்த அதிகாரி கடமையை காட்டி அவள் அதற்கு செல்லவிடாமல் தடுத்து இம்சைப்படுத்தி பழிவாங்குகிறார்.

சிறுநீர் கழிக்க முடியாமல் நடுவீதியில் தவிக்கும் ஒரு பெண்ணின் அவஸ்தை மனதைத் தொடுகிறது. ஸ்ரீ பிரியங்கா அந்த அவஸ்தை யை கண்முன் கொண்டு வருகிறார்.

சிறுநீர் கழிக்க வேண்டிய அவஸ்தையை நாம் எல்லோரும் எப்போதாவது சந்திக்காமல் இருந்திருக்க முடியாது. இங்கு ஒரு பெண் பொது இடத்தில் படும் துன்பம் கண் முன் நிற்கிறது.

ஒரு குறும் படத்திற்கான கரு.
ஆனால் ஒரு சினிமா வாக விரிகிறது
சுரேஷ் காமாட்சி யின் நெறியாள்கையில்.

மசாலா படங்களின்
மத்தியில்
அரிதாக மலர்ந்து
இருக்கிறது.
இன்னும் பார்க்காவிட்டால்
கட்டாயம் தேடி
பார்த்து விடுங்கள்.




நன்றி.
டாக்டர்.கே.முருகானந்தன்





உலகு எங்கும் வலம்வர
தரமான விமானப் பயணத்தற்கு
EurAsian - Tours
Rishi Ganeshamoorthy
Rishi 0174 96 44 965
துரித பண மாற்றுச் சேவை!
VALUTRANS
Tel:02131 73 87 83 Fax: 02131 73 87 84
Further Str. 156
41462 Neuss
info@eurasian-tours.com
LITTLE INDIA வின் மற்றுமொரு சேவை...
Tel: 02131 273 692
இந்தியா– இலங்கை– விசா பெற்றுத்தரப்படும்!


Jasmine Silk House
நேரில் வந்து பாருங்கள்
பட்டுச்சேலை, பஞ்சாபி, குருதார்
மற்றும் சிறுவர்களுக்கான ஆடைகள்
அனைத்தும் வகை வகையாக உண்டு.
HP:0173 1937 325
Tel:02102 844744 'Jasmin Silk House" Fester Str.50- 40882 Ratingen


ASIA BAZAR
Ria Money Transfer
MoneyGram
துரித பண மாற்றுச் சேவை!
VALUTRANS
ஆசிய,ஆபிரிக்கஉணவுவகைகள்
வியாழன் சனிக்கிழமை தோறும்
இலங்கை,இந்திய உடன் மரக்கறிவகைகள்
கடல் உணவுப் பொருட்கள்.இன்னும் பல...
உரிமையாளர்:
பா.கணேஷ்
An der Stadt Mauer 2-4
41061 Mönchengladbach
Tel:02161 208303 Fax:02161-309282


Stuttgart நகரில்...
Pirruntha Silks
தரம்மிக்க தங்க நகைகள் நங்கையர் விரும்பும்
நவீன டிசைன்களில் அமைந்த
சேலைகள் மற்றும் இமிற்ரேசன் நகைகள்
அனைத்திற்கும் நீண்டகாலநம்பிக்கை
மிக்க ஸ்தாபனம்
பிருந்தாஸ்
0170 334 4059
Ludwig str.87a - 70197 Stuttgart Tel: 0711 615 8976


PALAZIO
EVENTS
உங்கள் இல்லத்தின் சகல விதமான மங்கல
வைபவங்களுக்கும், மேடை நிகழ்வுகளுக்கும் ஏற்ற
0-100 மற்றும் 0-700 விருந்தினர்கள் வரை அமரக்கூடிய வாகனத்
தரிப்பிட வசதிகளுடனும் கூடியது.
மேலும் எம்மிடம்....
போட்டோ மற்றும் வீடியோ
த.கோபிநாத்
+ (49) 1525 3961138
Kasinostr. 25 |42103 Wuppertal


SARAVANAA BHAVAN®
WORLD'S NO.1 INDIAN VEGETARIAN RESTAURANT CHAIN
069-97 693 374
info@saravanaabhavan.de
Kaiserstraße 66, 60329 Frankfurt am Main
India Singapore Malaysia Thailand Hong Kong U.A.E. K.S.A. Oman Qatar Bahrain Kuwait U.K. France Germany Australia South Africa Canada U.S.A.


StaR Impex :
Inh :K.Sivasubramaniam
Tel:0231 860 26 96
Double Horse
Nila
AGAM
Aachi
Rabeena
Öffnungszeiten:
Mo-Fr: 10.30-19.30
Sa: 09.30-18.00
STAR IMPEX
Lebensmittel Grosshandel e.K.
Franziusstrasse.150 (TOR 3) DE - 44147 Dortmund
Tel : 0231/8602696 Fax : 0231/8602698
E-mail : Info@star-impex.de Web : www.star-impex.de
FOR SHOPS ONLY